IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are the authorised main agents for
Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman & many more
We accept all major credit cards
Reservation Please call: 02086729111
COLOMBO £170+ Taxes
Head Office:
119,Tooting High street
London, SW17 OSY
bala@skywings.co.uk Mob: 07850876921

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 09 ♦ ISSUE - 187 ♦ FRIDAY 08 FEBRUARY 2013

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

Krishna Fancy & Video
• இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
• பார்ட்டி டெக்கரேசன்
• மணப்பெண் அலங்காரம்
• தென் இந்திய மலர்கள்
• டெய்லரிங், போன்கார்ட்
• பேக்ஸ் – ஜெராக்ஸ்
• விமான டிக்கெட்டு
• ஆடியோ – வீடியோ
• (தமிழ் – மலையாளம்)
• செய்தித்தாள்கள் (தமிழ்–மலையாளம்)
மல்லிகைப் பூ Special Offer 80p Only
Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07725869630

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச்சீட்டுகளை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழ் நிறுவனம்
BRITISH AIRWAYS Preferred Partner
www.flyplaces.co.uk
Flyplaces
Worldwide Travel & Tours
COLOMBO FROM £169 +TAXES
CHENNAI FROM £189 +TAXES
TORONTO FROM £199 +TAXES
EXPRESS VISA SERVICES
இலங்கை,இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவர விசா எடுத்துத்தரப்படும்.
மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள்
We accept all major debit & credit cards
Note: All fares mention above are low season, excluding taxes/ terms & conditions apply.
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
020 8866 3311

A CAMBRIDGE TUTOR
CHEMISTRY & BIOLOGY
KS3 , GCSE, A/S & A LEVELS
(All ExamBoards) 1-2-1 and Small Group
Contact:
Dr. K. Tharani (BmedSci, MBBS)
K. Pragash (BA, Cambridge Medic) (Ex. Tiffinians)
Tel: 07940499852
Email: pragash.cambridge@gmail.com
New Malden & Surrey Areas
Upon request can also providemedical school interview preparation

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750'ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள நிபுணமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

இவ்வருடத்தின் சிறப்புச் சலுகைகள்...
AARTHIHAS
இவ்வருடத்தின் புதிய டிசைன்
பஞ்சாபி, சுடிதார்
மாபெரும் மலிவு விற்பனை
விபரங்களுக்கு அழையுங்கள்...
020 8390 6050
ஒரு முறை வந்து பாருங்கள்!!
58, Tolworth Broadway Tolworth, Surrey, KT6 7HR

ஒசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

C1, B1 & B2 Test

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு	£ 150 .00 மட்டுமே * Including Everything	Certificate only in six days	இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

West London
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

UK COOL
AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

BUILDING WORK
Roofing
Extension

MOVING & DEVILERY



7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

ESOL with Citizenship Test

- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிராஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை

Personal Licence £ 235 *

- (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும்

Tuition classes for 11+, GCSE & A' Level

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Barking

Tel: 020 3239 2187
0740 287 1921

Valentine Day Offer!!

Send your cards & Gifts through
www.klickcouriers.com

PARCELS UPTO 5KG UK OVERNIGHT FOR £7.99* + VAT

GET 10% DISCOUNT ON DOCUMENTS
PROMOCODE
KCDOX13

FOR MORE INFORMATION
CALL CUSTOMER SERVICES ON
0208 099 2891 (24/7)

Parcels upto 2kg to India & Pakistan for £23*

Parcels upto 5kg to USA/ Canada for £26*

Parcels upto 5kg to India & Pakistan for £35*

Parcels upto 2kg to USA/ Canada for £18*

Parcels upto 2kg to Sri Lanka for £30*

OFFER VALID TILL
28.02.2013
*Terms & conditions apply

POS TECHNOLOGY

WE ARE THE APPROVED TOSHIBA RESALER IN SOUTH WEST ENGLAND

BRAND NEW PACKAGE PRICE

TOSHIBA ST-A10 /
TOSHIBA THERMAL PRINTER
ORBIT SCANNER / VFD CUSTOMER DISPLAY
CASH DRAWER / POS PLUS SOFTWARE

OPTIONS - 12" ADVERT SCREEN.....£29
- CCTV LINK BOX TEXT OVER RELAY.....£150
- PICCOLINK OR DATA TERMINAL.....£299

Pos plus software life time licence no extra cost or renewal fee. Software can control the remote view / stock control / multi Offers / advert screen link and more....

176, Merton High Street, South Wimbledon, London, SW19 1AY
020 8540 0359 - 077 456 456 45
Support Line 0845 531 1111

அம்மன் கோயில் விசயம்..??

சமூக விசயங்களில் அக்கறை காட்டுகின்ற ***ஒரு பேப்பர்*** ன் காதிற்கு ஒரு விடயம். ரூற்றிங்ல இயங்கின அம் பாள் ஆலயம் இப்ப குறைடனில நடக்கிறது சனங்களுக்குத் தெரியும் தானே. காசு சேர்த்து காணி, கட்டடத் தோட வாங்கி கொலியஸ்வூட்டுக்கு கோயில் போகப் போறதா சொல்லப் படுகிறது. மே மாதம் கும்பாபிஷே கமாம். ஆனால் அந்த காணிக் கட் டடத்திற்கு காசு சிவயோகம் அறக் கட்டளை நிலையத்தின் பெயரில சேர்க்கப்படுது. சிவயோகம் அறக் கட்டளை தான் கோயிலை நடத்துது. ஆனால் அதனை நடத்துறசீவரட்ணம் ஐயா தன்ரை நாலு பிள்ளைகள், மரு மோன் என்று அஞ்சு பேர்ர பெயரில ஒருபிரைவேட் கொம்பனிசிவயோகம் லிமிட்டெட் என்று தொடங்கி வைச்சி ருக்கிறார் என்டு ஒன்டுக்குள்ள ஒன்டா இருந்தாள் சொல்லிச்சுது பதிவு விபரத்தையும் காட்டிச்சுது.

அந்த பிரைவேட் கொம்பனி பெய ரில சனத்திட்ட வாங்கிற காசில கோயில் வாங்கப்பட இருக்குதாம். சிவயோகம் அறக்கட்டளையிலயும் இரண்டு பிள்ளைகளும் அங்கத்த வரா இருக்கினம். ஆனாலும் நூற் றுக்கு நூறு வீதம் தன்ரை பிள்ளை களின்ட பெயரில தான் கோவில் கட்டடமும் காணியும் வரவேண்டும் என்டு அந்தாள் உறுதியாய் ஒற்றைக் காலில நிற்குதாம். இதுசரியோ? சனத் துக்கு இது தெரிவிக்கப்பட்டதோ?

சோதி அண்ணை தானே இந்த விச யத்தில விசேஷமான ஆள் ஒருக்கா விசாரிச்சுச் சொல்லட்டன். சமூகத் துக்கு நல்லது தானே.

- சிவசுப்ரமணியம்

திருப்பதி வெங்கடாசலபதியை அவமதிக்காதீர்கள்!

'கண்ணா லட்டுத் தின்ன ஆசையா?' என்ற படத்தின் தலைப்பினை மாற் றாவிட்டால், அந்தப்படம் திரையிடப் படும் திரையரங்குகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்வது என அருள் மிகு திருப்பதி பாலாஜி பக்தர்களான நாங்கள் முடிவெடுத்துள்ளோம். இதற் காக நாங்கள் மொட்டை போடுவது என்றும் முடிவெடுத்துள்ளோம்.

- பாலசண்முகம்

லண்டனில் சிறிலங்காவின் சுதந்திரதினவிழா

சிறிலங்காவின் சுதந்திரதினத் துக்கு முதல்நாள் லண்டனிலை பொங்கல் விழா என்ற பெயரில் ஒன்றை நடாத்தி சிறிலங்கா உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை திருப்திப் படுத்தியிருக்கிறார் அம்சாவின் அடி வருடியான ஜீப்பி ஒருவர். ஓசியிலை சாப்பிடலாம் என்று போனவர்களுக்க நாமம் சாத்தப்பட்டுள்ளது. அதுசரி அங்கு பொங்கல் கொடுத்தார்களா அல்லது கிரிபத்தும் கட்டா சம்பலும், கவுங் கொக்கீசும்தான் தந்தார்களா?

- இணுவை கு. ரங்கன்

சென்.கந்தையா சுரேன்...

இவர் யார்? தமிழீழ அரசியல் வியா பாரிகள். தமிழர்கள் என்ன ஆடு, மாடுகளா? அவர்களால் மேய்க்கப் படுவதற்கு, முள்ளிவாய்க்காலில் விழுந்த பிணங்களை காசாக்கி, சுக போகமாக சூட்டும் கோட்டோடும் உலாவருபவர்கள். சென் கந்தையா லேபர் கட்சியின் கைக்கூலி. கடைசி வரை இலங்கைக்கு ஆயுத உதவி செய்து கொண்டிருந்த லேபர் கட் சிக்கு துணையாக நின்று, லண்ட னில் நடந்த எழுச்சி போராட்டங் களை முறியடித்துவிட்டு, அடுத்து தமிழர் பக்கம் முகத்தை காட்சி யுத்த நிறுத்தம் கொண்டு வருவேன் என்று தமிழ் மக்களுக்கு பிலிம் காட்டிய கயவன், துரோகி. இனிமேலும் இவர் களைப் போன்ற சுயநலவாதிகளை பொது வெளியில் பகிஸ்கரிப்போம்.

- வல்லை வளவன்

கந்தையாண்ணை நீங்கள் நல்லவரா.. கெட்டவரா?

கந்தையாண்ணை அத்வானியின் மருமகளுடன் சேர்ந்து லண்டனிலை ஏயர் இந்தியா ஏஜன்ட் ஆகிறதுக்கு 350 ஆயிரம் பவுண் லஞ்சம் குடுத்ததாக செய்தியள் வருகுது. ஏனண்ணை இப் பிடி, முந்தி நாட்டுக்கு அள்ளி அள்ளி குடுத்த ஆள் எல்லோ நீங்கள். வியாபாரம் செய்யத்தான் வேணும். ஆனால் ராகுல் காந்தியை சந்திக்கப்போகிறதாய் சொல்லி ஏன் எங்களை ஏமாத்த வேணும்?

- நடேஸ்வரன்

மாற்றுகருத்தாளர்கள் கப்சிப்..

எதுக்கெடுத்தாலும் கருத்துச் சுதந் திரம், பெண் உரிமை என்டு கத்திற மாற்றுக்கருத்துமாணிக்கங்கள்ரிசானா விடயத்திலை மூச்சையும் காட்டேல் லையாம். அந்தப் பிள்ளையின்ரை தலையை வெட்டுறதை சவுதி அரே பியா தொலைக்காட்சியில் காட்டினா லும், அதைப்பற்றி 'நோ கொமன்ற்ஸ்' என்று சொல்லிட்டினமாம் ஏனெண்டா தமிழ் மொழி சமூகங்களின்ரை ஒற்று மையை நிலை நாட்டுகினமாம்.

- கயல்விழி

இந்த முறை லண்டனிலையாம்...!

வருசம் வருசம் நடக்கிற புலி எதிர்ப்பாளர்களின் கூட்டம், அதா னுங்கோ இலக்கிய சந்திப்பு இந்த முறை லண்டனிலை நடக்க இருக்கு தாம். விசாவுள்ள கொஞ்ச ஆக்கள் யாழ்ப்பாணத்திலை நடத்தோணும் எண்டு நிண்டவையளாம். அப்பத் தான் மகிந்தவைகுளிரப்பண்ணலாம் எண்டு அட்வைஸ் குடுத்தவையாம் ஆனால் மற்றாக்கள் மாட்டம் எண் டிட்டினமாம்.

- பத்மநாதன்

சிறிதரனுக்கு எதிரான சதி

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலை ஒரு எப்பன் எண்டாலும் துணிவாய் கதைக்கிற எம்.பி எண்டால் கண்ணை மூடிக்கொண்டு சொல்லலாம் சிறி தரன் எண்டு அந்தாளின்ரை வாயை அடைக்கோணும் எண்டு மகிந்தவின் கையாளுகள் நாண்டு கொண்டு நிக்குதுகள். ஈ.பி.டி.பியின் இந்த கூத்துக்கு முன்னாள் புலி ஆதர வாளர்கள் ருசாங்கன், கருணாகரன் போன்ற ஊடகவியலாளர்களும் துணை நிக்கிறதுதான் வேதனை.

- கௌரி

குதிரை மாதிரி கனைக்கப்போறம்

மாட்டிறைச்சி என்று சொல்லி குதிரை இறைச்சியை பிரெஞ்சு நிறு வனம் விற்றதாக உறுதி செய்யப் பட்டுள்ளதாம். குதிரைகளுக்கு கொடுக் கும் மருந்துவகை ஒன்று இந்த இறை ச்சியில் இருக்கிறதாகவும் சொல் கிறார்கள். இந்த உணவை உண்பவர் களுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்படும் எண்டும் சொல்கிறார்கள்.

- சந்திரா

கமலின் விஸ்வரூபம்

சர்வதேச தரத்தில் படமெடுக் கிறோம் என்று பலபேர் ஏமாற்றி வந் தார்கள். கமலின் இயக்கத்திலும் நடிப்பிலும் வெளிவந்திருக்கிற விஸ் வரூபம் உண்மையில் கொலிவூட் படங்கள் போல் எடுக்கப்பட்டுள்ளது. Auro-5 சவுண்ட் இபெக்ற்ம் படத்திற்கு வலிமை சேர்க்கிறது

- தேவநாதன்

ஒரு பேப்பர் தொடர்பான
உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314

தலைவர் வச்ச 'செக்'

அமெரிக்கா மார்ச் மாதம் கொண்டுவர இருக்கும் தீர்மானம் ஏதோ சிறீ லங்காவை தூக்கில மாட்டிவிடுகிற தீர்மானம் என்பதுபோல் பலர் எண்ணு வதாகத் தெரிகிறது. உண்மை அதுவல்ல. அது பிராந்திய பூகோள நலன்களை மையமாக வைத்து நடக்கிற ஒரு அரசியல் பகடையாட்டம். மறுவளமாகச் சொன்னால் தமிழர் நலன்களை எந்த வகையிலும் மையப்படுத்தாத தமது நலன்களை மையமாகக் கொண்ட அரசுகளின் இராஜதந்திர நகர்வு அது.

உண்மையில் எம்மை அழித்தது சிறீலங்கா அல்ல. இந்தியாவும் அல்ல. மேற் குலகம்தான் - குறிப்பாக அமெரிக்கா.

எம்மை 2001 இலிருந்து படிப்படியாக சுற்றி வளைத்த அமெரிக்கா படிப் படியாக எம்மை அழித்து 2006 கடைசியில் வன்னி நிலப்பரப்பிற்குள் எமது போராட்டம் சுருங்கியதும் இந்தியாவிடமும் சிறீலங்காவிடமும் எம்மை தள்ளி விட்டது. அவர்கள் தம்பங்கிற்கு மேற்குலகத்தால் 75 வீதம் அழிக்கப்பட்டு சேடம் இழுத்துக்கொண்டிருந்த எமது போராட்டத்தை நடக்கப்போகிற கூத்து விளங் காமல் வீராவேசம் கொண்டு அடிச்சதுதான் நடந்த வரலாறு. அதை விட இதை தெளிவாகச்சொன்னால் தலைவர் பிரபாகரன் அடிக்க விட்டார் என்பதுதான் சரி.

தமிழர்களை அழிக்க ஒன்றுக்கொன்று பகைமுரண் நாடுகள் கைகோர்த்த வர லாறு அது. அன்றைய உலக ஒழுங்கும் பிராந்திய பூகோள நலன்களும் எம்மை அழிப்பதனூடாக ஒரு புள்ளியில் சந்தித்தன. அவைக்கு அது தேவையாகவும் இருந்தன.

தலைவர் 2001 புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான உடனேயே மேற்குலகத்தின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு காய் நகர்த்தினார். தலைவர் பின்வைக்கும் ஒவ்வொரு காலடியும் சிறீலங்கா அரசையோ இராணுவத் தையோ யோசித்து வைக்கவில்லை. அமெரிக்காவை மையப்படுத்தியே பின்னகர்ந்தார்.

அழிவு உறுதியான பின் எப்படி சாத்தியமான ஒரு தளத்தில் இந்த போராட் டத்தை முடிவுக்கு கொண்டுவரலாம் என்று யோசித்தபடியே அவரது நகர்வு இருந்தது. ஒரு கட்டத்தில் தலைவர் வெளிப்படையாகவே சில முக்கிய போராளிகளுக்கு கூறியிருக்கிறார். ' நாம் சிங்களத்துடன் மோதவில்லை. சிங்கள படையினர் வடிவில் உள்ள மேற்குலகத்திடம் மோதிக்கொண்டிருக் கிறோம். எனவே நாங்கள் அடிக்கிற அடி இவங்களுக்கு வலிக்கிறதை விட அங்க தான் கூட வலிக்கும்' என்று..

எனவே தூரநோக்கில் சிந்தித்து பின்வாங்க முடிவெடுத்தார். மேற்குல கத்தை இந்தியாவை எல்லாம் அம்பலப்படுத்தி சிறீலங்காவிடம் இருந்து எமது மக்கள் விடுதலைக்கு சாத்தியமான ஒரு புள்ளியை தெரிவு செய்தார். அழித்தவர்களே ஒரு அங்கீகாரத்தை தருவதற்கான ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கும் வகையில் - யாருமே யோசிக்க முடியாத ஒரு கோணத்தில் - தளத்தில் சிந்தித்து 'முள்ளிவாய்க்காலை' தெரிவுசெய்கிறார்.

அமெரிக்காவால் விலைக்கு வேண்டப்பட்டு சிறீலங்காவிற்கு விற்கப்பட்ட கே.பி.யை எல்லாம் தெரிந்திருந்தும் ஒரு பொறுப்பை கொடுத்து பேச விட்டதி லிருந்து தலைவர் நகர்த்திய நகர்வுகள் இன்று அமெரிக்கா உட்பட இதில் மறைமுகமாக ஈடுபட்ட பல இராஜதந்திரிகளை அதிரச் செய்து கொண்டிருக் கிறது. பிரபாகரனுக்கு தாம் விரித்த வலையில், பிரபாகரன் விழுவது போல் விழுந்துதம்மை வீழ்த்திவிட்டதை இன்று உணர்ந்திருகிறார்கள். ஒரு ஒப்பற்ற போராளியாகவும் உலகின் தலைசிறந்த இராஜதந்திரியாகவும் தலைவர் நந்திக்கடலினோரம் அன்று நின்றது வரலாற்றில் தமிழீழம் விடுதலையடை யும்போது புரியும்.

இப்போது விடயத்திற்கு வருவோம்.

சரிசேர்ந்து அழித்த அமெரிக்கா எப்படி சிறீலங்காவைபணியச்செய்யும்? என வே நடப்பது ஒரு நாடகம். ஆனால் அந்த நாடகம் சிறீலங்காவிற்கு ஒரு வகை யில் எதிரானதுதான். ஆனால் முழுமையானதல்ல.. உண்மை என்னவென் றால் அன்று தமிழர்தேசம் நின்று கொண்டிருந்த உலக ஒழுங்கும் பிராந்திய பூகோள நலன்களும் தற்போது சிங்களத்தை குறிவைக்கும் சூழலாக மாறி யிருக்கிறது.

சிங்களம் எடுக்கும் முடிவில்தான் அதன் எதிர்காலம் இருக்கிறது. அமெரிக் காவிற்கு பணிந்தால், மார்ச் மாதம் ஒன்றும் நடக்காது. ஆனால் இருந்தாலும் சிங்களம் நாறும். ஏனென்றால் தலைவர் வச்ச 'செக்' அது. எப்படி என்பதை பிறிதொரு தருணத்தில் பார்ப்போம்.

- கிருஸ்ணா

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400

➡ESOL with Citizenship
- British Passport/ Naturalisation
- Indefinite Leave to Remain

➡International ESOL Diploma(A1,A2,B1,B2,C1,C2)
- Student Visa / Extension Test
- Spouse Visa / Extension Test
- Work Permit / Extension Test

- Courses from £200
- Successfully trained over 35,000 students
- Certificates within 20 days
- Multilingual staff
- City & Guilds approved centre

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay,Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 08, 2013, ISSUE 187

பொதுப் பிரகடனம் அவசியம்தானா?

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில்,ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புகள் இணைந்து செயற்படுவதனையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். இவ்விதமான ஒருங்கிணைந்த செயற்பாடுகள், தமிழ் மக்களின் அரசியற் பலத்தினை அதிகரிக்கும், தற்போது காணப்படும் குழப்பங் களை களைந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர்கள் நம்புவதில் நியாயமிருக்கிறது. ஈழத்தமிழர்களது அரசியல் வரலாற்றில், பல தடவைகள் இவ்வாறான ஒருங்கிணைவு ஏற்பட்ட போதிலும் அவை அதிக காலம் நீடிக்கவில்லை. இதனை நன்கறிந்த உலகத்தமிழர் பேரவையினர் தமிழ் அமைப்பு களை இணைத்து பொதுப்பிரகடனம் ஒன்றை வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அதன் முன்னோடியாக தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டம் கடந்த மாத இறுதியில் பெர்லின் நகரில் நடைபெற்றிருக்கிறது.

தமிழ் அமைப்புகளிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றபோதும், அடிப்படை அரசியல் கொள்கைகள் விடயத்தில், அவர்களிடையே குறிப்பிட்டுச் சொல்லும் படியான வேறுபாடுகளை காணமுடிவதில்லை. தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற அடிப்படை கோட்பாடுகள் விடயத்தையே தாயகத்திலிருந்து செயற் படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முதற் கொண்டு புலம்பெயர் நாடுகளில் செயற்படும் அனைத்து அமைப்புகளும் வலி யுறுத்துகின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அவ்வப்போது தமது நிலைப்பாட்டை மாற்றினாலும், மக்களிடம் வாக்குக் கோரும்போது,மேற்படி அரசியல் அபிலா சைகள் விடயத்தில் பிறள்வினைக் காட்டுவதில்லை.

இத்தகைய பின்புலத்தில்தான் உலகத்தமிழர் பேரவையின் பிரகடனம் பற்றிய ஐயம் தோன்றுகிறது. ஈழத் தமிழ் மக்களின் அண்மைய அரசியல் வரலாற் றில் இரண்டு பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்று வட்டுக்கோட்டைத் தீர் மானம், மற்றையது திம்பு பேச்சுவார்த்தையின் பின்னர் தமிழ் அமைப்புகள் இணைந்து வெளியிடப்பட்ட அரசியல் அபிலாசைகள் தொடர்பான தீர்மானம். இவ்விரு தீர்மானங்களை அடிப்படையாக வைத்தே தமிழ் அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

இப்போது புதிதாக எதற்கு ஒரு தீர்மானம் தேவைப்படுகிறது? அத்தகைய தீர்மானத்தை மேற்கு நாடுகளின் முகவர் அமைப்புகள் ஏன் வலியுறுத்த வேண்டும்? போன்ற கேள்விகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளிக்க வேண்டும்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

ஒரு பேப்பருடன் சேர்ந்து வேலை செய்யிறதிலை விருப்பம் உள்ளவை எங்களை தொடர்புகொள்ளலாம் எண்டு சொல்லி மாசக்கணக்கிலை ஆகுது, ஒண்டிரண்டு பேரைத்தவிர மற்றாக்கள் அதை கண்டுகொண்டதாய் தெரியேல்லை. முள்ளிவாயக்காலுக்கு பிறகு எல்லாரும் சோர்ந்திட்டினம் எண்டது உண்மைதான், ஆனால் உணர்வு மரித்த ஆட்களாய் போயிட்டினம் எண்டதை நினைக்க கவலையாய் இருக்கு.

கதை, கவிதை அனுப்பிறவையின்ரை கவனத்துக்கு ஒண்டை சொல்லோணும். உங்கடை பிரயாசையை மெச்சிறம், ஆனால் அதுகள் கொஞ்சமாக ஆவது கதை, கவிதை போலை இருக்கோணும் எண்டதை நீங்கள் கவனிக்கோணும். நாங்கள் இதுகளிலை ஒண்டும் பெரிய விண்ணன்கள் இல்லைத்தான், நல்ல கதை, கவிதைகளை வாசிச்ச பழக்கத்திலைதான் இதைச் சொல்லிறம்.

***ஒரு பேப்பர்** ல கிரமமாய் எழுதிற ஆட்கள் வேறை ஊடகங்களிலை எழுதக்கூடாது எண்டு நாங்கள் ஒருக்காலும் சொல்லமாட்டம். வேறை ஊடகங்களிலை தாராளமாய் எழுதுங்கோ. ஆனால் சனத்துக்கு எரிச்சல் வாறமாதிரி எழுதினியள் எண்டால், இவையளை எல்லாம் ஏன் வைச்சிருக்கிறியள் எண்டு அவையள் எங்களுக்கு ஆக்கினை கொடுக்கினம். நாங்களும் உங்களிட்டையிருந்து விலகி நிக்க வேண்டியிருக்கும்.*

*நாங்கள் பிரசுரிக்கிற கட்டுரையளிலை பலதும **ஒரு பேப்பர்** க்கு எண்டு எழுதப்பட்டவை. வேறு ஊடகங்களிலிருந்து எடுக்கப்படுபவற்றின் மூலம் எது என்பதை நாங்கள் அறியத் தருகிறோம். ஆனால் எங்களுக்கு எண்டு எழுதப்பட்ட கட்டுரையளை அப்பிடியே எடுத்து நன்றி: தங்கடை ஊடகம் எண்டு போடுகிற ஆக்களை என்ன செய்யிறது? அதெண்டாலும் பரவாயில்லை ஏதோ பிழைச்சிட்டு போகட்டும் எண்டு விட்டுடலாம். ஆகக்குறைஞ்சது கட்டுரையிலை இருக்கிற எழுத்துப்பிழைகளை எண்டாலும் திருத்துங்கோ. இப்பிடி ஈயடிச்சான் மாதிரி வெட்டி ஒட்டலுகளை செய்யாதேங்கோ.*

***ஒரு பேப்பர்** க்கு என அனுப்பப்படும் ஆக்கங்கள் வேறை ஊடகத்திற்கும் அனுப்பப்பட்டால் அதை எங்களுக்கும் சொல்லுங்கோ. உங்கடை ஆக்கங்கள் எல்லா ஊடகத்திலையும் வரவேணும் எண்டு நீங்கள் ஆசைபடுகிறது எங்களுக்கு விளங்குது. ஆனால் இப்பிடி நோட்டிஸ் குடுக்கிற மாதிரி விநியோகிக்கப்படுகிற ஆக்கங்களை பிரசுரிக்கிறதிலை எங்களுக்கு விருப்பமில்லை பாருங்கோ. இந்த பேப்பரிலை வருகிற நிஸ்தார் என்பவர் எழுதிய கட்டுரை ஏற்கனவே வேறை ஒரு இணையதளத்திலை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இது கடைசி நேரத்திலைதான் தெரிய வந்ததாலை ஒண்டும் செய்ய முடியேல்லை அதை பிரசுரிக்கிறம். இனி இப்பிடியான ஆக்கங்களை பிரசுரிக்க மாட்டோம் என்பதை பணிவாக அறியத்தருகிறோம்.*

வேறை என்ன?

அடுத்த பேப்பரிலை சந்திப்பம்...

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

The writing on the wall

Editorial Tamil Guardian

The Sri Lankan president's public rejection of Tamil autonomy or devolution of powers during his Independence Day address this week, should come as no surprise. Despite the international community's periodic calls on Sri Lanka not to squander its military victory, but use it to negotiate a lasting political settlement, the Sri Lankan state has stubbornly continued to do quite the reverse. Although some international observers remain bewildered by Sri Lanka's stance, in truth key political figures of successive Sri Lankan governments have never shielded away from making their fundamental rejection of Tamil political power or autonomy abundantly clear. The writing was always on the wall, it is time that those who truly want to see stability and peace, read it.

When the international community chose to support Sri Lanka's military offensive against the Liberation Tigers of Tamil Eelam in 2008, it was not ignorant of the destruction that was to come. However, adamant that it was the LTTE that was the true barrier to peace and stability on the island, heavy civilian casualties were said to be a price worth paying in order to defeat 'terrorism'. Even as the fighting progressed and irrefutable evidence of intentional targeting of civilians came to light, the pursuit of the end goal was still considered to justify turning a blind eye to Sri Lanka's means. For it was argued that following a military victory, the government would reach out to the Tamils and work towards a political settlement that acknowledged their legitimate aspirations. This analysis of the conflict was mistaken.

Almost four years on, despite the military defeat of the LTTE, the absence of armed conflict, the abundance of international economic and developmental aid, a government that enjoys overwhelming support, and a major Tamil party that has proved itself only too willing to engage in dead-end dialogue, the elusive political solution to the conflict is no closer. American and Indian calls on the Sri Lankan government to engage in talks with the TNA and work towards a lasting political solution, have proved futile, and international pressure has only served to further unmask the Sri Lankan state's unwillingness to share power in any meaningful way with the Tamils.

> In this context, continuing to "encourage the TNA and [the Sri Lankan] government to make serious progress" as the British Foreign Office Minister Alistair Burt did this week, is hollow and absurd.

Routinely making a mockery of several international figures, the Sri Lankan government has spun its rhetoric of reconciliation and negotiations to visiting diplomats, whilst simultaneously, publicly asserting that it has no intention to devolve power or see the implementation of the paltry 13th Amendment. No sooner had the Indian External Affairs Secretary Salman Khurshid left than Sri Lanka's Minister of Agriculture Udaya Gammanpila rejected devolution and the Defence Secretary Gotabhaya Rajapaksa embarked on his campaign to abolish the 13th Amendment. The support his campaign enjoyed was widespread, from Buddhist clergy to a body of professionals. Whilst the failure of the opposition UNP, civic society institutions or the Sinhala media to meaningfully challenge it, is particularly poignant. Similarly, Rajapaksa's remarks this week remain unchallenged by the Sinhala masses. This silence or apathy cannot be attributed to fear. As recent large-scale Sinhala condemnation of the impeachment of the Chief Justice has proven, an authoritarian and repressive Rajapaksa regime does not prevent a Sinhala outcry when the sentiment is present. In short the government is able to defiantly pursue its restructuring of the North-East and its defiance of international calls to negotiate, because its rejection of Tamil political power and autonomy enjoys tangible support from the overwhelming majority of the Sinhala nation.

A victory bought at an unthinkable and catastrophic human cost has, far from yielding the desired result, been exploited by the Sri Lankan state to consolidate its vision of Sinhala Buddhist hegemony – and it shows no signs of relenting. What was long purported to bring equality, peace and security, has exposed the Tamil nation and its traditional homeland to unchecked Sinhalisation, militarisation and the forcible suppression of Tamil political aspirations. Through the subjugation of the Tamil identity and the forced dilution of the cultural and ethnic make-up of the North-East, the Sri Lankan state is working systematically to construct a North-East that would undermine the Tamil nation's right to self-determination and claim the area as its homeland.

> Its rejection of Tamil political power and autonomy enjoys tangible support from the overwhelming majority of the Sinhala nation.

In this context, continuing to "encourage the TNA and [the Sri Lankan] government to make serious progress" as the British Foreign Office Minister Alistair Burt did this week, is hollow and absurd. These are not the deeds of a government serious about equal rights, let alone devolution or autonomy. It is high time that tacit encouragement and closed door diplomacy be replaced with decisive action and tangible repercussions.

காஷ்மீர் பெண்கள் பாடத்தடை: ரஹ்மான், நாகூர் ஹனியாவை என்ன செய்வது ?

பெண்கள் மேடையில் பாடுவது இசுலாத்துக்கு விரோதமானது என்று சுமி காஷ்மீரில் மூன்று பள்ளிப் பெண்கள் நடத்தி வந்த 'பெண்கள் இசைக் குழு'வுக்கு எதிராகப் பத்வா பிறப்பித்திருக்கிறார் காஷ்மீரின் தலைமை மதகுரு பஷீருத்தீன் அகமது.

சிறிநகரில் நடந்த ஒரு இசை விழாவில், 'ப்ரகாஷ்' (காலை ஒளி) என்ற தங்களது இசைக்குழுவின் சார்பில் நிகழ்ச்சி நடத்தினார்கள் இந்தப் பெண்கள். உடனே இணையத்தில் இவர்களைப் பற்றிய கேவலமான விமர்சனங்கள் தொடங்கின.

'இசை இஸ்லாத்துக்கு விரோதமானது, பெண்கள் பாடுவது இசுலாத்துக்கு விரோதமானது, பெண்கள் வீட்டில் வேண்டுமானால் பாடலாம், மேடையில் பாடுவது இஸ்லாத்துக்கு விரோதமானது' என்று இதற்கு விதவிதமான வியாக்கியானங்கள் தரப் பட்டன. "இந்த தேவடிகளை டில்லியில் செய்த மாதிரி செய்யணும்" என்பன போன்ற அநாகரிக மான ஏச்சுகள் வரையில் விதவிதமான நச்சு அம்புகள் இணையத்தில் இந்த சிறுமிகளுக்கு எதிராக எய்யப்பட்டன. வளர்ப்பு சரியில்லை என்று இவர்களது பெற்றோரை சிலர் வசை பாடினார்கள்.

'ஆண்களுக்கு எதிரில் இளம்பெண்கள் பர்தா அணியாமல் தோன்றினால், மனித ஆசைகளை கட்டுக்குள் வைக்க முடியுமா? நீங்கள் இதை சுதந்திரம் என்று சொல்கிறீர்களா?' என்று தொலைக் காட்சியில் கேள்வி எழுப்பினார் காஷ்மீரின் தலைமை மதகுரு.

ஆயிஷா ஆந்த்ரபியின் தலைமையிலான 'துக்காதர்ன் ஏ மிலாத்' என்ற இசுலாமிய தீவிரவாத பெண்கள் அமைப்பு, இந்த மாணவிகளை சமூகப்புறக் கணிப்பு செய்வதாக அறிவித்தது. இத்தாக்குதல்களைக் கண்டு பீதியடைந்த அந்த மாணவிகள் உடனே தலைமறைவானார்கள். ஏனென்றால், இங்கே காதலை மறுத்தால் மூஞ்சியில் அசிட் ஊற்றும் காதலர்கள் போல, பர்தாவை மறுக்கும் பெண்கள் மீது அசிட் ஊற்றி புகழ்பெற்ற அமைப்புதான் ஆந்த்ரபியின் அமைப்பு. இனிமேல் அந்தப் பெண்கள் அங்கே வாழ்வது கடினம். நோமா நசீர், ஃபரா தீபா, அனீகா கலீத் என்ற இந்த மூன்று பத்தாம் வகுப்பு மாணவிகளும் இசைக்குழுவைக் கலைத்து விட்டதாக நேற்று இணையத்தில் அறிவித்து விட்டார்களாம்.

முதல்வர் பரூக் அப்துல்லாவும், பி.டி.பி தலைவரை மகபூபா மப்தியும் இப்பெண்களின் உரிமை பறிக்கப் படுவதை ஒப்புக்கு கண்டித்திருக்கின்றனர். வீட்டில் கேபிள் டிவியில் எல்லா கேவலமான சானல்களையும் பார்த்துக் கொண்டு, இந்த பள்ளிப் பெண்களின் உரிமையைப் பறிப்பதா என்று ஒரே ஒரு பேராசிரியை மட்டும் மதவெறியர்களின் முரண் பாட்டை சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆனால் இப்படி ஒரு கட்டப்பஞ்சாயத்து பத்வா பிறப்பிக்கப் பட்டிருப் பதற்கு எதிராக அங்கே ஒரு கிரிமினல் வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை. அறிவுத்துறையினரோ வாய்திறக்கவே அஞ்சுகிறார்கள். ஒரு புறம் அரச பயங்கரவாதம், மறுபுறம் மதவெறி பயங்கரவாதம் இரண்டுக்கும் இடையில் சிக்கித் தவிக்கிறார்கள் காஷ்மீர் மக்கள். பாகிஸ்தான் மக்கள் எதிர்கொண்டிருப்பதும் இத்தகைய நிலைமை தான்.

'மலாலா படித்தாள் என்பதற்காக அவளைச் சுட வில்லை. அவள் மதச்சார்பின்மையைப் பிரச்சாரம் செய்தாள். அதனால்தான் சுட்டோம். அதுவும் கூட எங்கள் விருப்பம் அல்ல. இஸ்லாம் எங்களுக்கு விதித்திருக்கும் கடமை' என்று மலாலாவைச் சுட்ட தலிபான் அமைப்பினர் குர் ஆனிலிருந்து மேற் கோள் காட்டி விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

பாடலாமா கூடாதா, படிக்கலாமா கூடாதா, எப்படி உட்கார வேண்டும், எப்படி எழுந்திருக்கவேண்டும் என்று மனிதர்களுக்கு உத்தரவிடும் சாட்டைக் குச்சியாகவே மதத்தை சித்தரிக்கிறார்கள் இந்து, இசுலாமிய மதவாதிகள். மனுதருமம் என்பது திரிசூலம் என்றால், ஷரியத் என்பது வாள். நாம் மதிப்பளிக்க வேண்டியது மக்களின் இறை நம்பிக் கைக்குத் தானேயொழிய மதச்சட்டங்களுக்கு அல்ல.

பார்ப்பன மதத்துக்கு எதிரான சித்தர் மரபைப் போல, கடுங்கோட்பாட்டு இஸ்லாமுக்கு இணையான சூஃபி மரபொன்று இஸ்லாத்தில் இருக்கிறது. சூஃபி இசுலாம் மரபு, இசையுடன் இணைந்தது. அதுதான் உலகமுழுதும் உள்ள இஸ்லாமிய மக்களின் இறை நம்பிக்கையுடன் கலந்திருப்பது. முக்கிய மாக காஷ்மீரில் செல்வாக்கு செலுத்தியது சூஃபி மரபு என்பதனால்தான், இத்தனை ஆண்டுகளாக இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களின் கடுமை யான முயற்சிக்குப் பின்னரும் அங்கே பர்தாவைத் திணிக்க முடியவில்லை.

இந்த மரபை ஒழிப்பதுதான் வகாபி இஸ்லாமிய தீவிரவாதிகளின் நோக்கம்? மலாலாவை சுட்ட தலிபான்களின் நோக்கம். தமிழகத்தின் டி.என்.டி.ஜே உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகளின் நோக்கம். காஷ்மீர் பெண்கள் ஸ்ரீநகரில் பாடிய பல பாடல்கள், சூஃபி ஞானி புல்லே ஷாவின் பாடல்கள் என்கிறார் அந்த இசைக்குழுவின் இயக்குநர் அத்நான் மாட்டூ.

'மசூதியை இடி, கோவிலை இடி, எதை வேண்டுமானாலும் இடி, ஆனால் மனித இதயத்தை இடித்து விடாதே, அங்கேதான் இறைவன் குடியிருக்கிறான்' என்று பாடியவர் பாபா புல்லே ஷா.

சூஃபி ஞானிகளின் பாடல்களுக்கும் தமிழகத்தின் சித்தர் பாடல்களுக்கும் இடையிலான ஒற்றுமை அதிசயிக்கத்தக்கது.

'நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே / சுற்றி வந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா / நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள் இருக்கையில் / சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ' என்று பாடிய சித்தர் மரபையும் பாபா புல்லே ஷாவின் இந்தப் பாடலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மத உணர்வுக்கும் மதவெறிக்கும் இடையிலான வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

நன்றி: வினவு

Another US Resolution on Sri Lanka: The Road to Nowhere?

By: Gibson Bateman

So it looks like the US will bring another resolution on Sri Lanka at the next session of the UN's Human Rights Council (HRC) in Geneva this March. Quite frankly – I am shocked.

US foreign policy as it relates to Sri Lanka has been confusing and is replete with complications and contradictions.

One can't help but wonder: Where is all of this heading? Is this a road to nowhere?

I really wish I knew. But at this point, I'm not sure that anybody does.

If the US goes ahead with another (weak) resolution, what would be the point? It would accomplish nothing. And what does that mean for US foreign policy in Sri Lanka, or – more broadly – what might that mean for American foreign policy in the region?

The US didn't seem to be that concerned about human rights here when people were being slaughtered in 2009. Make no mistake about it: Washington knew what was happening. As a friend of mine (who is well-versed on what actually transpired) told me, "Nothing that occurred in 2009 happened suddenly. People had to have seen it coming."

I suppose another resolution on Sri Lanka at the HRC would be better than nothing. At least we would know that diplomatic pressure won't fade away entirely. Nonetheless, I'm still left wondering if any of it matters. If the time for tougher, stronger action has not yet come, when would it ever? Is the US really going to aim for another light resolution and pretend that it will change the regime's behavior?

It won't. Another weak resolution won't mean anything to anyone—except the regime in power. It will simply mean they're still winning.

Which leads to another question: Would the US really be pushing for another resolution if the Chief Justice had not been impeached?

It's an interesting counterfactual to consider. Counterfactuals can be particularly thought-provoking because nobody knows what would have happened. Maybe the impeachment saga crossed a line that made inaction or policy inertia (at least as it relates to human rights) impossible. I suspect that it did.

As far as I can tell, President Obama has no Syria policy and well over 60,000 people have been killed there. And make no mistake: the rebels, a variegated group – to say the least – are not saints. And then in Mali, the French are leading the way. The US is providing intelligence. That's it. No boots on the ground. It's one thing for the US to "lead from behind" in Libya; France's establishment of a more muscular foreign policy in North Africa is another issue altogether.

I'm not suggesting that the US should be intervening in either place, but the conflicts in Syria and Mali are arguably of much greater strategic interest to the US than Sri Lanka. And yet it looks like Washington is prepared to spend diplomatic resources again on a small island nation, albeit only in the form of another watered-down resolution which will provide no impetus for change.

> If Washington really is concerned, Obama should prove it by making diplomatic isolation a reality for the regime in Colombo. To put it more bluntly, when it comes to human rights in Sri Lanka, Washington should "go big or go home."

On the other hand, a meaningful resolution will require a lot more work. Is it possible to get a meaningful resolution through the HRC this time around? More importantly, is that something the US really wants?

The Government of Sri Lanka (GoSL) is blatantly lying to people about its implementation of the LLRC recommendations. Groundviews recently published something that made this very clear.[1] Deception with this regime isn't sporadic; it's systematic because the GoSL can't afford to be candid about the current state of affairs.

It's very clear that Barack Obama wants his legacy to lie in sweeping domestic changes. He wants to get out of protracted wars and avoid diving into another conflict like Syria or Mali. And it looks like he's going to do that. His nominees for State and Defense are both men who will be reluctant to use military force abroad. Obama likes his drones – in spite of the "collateral damage" to civilians and his Nobel Peace Prize – but he fundamentally believes in using American power in a more limited way. Barack Obama is not yet a champion of human rights overseas; he probably never will be.

I'm really tired of reading about how the United States government is concerned about developments in Sri Lanka. If Washington really is concerned, Obama should prove it by making diplomatic isolation a reality for the regime in Colombo. To put it more bluntly, when it comes to human rights in Sri Lanka, Washington should "go big or go home." Things are bad here and getting worse.

Sri Lankans who are not happy with recent governance trends have a right to know who their friends really are.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

பயண விசா மோசடியில் தொடங்கி நற்பெயர் திருட்டு வரை தொடரும் மோசடிகள்

மௌலி
(ஒரு பேப்பருக்காக)

பிரித்தானிய தமிழர் பேரவை தன்னை Tamils Forum (BTF) என பதிவு செய்து இயங்குகின்றது. இப்பெயரை ஒத்ததாக BTF Tamils forum என்ற அமைப்பை, உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனும், கொங்கொங் குகன் என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை குகேந்திரன் என்பவரும் பதிவு செய்துள்ளார்கள். இவர்களின் இந்த 'மோசடி நடவடிக்கை' என்னை இக் கட்டுரையை எழுதத் தூண்டியது .

இன்று உன்னுடன் சேர்ந்து திருடுபவன் நாளை உன்னையோ உன் உறவையோ திருடுவான் என்ற அடிப்படையில் தான் மோசடி என்பது சமூக விரோதச் செயல் என நாகரீக உலகம் ஏற்றுக் கொள்கின்றது. இது தான் உலகில் உள்ள சமூக விதியாக இருக்கும் என நான் கருதுகின்றேன். இப்படியான சமூக விரோதச் செயல்களை நாம் கண்டிக்க தவறுவோமாயின் இது பாரிய சமூக சீரழிவை உருவாக்கும். எமது ஊடகங்களும் எழுத்தாளர்களும் இதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு இது விளங்க வில்லையோ அல்லது அவர்களும் மோசடியின் பங்காளர்களா என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். ஒரு அமைப்பினை உருவாக்கவோ, இணைய தளத்தினை உருவாக்கவோ, விமர்சிக்கவோ எவருக்கும் உரிமை இருக்கின்றது. இருப்பினும் இவை ஏதாவது ஒரு விதி முறைகளுக்கு உள்ளானதாக இருக்கவேண்டும். சரி விசயத்துக்கு வருவோம்..

lttmediagroup@googlemail.com என்ற மின் அஞ்சல்முகவரியிலிருந்து21.07.2009அன்றுஎனக்கு ஒரு மின் அஞ்சல் வந்திருந்தது . அதில் LTTE என்பதில் இருந்த E எழுத்து இல்லாமல் இருந்தது. கூகிளில் தேடிப் பாருங்கள் அதை அனுப்பியவர்கள் யாரென்று தெரியவரும். என்ன அனுப்பினார்கள் என்றும் தெரியவரும். இது முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின் வந்த முதலாவது மோசடி முயற்சி. அதன் பின் உலகெங்கும் பரவிய 'பொங்கு தமிழ்' என்ற நிகழ்ச்சியின் பேரால் ஒரு இணையம் ஆரம்பிக்கப்பட்டது. மிகத் திட்டமிட்ட வகையில் செய்யப்பட்ட 'நற்பெயர் (goodwill) திருட்டு'. இதனைத் தொடர்ந்து karuppu, sangathie , pathivu போன்ற இணையங்களும் என ஒரு இரு எழுத்துக்களை மாத்தி மக்களை மடையர்களாக்கும் மோசடிகள் தொடர்ந்தன.

இந்த மோசடி புத்தி, விசா மாத்தி ஆரம்பமான பயணத்தின் தொடர்ச்சியா? அல்லது தலை மறைவுபோராட்ட செயல்பாட்டில்கற்றுக்கொண்டசித்து விளையாட்டின் தொடர்ச்சியா? என்று தெளிவாக அறிய முடியாவிட்டாலும் 'நற்பெயர் திருட்டு' ஒரு மோசடி என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. இந்த மோசடிகள் அத்தனையும் செய்பவர்கள் ஒரே குழுவைச் சார்ந்தவர்களாகவே அடையாளம் காணப்பட்டுள்ளனர் .

இந்த மோசடிக் குணம் பிற்காலத்தில் தலை மறைவு இயக்க ஆதரவாளர்கள் என்ற வகையில் மேலும் வளர்த்துக் கொள்ளப்பட்டது. உலகம் வியக்கும் மோசடி வித்தைகளின் விற்பன்னர் என எண்ணுமளவுக்கு 'கே.பி' கொடிகட்டிப் பறந்த போது எமக்கு பெருமிதமாய்தான் இருந்தது கப்பல்கள் ஓடியபோதும், 'சரக்குகள்' கண்டம் மாறிய பொழுதும் பெருமையாய் தான் இருந்தது. இப்படித்தான் அமெரிக்க சுதந்திர போரில் பெனடிக் ஆர்னோல்ட்டும் கடல் கடந்து 'கப்பல்கள் விட்டு' சுதந்திரத்துக்காக போராடினான் . கடலோடியாகிய அவன் மனதில் புகுந்து கொண்டாள் பிரித்தானிய காரிகை. எந்த போராட்டத்துக்காக போராடினானோ அதனை அழிக்கும் முன்னணி செயல்பாட்டாளன் ஆனான் அவன். உலகில் துரோகிக்கு என்று ஒரு நினைவுச் சின்னம் இருக்கின்றது என்றால் அது ஆர்னோல்டுக்கு மட்டும்தான் இருக்கிறது. அந்த நினைவுச் சின்னம் அமெரிக்காவில் இருக்கிறது. இத்தனைக்கும் காரணம் ஆசைதான். தான் வளர்த்த அமெரிக்க சுதந்திரப் போரை தோற்கடிக்க அத்தனை மோசடிகளையும் செய்தான் ஆர்னோல்ட். இதற்கெல்லாம் காரணம் அவனுக்கு ஊட்டப்பட்ட பதவி, புகழ், போன்ற ஆசைகள் தான்.விடுதலைப் போரில் முன்னணியில் செயல்படுபவர்களை திட்டமிட்டு அணுகி நட்புகொண்டு திசை திருப்பிவிட எதிரி என்றுமே முயல்வான். அவன் விரிக்கும் வலை மிக நுணுக்கமானதாகவும், பெண், பணம், பதவி, அதிகார வெறி, அகங்காரம் போன்றவை மட்டுமல்ல முன்னணிநபர்களின் அரசியல் அறீவீனத்தினால் ஏற்படும் பலவீனங்களும் பாவிக்கப்படும்.

உதாரணத்துகு புலம்பெயர் நாடுகளில் வாழும் இவ்வாறான தமிழர்கள் சிலரை வைத்து இவ் வியடத்தைப் பார்ப்போம். இவர்கள் எல்லோருமே உண்மையில் தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய விரும்புவர்கள் என்றே நம்புகின்றேன். இவர்கள் தமது அரசியல் அறிவுக் குறைபாட்டையும், மனிதப் பலவீனங்களையும் வெல்லுவானார்கள் அவர்களால் இனத்துக்கு நிறையவே பலன் கிடைக்கும்.

ஒரு பேப்பர்ல் எழுதும் சாத்திரியை எடுப்போம். "டக்ளசுடன் இணைந்து வேலை செய்வது வர வேற்கத் தக்கது" என எழுதும் அளவுக்கு சாத்திரி அரசியல் குழப்பம் அடைய வைக்கப்பட்டிருக்கின்றார். அவர் தன் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணிப்புடன் மக்களுக்காக செலவிட்டவர் என்ற வகையில் இனப்பற்று உள்ளவராகவே இருப்பார் என்று நம்பலாம். இவரை விட அதிகம் செலவிட்டவர்கள் பட்டியலை தேடினால் கருணா முதல் பலர் இருக்கின்றார்கள். கே.பி யும் இருக்கின்றார். 2009 இற்கு பின் கே.பி தனிப்பட்ட வாழ்வை உயர்த்தவில்லை. ஆனால் ஏதோ ஒரு சதியில் மீள எழமுடியாதவாறு விழுந்திருக்கின்றார்.

தென் சூடான் விடுதலை பெற்ற போது எமது ஊடகத் துறையிலும் அரசியல் செயற்பாட்டாளர் மத்தியிலும் ஒரு வித சுறு சுறுப்பு ஏற்பட்டது மறக்க முடியாதது. இன்று தென் சூடான் என்ற புதிய நாடு கண், காது, வாயில்லாது பிறந்த குழந்தைக்கு ஒப்பிடுமளவுக்கு இருக்கின்றது என என Huffington post என்ற இணைய பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.தென் சூடானின் இந்த நிலைமைக்கு காரணம் சுதந்திர போராட்ட அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட விதம் தான்.

சர்வாதிகார போக்குடைய சம்பந்தன் முதல் பிரித்தானிய தமிழர் பேரவை கையகப்படுத்த முயலும் சுரேன் சுரேந்திரன் போன்றோரின் மோசடிகளால் எமக்கு தனி நாடு கிடைதுவிட்டால் அது தென் சூடான் போன்ற கண், காது , வாய் இல்லாத குழந்தை போல் ஆகிவிடும். அவ்வாறு ஆகி விடாது பார்க்க வேண்டுமானால் உள்ளக கட்டுப்பாட்டு விதிகளை நாம் கடைப் பிடித்தாக வேண்டும்.நாடுகடந்த அரசின் அரசியல்அமைப்புபோல நாம் நினைத்த மாதிரி காட்டுச் சட்டம் உருவாக்காமல் சர்வதேச நியமங்களை தழுவிய விதிகளை அமைப்புக்களும், முக்கியஸ்தர்களும் கடைப் பிடிக்க வேண்டியது காலத்தின் கடாயமாகும்.

வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

மணல் கோட்டையும் மனித கோட்டையும்!

ஒரு சிறுவன் கடற்கரை மணலில் ஒரு மணல் கோட்டையைக் கட்டிக் கொண்டு இருந்தான். அவன் கொண்டு வந்திருந்த வாளி மற்றும் சில உபகரணங்கள் கொண்டு ஆலோசித்து ஆலோசித்து அவன் அந்தக் கோட்டையைக் கட்ட ஆரம்பித்து நிறைய நேரம் ஆகியிருந்தது. கோட்டை, வாயில், மதில் சுவர்கள் என ஒவ்வொன்றையும் பேரழகுடன் உருவாக்கிக் கொண்டு இருந்தான். அந்தக் கோட்டை கட்டும் ஆர்வத்தில் அவன் தன் சுற்றுப்புறத்தையே மறந்து விட்டிருந்தான். தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் சிரிப்புச் சத்தம், கடலை, பட்டாணி சுண்டல் விற்றுக் கொண்டிருந்தவர்களின் விற்பனை சத்தம், அங்கு வந்து போய்க் கொண்டிருந்தவர்களின் பேச்சுச் சத்தம் எதுவுமே அவன் கவனத்தைத் திருப்பவில்லை. அந்தக் கோட்டை அழகுருவம் பெறப் பெற அவன் மனதில் எல்லையில்லாத சந்தோஷம். 'இந்த அழகுக் கோட்டை நான் உருவாக்கியது....'

நகரத்தின் இன்னொரு பகுதியில் பரபரப்பான சூழ்நிலையில் ஒரு மனிதன் தொலைபேசியில் பேசிக் கொண்டும், கணினியின் கீ போர்டை அழுத்திக் கொண்டும் இன்னொரு விதமான கோட்டையை அமைத்துக் கொண்டிருக்கிறான். அது அவனுடைய வியாபாரக் கோட்டை.

அவன் வாய் வார்த்தைகளில் வியாபார அஸ்திவாரங்கள் போடப்படுகின்றன. அவன் விரல் நுனிகளில் பெரிய பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிக் கொண்டிருக்கின்றன. அவனும் தான் உருவாக்கிக் கொண்டிருந்த கோட்டையில் உலகையே மறந்து விட்டுருந்தான். ஒன்றுமில்லாமல் ஆரம்பித்து அவனுடைய தீவிர முயற்சிகளால் நன்றாக வளர்ந்திருந்த அதன் வளர்ச்சியைப் பார்க்கையில் அவனுக்கும் பேரானந்தம். 'இது நான் உருவாக்கியது...'

இந்த இரண்டு கோட்டைகளும் அவரவர் கடும் உழைப்பால் உருவானவை. அவர்கள் திட்டமிட்டு உருவாக்கியவை. அவர்களில்லா விட்டால் அந்தக் கோட்டைகள் இல்லை. அவர்களுடைய முழுக் கவனத்தையும் பெற்று அவர்கள் எண்ணப்படி உருவானவை. கடலலையும், விதியலையும் எந்த நேரத்திலும் வந்து அழித்து விடக்கூடிய கோட்டைகள் அவை. இதோடு இருவருக்குமுள்ள ஒற்றுமைகள் முடிந்து விடுகின்றன. இனி வரும் வேற்றுமைகள் தான் நம்மை சிந்திக்கத் தூண்டுபவை.

மாலை நேரம் நெருங்க நெருங்க கடலலைகள் கரையில் அதிக தூரம் வர ஆரம்பிக்கின்றன. அவனது கோட்டையை அலைகள் நெருங்க நெருங்க சிறுவன் துள்ளிக் குதித்து ஆர்ப்பரிக்கிறான். தான் கட்டிய கோட்டை அலைகளால் அழியப் போகிறதே என்ற வருத்தம் அவனிடம் இல்லை. பயம் இல்லை. ஏனென்றால் அவன் ஆரம்பத்திலிருந்தே இதை அறிவான். சிறிது சிறிதாக அவனது கோட்டையை கடலலைகள் கபளீகரம் செய்ய சில நிமிடங்களில் அவன் கட்டிய கோட்டை இருக்கும் இடம் தெரியாமல் காணாமல் போகிறது. வாளியில் தன் மற்ற உபகரணங்களைப் போட்டுக் கொண்டு அந்த வாளியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, மறு கையால் தந்தையின் விரல்களைப் பிடித்துக் கொண்டு வீடு திரும்பும் அந்தச் சிறுவன் மனதில் துளியும் துக்கம் இல்லை. எல்லாம் விளையாட்டு. அன்றைய பொழுது ஆனந்தமாய் கழிந்ததில் ஒரு நிறைவு.

ஆனால் இன்னொரு கோட்டை கட்டியிருந்த மனிதனின் மனோபாவமோ வேறு விதமாக இருக்கிறது. அவனுடைய கோட்டைகள் விதியலைகளால் தீண்டப்படும் போது அவனுள் பீதி கிளம்புகிறது. இது நான் கஷ்டப்பட்டுக் கட்டிய கோட்டை, இதற்காக நான் நிறைய நேரம் செலவழித்திருக்கிறேன், தியாகம் செய்திருக்கிறேன் என்றெல்லாம் புலம்புகிறான். விதியலைகளில் இருந்து அந்தக் கோட்டை அழியாமல் காக்க முடிந்த மட்டும் போராடுகிறான். ஒவ்வொரு பகுதியாய் கோட்டை அழியும் போதும் கண்ணீர் வடிக்கிறான். இயற்கை அவன் புலம்பலையும், கண்ணீரையும் பொருட்படுத்தவில்லை. கடைசியில் அந்தக் கோட்டை இருந்த இடம் தெரியாமல் தகர்ந்து போகும் போது அவனிடம் சொல்லொணா துக்கம் மட்டுமே மிஞ்சுகிறது.

எல்லா ஆரம்பங்களுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை அவன் அறியமுடியாதவன் அல்ல. ஆனாலும் தன் சொந்த விஷயங்களில் அந்த உண்மையை உணர்ந்து தெளியும் பக்குவம் அவனுக்கு இல்லை. தினமும் மரணங்களைப் பார்த்து வாழ்ந்தும், தான் சாசுவதமானவன் என்பது போல் நடந்து கொள்ளும் சராசரி மனிதர் கூட்டத்தைச் சார்ந்தவன் அவன். தன்னுடைய கோட்டை மட்டும் இந்த இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்று பொய்யான நம்பிக்கையில் இருந்து வந்ததால் தான் அவனால் நடந்ததை ஜீரணிக்க முடியவில்லை.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன. அந்தச் சிறுவனைப் போல் இயற்கையை அறிந்து, புரிந்து, உணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை ஆனந்தமயமானதாக இருக்கலாம். அந்த மனிதனைப் போல் பொய்யான மாயையில் வாழ்ந்தால் வாழ்க்கை துக்கரமானதாகவே முடியும்.

வெறும் கையுடன் வந்தோம். வெறும் கையோடு போகப்போகிறோம். இந்த உண்மையை இடைப்பட்ட வாழ்க்கையில் நினைவு வைத்து வாழ்ந்தால் உண்மையில் நமக்கு இங்கு இழக்க ஒன்றுமேயில்லை என்பதை தெளிவாக நாம் உணர முடியும். இது தான் உண்மை.

- என்.கணேசன்

மகிந்தவின் ஒத்துழையாமை: மேற்குலகம் என்ன செய்யப்போகிறது ?

கோபி
ஒரு பேப்பர்

'விழுது' என்பது சாந்தி சச்சிதானந்தம் என்ப வரால், வெளிநாட்டு நிதியுதவியில், கொழும்பைத் தளமாகக்கொண்டு நடாத்தப்படும் ஒரு தன்னார் வத் தொண்டு நிறுவனம். இந்நிறுவனம் சிறிலங்கா வின் சுதந்திர தினம் தொடர்பாக அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

"கொழும்பு மறைமாவட்ட பேராயர் டிலோராஜ் கனகசபை அவர்கள், எதிர்வரும் சுதந்திர தினத் தினை துக்க தினமாக அனுஸ்டிக்கும்படி இலங் கைத் திருச்சபைகளுக்கு விடுத்த அறைகூவ லினை விழுது நிறுவனமானது ஆதரிக்கின்றது.

இலங்கையில் வாழும் சகல மக்களும் சமவாய்ப் புக்களையும், சமமாக வளங்களை அனுபவிக்கும் உரிமைகளையும் பெறுவதினை நல்லாட்சி ஒன்றே உறுதி செய்யக் கூடியது என்கின்ற உண்மையின் அடிப்படையில், கடந்த தசாப்த காலமாக விழுது நிறுவனம் இயங்கி வருகின்றது. சமூக நீதியும் சமத்துவமும் நிலைநாட்டப்படும் இத்தகைய நல் லாட்சியினை ஸ்தாபிக்க வல்லவர்களும், அது அநீதியின் வழியில் தவறும்போது, அதனை நல் வழிக்கு மீட்டெடுக்கும் வல்லமையுடையவர்களும் மக்களாகிய நாம் மட்டுமே. இந்த வகையில், இலங் கையில் நல்லாட்சி அருகி அநீதி தாண்டவமாடு கின்றது எனில் அதற்கு முழுப்பொறுப்பாளர்களும் மக்களாகிய நாமே" இவ்வாறு அந்த அறிக்கை நீண்டு செல்கிறது.

எமக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து சிறிலங் காவின் சுதந்திரதினத்தை ஒரு துக்கதினமாகவே கருதி, அன்றைய தினம் அடையாள எதிர்ப்பு நட வடிக்கைகளைச் செய்துவருகிறோம். ஆனால் கொழும்பில் உள்ள கிறிஸ்தவ மதகுரு ஒருவர் சிறி லங்காவின் சுதந்திரதினத்தை துக்க தினமாகக் கொள்ளுமாறு அறிக்கை விடுவதும், அதனை அங் கிருந்து செயற்படும் அரசுசாரா நிறுவனம் ஒன்று ஆதரித்து நிற்பதும், இதனைப் படிப்பவர்களுக்கு சற்று வேடிக்கையானதாகத் தோன்றலாம். இருப்பி னும் மேற்படி அறிக்கையினை மகிந்த இராஜபக்ச வின் சுதந்திரதின உரையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால், மேற்படி அமைப்புகள் என்ன சொல்ல வருகின்றன என்பதனை புரிந்துகொள்வதில் சிரம மிருக்காது.

மகிந்த இராஜபக்ச தனது சுதந்திரதின உரை யில், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலா கத்தை நிராகரித்ததுடன், இறைமைகொண்ட தமது நாட்டின் உள்விடயங்களில் வெளிநாடுகள் தலையி டக்கூடாது எனவும் வேண்டிக்கொண்டார். அவரது உரையின் சாரம் மேற்குலகத்தின் எதிர்பார்ப்புகளை புறம் தள்ளுவதாகவும், சிங்கள வாக்காளர்களை திருப்திப்படுத்துவதாகவும் அமைந்திருந்தைக்காண லாம். விடுதலைப்புலிகளுடனான போரில் பெற்ற வெற்றியை நினைவூட்டி சிங்கள மக்களினை உணர்ச்சி கொள்ள வைப்பதன் மூலம் தனது ஆட்சியை தக்க வைக்கலாம் என்பதில் மகிந்த நம் பிக்கை கொண்டுள்ளார் என்பதனையே அவரது உரை வெளிப்படுத்துகிறது. சிங்கள பௌத்த பேரி னவாதத்தை தூண்டிவிடுவதன் மூலம் ஆட்சி யினை கைப்பற்றலாம் அல்லது பதவியில் நீடிக் கலாம் என்ற சிங்களத்தின் மரபு மாற்றப்படாமலே இருப்பதனை சிறிலங்காவின் 65வது வருட சுதந்திர தின நிகழ்வு மறுபடி ஒருமுறை உறுதிப்படுத் தியுள்ளது.

மகிந்தவின் சுதந்திரதின உரையை, அவர் ஒரு அரசியல்வாதியாக அவரது வாக்காளர்களை திருப் பதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஒன்று என எடுத்துக்கொண்டாலும், அவரது அண்மைய நட வடிக்கைகளை அவதானித்தால், மேற்குலகம் தொடர்பான அவரது நிலைப்பாட்டை தெரிந்து கொள்வதில் சிரமமிருக்காது.முதன்மை நீதியரசர் சிரானி விடயத்தில் அவர் நடந்துகொண்ட முறை யும், இவ்விடயத்தை விசாரித்தறிய அங்கு செல்ல விருந்த சர்வதேச சட்டவாளர்கள் சங்கத்தின் மனித வுரிமைக்குழு உறுப்பினர்களுக்கு நுழைவு அனு மதியை மறுத்தமையையும் அவரது நிலைப் பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன. நல்லாட்சி (good governance), மற்றும் ஜனநாய கத்தை ஏற்படுத்துதல் என்கிற மேற்கின் எதிர்பார்ப் புகளில், சிரானி விடயம் முரண்பட்டு நிற்பதால், அமெரிக்கா தனது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தது என்பதனை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

மேற்குலக அதிகார மையங்களுடன் மகிந்த முரண்படுவதற்கு கொள்கை ரீதியான வேறு பாடுகள் எதுவும் காரணமில்லை என்பதனை இரண்டு தரப்பினரும் அறிவர். ஆனால் தனது ஒழுங்குக்குள் சிறிலங்காவை கொண்டுவருவதற்கு மகிந்த ஒரு பொருத்தமான ஆள் இல்லை என் பதனை மேற்குலக சக்திகள் முடிவெடுத்துவிட்டன என்ற அச்சமே மகிந்தவை அந்தப்பக்கம் திருப்பிப் பார்க்க அச்சத்தை ஏற்படுத்துகிறது. இலங்கைத் தீவிற்குள் ஒரு பலம்பொருந்திய அரச தலைவராக இருக்கும் மகிந்த சர்வதேச மட்டத்தில் மிகவும் பல வீனமான அரச தலைவராகக் காணப்படுவதனையே இது வெளிப்படுத்தி நிற்கிறது. ஆதலால் மேற் குலகத்தின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்ப தில்லை என்றநிலைப்பாட்டை மகிந்த எடுத்திருப் பது ஒரு துணிகரமான முடிவு அல்ல என்பதனை அவரே மறுக்கப்போவதில்லை. இன்றைய நிலை யில் மேற்குலகத்தின் நகர்வுகளுக்கு ஒத்துழைத் தாலும் ஒத்துழைக்காவிட்டாலும் தனது நாட்கள் எண்ணப்படுகின்றன என்பதனை அவர் நன்கு அறிந்து வைத்திருக்கிறார். தற்போதைக்கு தனது வாக்காளர்களை திருப்திப்படுத்தினால் போதும் என்ற நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கிறார்.

சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவருக்கு பயிற்சிக்கு அனுமதியளிக்க மறுத்தமையை கார ணங்காட்டி, அமெரிக்கா பயிற்சி அளிக்காவிட்டால் தாங்கள் சீனாவிடம் செல்வோம் என கோத்தபய குறிப்பிட்டமையும், பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கைத்தீவில் நடாத்தப்படாதுவிட்டால் தாங்களும் அதற்கேற்ப நடந்து கொள்வோம் என பசில் இராஜபக்ச எச்சரிக்கை விடுத்தமையும், பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஒரு முக்கி யத்துவம் அற்ற அமைப்பு என பாலித்த கோகண தெரிவித்தமையும், ஆற்றாமையை வெளிப்படுத் தும் பேச்சுக்கள்.இவற்றை சதாம் ஹுசேனின் பேச் சாளராகவிருந்த கெமிக்கல் அலியின் அறிக்கை களுடன் ஒப்பிடலாம். ஆனால் மேற்கின் ஒவ்வொரு எதிர்ப்பு நடவடிக்கையும் சிறிலங்கா அரசை பல மாகத் தாக்குகிறது என்பதனையும் இவை உணர்த்தி நிற்கின்றன.

மேற்குலகத்தின் ஆட்சி மாற்ற முயற்சிகளில், விரும்பியோ விரும்பாமலோ இரண்டு தரப்பினர் இணைந்து கொண்டுள்ளவர்கள். ஒரு தரப்பு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற மேற்கு ஆதரவு அரசியற்கட்சிகள். இவர்க ளின் ஆட்சிமாற்ற செயற்பாடுகளில் இடதுசாரிக ளான விக்கிரமபாகுவின் நவசமசமாஜக்கட்சியும் இணைந்திருப்பது ஒரு முரண்நகை. மற்றய தரப்பு கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் அரசுசாரா நிறுவனங்கள். 'நல்லாட்சியும் சனநாயக மும்' ஏற்படுத்துவதற்காகவே இவர்களுக்கு மேற் கின் சர்வதேச அபிவிருந்தி நிறுவனங்கள் கை நிறைய வேதனம் வழங்குகின்றன.

மேட்டுக்குடியைச் சேர்ந்த இவர்கள் 'அரபு வசந்தம்' போன்ற ஒரு புரட்சி இலங்கைத்தீவில் ஏற் படும் என பேசியும் எழுதியும் வந்தாலும், தங்க ளால் ரொறிங்கரனில் இருக்கும் சுதந்திர சதுக் கத்தை கெய்ரோவின் 'தஹ்ரிர் சதுக்கம்' போல் மாற்றிவிட முடியாது என்பதனை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். மேற்குலகமும் இந்த ஆண்டி களை வைத்து மடம் கட்ட முடியாது என்பதனை உணர்ந்து கொண்டாலும், நீண்ட தயார் படுத் தலுக்கும், வெளியுலகத்தினை நம்பச் செய்வதற்கும் இவர்கள் போதுமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்த முயலும், மேற் குலகம் தனது அடுத்த கட்ட நடவடிக்கையாக எதனை மேற்கொள்ளப்போகிறது என்ற கேள்வி கொழும்பின் மேட்டுக்குடியிடம் மட்டுமல்லாமல், மேற்குல சிந்தனை மையங்களிடமும் இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் இடம்பெறப்போகும் நகர்வுகள் அதற்கு கட்டியம் கூறுவதாக அமையும் என எதிர்பார்க்கலாம். குறிப்பாக இரண்டு விடயங் கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் அமெரிக்கா கொண்டு வரவிருக்கும் தீர்மானம். மற்றையது பொதுநல வாய நாடுகளின் மாநாட்டினை இலங்கைத்தீவில் நடாத்துவதா அவ்வாறு நடத்தினால் அவ்வமைப் பில் அங்கம் வகிக்கும் மேற்கு நாடுகளின் தலைவர் கள் கலந்து கொள்ளவார்களா போன்ற நகர்வுகள் இவ்விடயத்தை நாடி பார்ப்பதாக அமையும்.

> தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமில்லை என்பதனையும் அதையொட்டியே மக்களை அணிதிரட்ட முடியும் என்பதனையும் மேற்குலகத்திற்கு உணரவைக்க வேண்டிய கடமை மேற்குலக ஆட்சிமையங்களுடன் குலாவும் தமிழ் அமைப்புகளுக்கு உண்டு.

ஏற்கனவே பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை ஒரு துருப்புச் சீட்டாக மேற்குநாடுகள் பயன்படுத்துவது தெரிகிறது.அண்மையில் இலங் கைத்தீவிற்கு பயணம் மேற்கொண்டிருந்த பிரித் தானியதுணை வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரர் பேர்ட், பின்முள்ளிவாய்க்கால் கால அபிவிருத்தி பற்றி வியந்து பாராட்டியிருந்தாலும், இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளில் விரிசல்கள் தோன்றியுள் ளமையை உணர்ந்து கொள்ளலாம். பொதுநல வாய நாடுகள் மாநாடு இலங்கைத்தீவில் நடை பெற்றால், அதில் மகாராணியார் கலந்துகொள்ள மாட்டார் என்பது இப்போது ஓரளவுக்கு உறுதி யாகிவிட்டது.

இவ்விடயத்தில் அலைந்துழல்வுத் தமிழ்ச் சமூகம் கவனிக்க கூடிய விடயம் ஒன்றுள்ளது. இன்றுள்ள நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டக்கூடிய வலிமையும், நாட் டமும் தீவுக்கு வெளியில் வாழும் தமிழர்களிடமே உள்ளது. அதனை பயன்படுத்த வேண்டிய தேவை மேற்கிற்கு ஏற்படலாம். இவ்விடயத்தில், ஜனநாய கம், நல்லாட்சி என்கிற வெற்றுச் சுலோகங்களில் கவனம் செலுத்தாது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் விட்டுக் கொடுப்புகளுக்கு இட மில்லை என்பதனையும் அதையொட்டியே மக் களை அணிதிரட்ட முடியும் என்பதனையும் மேற் குலகத்திற்கு உணரவைக்க வேண்டிய கடமை மேற்குலக ஆட்சிமையங்களுடன் குலாவும் தமிழ் அமைப்புகளுக்கு உண்டு.

ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil 020 8795 4258
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS 020 8297 9432

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Akilan Enterprise 020 8548 0033

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan 020 8514 1744
Angels 020 8553 0490
Sri Supermarket .....

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
Eelavan 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc..... 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Duvaraka C & C 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret 020 8571 4434

Raj musix
Raj TV
CAPTAIN TV
VIJAY
சிரிப்பொலி
செய்திகள்
மக்கள் தொலைக்காட்சி
மண் பயனுற வேண்டும்
புதிய தலைமுறை
உண்மை உடனுக்குடன்
JAYA MAX
mega 24
மெகா டிவி
WIN TV
Animal Planet
VASANTH TV
கலைஞர்
JAYA PLUS
NATIONAL GEOGRAPHIC™
After eight years
in Canada.....
Now in UK and Europe
www.you-tv.net
YOU-TV
PO.Box 52314 1711, Mccowan Road, Toronto, ONT, Canada M1S5G8
More than 50 Tamil Channels
(Jaya tv, Jaya Max, Raj, Captain,
Makkal, Mega, GTv, Zee Tamil and more)
10 Christian Channels
More than 1000 other Channels
(Tamil, Hindi, Telugu, Marathi, Malayalam, kannada,
Bengali, Punjabi,English, German, French, Pakistan,other)
More than 3000 tamil movies
All in one android box
More than 2000 other movies
Watch all channels without a Satellite.... Or cable connection
IF YOU RECOMMENDED SOMEONE YOU WILL GET ONE MONTH FREE
PRICE FROM
£ 149.00
TO £ 249.00
Mobile - 074 2359 7546
Mobile - 074 2359 7547
email - youtvsales@gmail.com

இலங்கை மீதான அமெரிக்காவின் பார்வையில் மாற்றமேற்படுகிறதா ?

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

'செயற்பாட்டு மூலோபாயம்' என்கிற சொல்லாடல், மேற்குலக புவிசார் அரசியல் நோக்கர்களால் தற்போது பரவலாகப் பயன்படுத்தப்படுவதனை அவதானிக்கலாம்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா , ஆசிய-பசிபிக் பிராந்தியம் தொடர்பாக முன்வைத்த நீண்ட கால மூலோபாயத்திட்டம் குறித்து, தமது விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்கும் பல அரசறிவியலாளர்கள் , இந்த மூலோபாய திட்டத்திற்கான செயல்வடிவங்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டுமென்பதில் முரண்பட்டுக் கொள்வதைக் காணலாம்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் இருந்துவிலகி, ஆசிய-பசிபிக் பிராந்தியம் நோக்கி நகரும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமது படைவலுவினை அதிகரிக்கும் அதேவேளை, ஏனைய தென்னாசிய மற்றும் கிழக்கு ஆசிய வளர்முக நாடுகளுடன் பொருளாதார, இராஜரீக உறவுகளை அதிகரிக்கும் வகையில் செயற்பாட்டு மூலோபாயங்களை வகுக்க வேண்டுமென்பதே மேற்குலக அரசியல் நோக்கர்களின் விருப்பாக இருக்கிறது.

அதாவது அமெரிக்க அரசானது தனது வளங்களை ஆசியாவை நோக்கி நகர்த்த வேண்டுமென ஆலோசனை கூறுவதோடு , வெள்ளை மாளிகையிலுள்ள தேசிய பாதுகாப்புச் சபை ஊழியர்கள், முகாமைத்துவ மற்றும் பாதீட்டு அலுவலகத்துடன் இணைந்து ஆசியாவில் ஒரு மீள்சமநிலையை உருவாக்கும் முயற்சிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் சில நடைமுறை சார்ந்த விஃகங்களையும் முன் வைக்கிறார்கள்.

இதில் படைத்துறை இராஜதந்திரம் என்பதானது, நட்புநாடுகளின் இராணுவத்தைப் பலப்படுத்தல், கூட்டுப் பயிற்சியில் ஈடுபடல் என்பதனை உள்வாங்கிக் கொண்ட வகையில் அமையும். அந்தவகையில், இலங்கை படைத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கும் இருதரப்பு உறவுநிலை ஊடாக இந்த இராஜதந்திரம் பிரயோகிக்கப்படுவதை நோக்கலாம்.

ஆசியாவில் மீள்சமநிலை ஒன்றினை உருவாக்கும் அமெரிக்காவின் மூலோபாயத் திட்டத்தில், முன்னாள் இராஜாங்கச் செயலர் கிளாரி கிளிண்டன் மற்றும் கிழக்கு ஆசிய-பசுபிக் பிராந்திய விவகாரங்களிற்கான உதவி இராஜாங்கச் செயலர் கேர்ட் கம்பெல் ஆகியோர் தமது இராஜதந்திர பங்களிப்பினை மிக காத்திரமாக வழங்கியிருந்தார்கள். இப்பணியை புதிய இராஜாங்கச் செயலாளர் ஜோன் கேரி தொடர்ந்து முன்னேடுப்பாரா என்பதனை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் .

புதிதாக வந்தவர், இரண்டு முக்கிய முரண்பாடுகளை கையாளவேண்டிய சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளார். முதலாவது, டியொயு (Diaoyu) தீவிற்கான ஜப்பான்-சீனா இடையிலான மோதல் நிலை. இரண்டாவதாக வடகொரியா மேற்கொள்ளவுள்ள அணுஆயுதச் சோதனைக்கு எதிர்வினையாக, கடந்த திங்களன்று (04-02-2013) தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து கொரிய வளைகுடாவின் கிழக்குக் கரையில் நிகழ்த்திய 3 நாள் கடற்படை கூட்டுப் பயிற்சி.

1960 இலிருந்து 78 தடவைகள் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் தனதுகடன் எல்லையை அமெரிக்கா நிர்ணயம் செய்தது. மருத்துவ உதவித் தொகை, இராணுவத்திற்கான ஊதியம், சமூக பாதுகாப்பு நிதி, தேசியக் கடனிற்கான வட்டித் தொகை, வரி மீளளிப்பு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பன இக்கடன் எல்லையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

அமெரிக்கா தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வாங்கும் கடன் எல்லையை தொடர்ச்சியாக உயர்த்தும் போது, ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் மீள்சமநிலை உருவாக்குவதற்குத் தேவையான மேலதிக நிதியை எங்கிருந்து பெறும் என்பதே அடுத்துவரும் முக்கிய கேள்வியாகும்.

அதேவேளை, சீனாவின் எல்லை தாண்டிய முதலீட்டு ஆதிக்கமும், கடல்வள உரிமத்திற்கான இறுக்கமான நிலைப்பாடும் , அமெரிக்க சார்புநாடுகளுடன் நெருங்கிவரும் அதன் உறவு நிலையும், வாசிங்டனின் மீள்சமநிலை உருவாக்க மூலோபாயத் திட்டத்தில் சிக்கல்களை தோற்றுவிப்பதைக் காணலாம்.

தென்சீனக் கடற்பிராந்தியத்தில் ஏற்படும் முரண்நிலையில், சீனாவிற்கு எதிரான நிலைப்பாட்டினை வெளிப்படையாக எடுக்க முடியாத தொரு இக்கட்டான சூழலுக்குள் அமெரிக்க தள்ளப்பட்டுள்ளதையும் பார்க்கலாம்.

அடுத்ததாக, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற தானதொரு பொருளாதார சமூகத்தினை, 10 நாடுகள் அடங்கிய ஆசியான் (ASEAN) கூட்டமைப்பு , 2015 அளவில் உருவாக்கிவிடும் என்பதையும் அமெரிக்கா உற்று நோக்குகிறது.

நீண்டகாலமாக சீனாவின் நண்பனாக இருக்கும் மியன்மார் ஜனபர்மாஸ , ஆசியானின் தலைமைப் பொறுப்பினை ஏற்கவிருக்கிறது என்பதனை உணர்ந்து , அந்நாட்டின் உடனான உறவினைப் பலப்படுத்த ஒபாமா நேரடியாகக் களத்தில் இறங்கிய விவகாரமும் கவனிக்கத்தக்கது.

ஆகஸ்ட் 2012 வரை மியன்மாரில் சீனா மேற்கொண்ட நேரடி முதலீடு 14.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் அதேவேளை, கடந்த அரையாண்டில் மட்டும் 3.5 பில்லியன் டொலர்களுக்கு இருதரப்பு வர்த்தகம் நடந்துள்ளது.

அடுத்ததாக, அமெரிக்க-சீன பனிப்போரின் பிறிதொருமையக்களமாக, ஆசியாவின் வணிகக் கடல் பாதையின் தலைவாசலில் அமைந்துள்ள இந்துசமுத்திரப் பிராந்தியம் மாற்றமடைவதை குறிப்பிட்டாக வேண்டும் .

இப்பிராந்தியத்தில் சீனாவின் செயற்பாட்டு மூலோபாயத்தினை முடக்கும்வகையில், இரு பிரதான சக்திகளான அமெரிக்காவும் இந்தியாவும் தீவிரமாக இயங்குவதை காண்கிறோம். இருப்பினும் மியன்மார் ,இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ,மற்றும் மாலைதீவுபோன்ற நாடுகளுக்கு மேற்குலகின் ஆளுமைக்கு உட்பட்ட சர்வதேச நிதி மையங்களான அனைத்துலக நாணய நிதியமும், உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் குறிப்பிடத்தக்க கடனுதவிகளை வழங்கினாலும்,சீனாவின் நிதி முதலீட்டு ஆதிக்கம் பாரியளவில் இருப்பதை கவனிக்க வேண்டும் .

அண்மையில் கூடிய இலங்கையின் மந்திரி சபையானது, இரண்டு பாரிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு தனது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதில் ஒன்றான , 29.22 கிலோமீட்டர் நீளமான கொழும்பு மாநகர வெளிவட்ட நெடுஞ்சாலை நிர்மாணிப்பிற்கான திட்டத்தினை சீன நிறுவனமொன்றிக்கு [Metallurgical Corporation of China Ltd] வழங்கியதோடு, அதற்கான 66.7 பில்லியன் ரூபாயை சீனாவின் எக்ஸிம் [EXIM] வங்கியிடமிருந்து பெற அனுமதியளித்தது.

இப்பாரிய சீன நிறுவனமே, பப்புவா நியூகினியா நாட்டில் நிக்கலையும் [Nickel], ஆப்கானிஸ்தானில் செம்பையும் [Copper] அகழ்ந்து கொண்டிருக்கிறது.

அடுத்தது அனுராதபுரத்திற்கான நீர் வழங்கல் திட்டமாகும். அதற்கான 7.4 பில்லியன் ரூபா நிதியை ஜப்பானிய அரசிடமிருந்து இலங்கை பெறுகிறது. இத்திட்டம் உட்பட ஏனைய உட்கட்டுமான அபிவிருத்திப்பணிகளுக்காக மொத்தமாக 53.8 பில்லியன் ரூபா கடனுதவியை ஜப்பானிடமிருந்து பெறுவதற்கு மந்திரி சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதேவேளை மன்னார் கடலில் இந்தியாவை எண்ணெய் தோண்ட விட்டுள்ள இலங்கை அரசு, மறுபுறமாக சீனாவுடனும் ஜப்பானுடனும் பெருமளவில் முதலீட்டு ஒப்பந்தங்களைச் செய்தாலும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியா மேற்கொள்ளவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை [FTA] தன்னை பாதிக்குமா என்று ஏங்குவதை உணரக்கூடியதாவிருக்ககிறது .

இந்த வர்த்தக உடன்பாடு குறித்தான விவகாரத்தை பிறிதொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

ஏனெனில் 12 கைத்தொழில் பேட்டைகளையும், 8 சுதந்திர வர்த்தக வலயங்களையும் கொண்டிருக்கும் இலங்கை , மேலதிகமாக அம்பாந்தோட்டையிலுள்ள சூரியவேவாவில் இன்னுமொரு சுதந்திர வர்த்தக வலயத்தை நிர்மாணிக்க உத்தேசித்துள்ள நிலையில், அரசிற்கு வெளிநாட்டு நேரடி முதலீடு அவசியமானது.

என்னதான் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோசங்களை அரசின் இனவாத முகங்கள் முன்வைத்தாலும், ஐ.நா. தீர்மானங்கள் இத்தகைய வர்த்தக வலய விரிவாக்கத்திற்கு தடைக் கல்லாக அமைந்து விடுமோ என்கிற அச்சம் அரசிடம் இருப்பதை ரம்புக்வெலவின் கூற்று உணர்த்துகிறது.

அதுமட்டுமல்லாது, இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டிற்கு எதிர்ப்பலைகள் கிளம்பாத வாறு, காய்களை நகர்த்த வேண்டுமாயின் சில விட்டுக்கொடுப்புக்களை செய்ய வேண்டிவரும் என்பதையும் சிங்களம் புரிந்து கொள்கிறது.

தலைகள் வராவிட்டாலும், எப்படியாவது மாநாட்டை நடாத்தி முடிக்க வேண்டும் என்பதிலேயே இலங்கை அரசு குறியாக இருக்கிறது.

இருப்பினும் செயற்பாட்டு மூலோபாயம் என்பதனை துல்லியமாகப் பிரயோகிப்பதில் அனுபவமிக்க மேற்குலகத்தினர், இலங்கையை மென் அழுத்தங்கள் ஊடாகவே அணுக முற்படுவார்கள் என்று நம்பலாம்.

ஏனெனில்,ஆசியாவில் ஏற்பட்டுள்ள புதிய சூழலும், மியன்மாரில் உருவாகியுள்ள மாற்றங்கள் தரும் படிப்பினைகளும், இலங்கை விவகாரத்திலும் அத்தகைய போக்கினை மேற்கொள்ளவே அமெரிக்காவை நிர்ப்பந்திக்கும்.

இருப்பினும், அமெரிக்காவின் மென் அழுத்தங்கள், சில களநிலை மாற்றங்களிற்கான கால அவகாசத்தை எதிர்பார்த்து நின்றாலும், இந்தியாவின் போக்கில் சில கடுமையான அழுத்தங்கள் சேர்ந்து வரக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

எங்கள் இயக்கம் எங்கே ?

சுகி

(ஒரு பேப்பருக்காக)

சுத்தும்பூமிநின்றுவிட்டதுபோன்றஒருபிரமை, ஒரு சிலருக்கு மட்டும் தானா அல்லது மற்றவர் களுக்கும் இந்த உணர்வு உள்ளதா? செந் நீரால் ஊற்றி வளர்ந்த விடுதலைப் பயிரை எப்படி கிள்ளி எறிந்தார்கள். ஒரு பரிணாம வளர்ச்சி போல் கொஞ்சம் கொஞ்சமாக கீழ் இருந்து மேல் நோக்கி எழுந்த எழுச்சி, கடலில் சிறீலங்கா கடல் படையினரால் பிடிபட்டு அடுத்த நாள் உடல மாக கரையொதுங்கிய காலம் போய், சிறீ லங்கா கடல்படையினர் எம்மை கலைந்தால் பிடிபடாவண்ணம் வளர்ந்து, மேலும் சிறீ லங்கா கடல்படையினரை நாம் கலைத்து, எமது கடல் எல்லையை நிர்வகிக்கும் வரை உயர்ந்து, அதைவிடவும் வேகமாக ஒடி சிறீலங்கா கடல் படை தப்பி தவறி எமது எல்லைக்குள் வந்தால் அவர்களைக் கலைந்து பிடிக்குமளவுக்கு வளர்ந்த எமது கடல்படையும், அதை ஆண்ட கடல்புலிகளின் திறமையும் வியப்பதற்குரியது, ஒரு முப்பது ஆண்டு வளர்ச்சியும், திறமையும், அடுத்த தலைமுறையை அடையாமல் இடை யில் நின்று ஏதலிக்கின்றது.

தெருக்கூத்து, சிறுநாடகம், விபரணச் சித் திரம், ஓவியம், விளையாட்டுபோட்டிகள், என்று எமக்கென தனியானதொரு பாணியில் தென் இந்திய திரைப்படத்தை மீள்பதிவு செய்யாத ஈழத்துக்கென தனி ஒரு பாணியை உருவாக் கும் வகையில் வளர்ந்த கலைகளும், பண்பாடு களும் முடங்கிப்போய் உள்ளன. எண்ணத் திராணியற்ற வகையிலான அடக்குமுறைக்குள் எமது மக்கள், அங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

உள்ளங்காலில் இருந்து உச்சம்தலைவரை விரவிக்கிடந்த ஓர் உணர்வு, மின்னலை போன்று தரணியெங்கும் வாழும் தமிழர்களை இயக்கும், இயங்கு சக்தியை இழந்த மனிதர் கள் போல இங்குள்ள மக்கள், பெரிய மின்சார ஓட்டம் தடைபட்டு, சின்ன சுற்றுக்குள் சுற்றி வருவது போன்று, தான்படித்த பழைய பாட சாலை, ஊர்சங்கம், கோயில்கள், மதகுருக் கள், இங்குள்ள தமிழ் பாடசாலைகள், சிறு சிறு சமூக தொண்டு நிறுவனங்கள் என்று அதற்குள் ளேயே அவர்களது சுற்று நின்று விடுகிறது, அந்த ஒன்றிணைந்த, கண்ணுக்குத் தெரியாத இழை, ஆங்காங்கே விடுபட்டு, தொடர்பற்று நிற்பது போன்ற உணர்வு. நல்லதா என்று உரைத்து பார்க்கத்தான் வேண்டும். ஆனால் அதிகமாக உரைத்தால் சேதாரமும் அதிக மாகும். உரைக்காமல் எடுத்தால் இல்லாத தையும் பொன் என்று பொக்கிசப் படுத்தி ஏமாறும் அபாயம் உள்ளது. ஒன்றுமே வேண் டாம் ஏன் இந்த வம்பு என்று இருப்பது சுலபம், ஆனால் எங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப் பும் வரலாற்றை நிர்மாணிக்கும் காலகட்டத் தில், வாளாதிருந்தவர்கள் என ஆகிவிடுவோம்.

நீங்கள் தமிழ்பேசும் அளவிற்கு இங்கு பிறந்த பிள்ளைகள் தமிழ் பேசுகின்றார்களா, இல்லையே, அப்பிடியானால் தமிழ் அழிகின் றது என்று தானே அர்த்தம், அப்பிடி அழியும் தமிழுக்காக ஏன் பாடுபட வேண்டும். ஒருவரின் கேள்வி. இரண்டு விதமாக பதில் சொல்லாம் எதிர்மறையாக சொல்வதானால், ஓசோனில் ஓட்டை என்கிறார்கள், நீர்மட்டம் உயர்கின்றது என்கிறார்கள். உலகம் 40, 50 ஆண்டுகளில் அழிந்துவிடும் என்கிறார்கள். அப்பிடியானல் இவ்வழியும் உலகில் நிலையான பொருட்கள் என நாம் வீடு வாசல் எதையும் சேர்ந்து வைக் காமலா உள்ளோம்.

ஆங்கில மொழியை பார்த்தால் எல்லாமே கடன் வாங்கியவை, கணிதம் கூட 1இல் இருந்து 9 வரை அரபு நாட்டில் இருந்து வந்தது, பூச்சியம் இந்தியாவில் இருந்து வந்தது, இதை விட ஒன்று செய்யலாம், வளரும் மொழியான சீனமொழியைப் படிக்கலாம் ! அல்லது ஒருபடி மேல் யோசித்து, ஏன் அது அழியாமல் வளர் கின்றது, என்று பார்க்கலாம், இரண்டு சீனர்கள் ஆங்கிலத்தில் கதைத்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால்? நாம்?. இப்ப ஒரு 12 வருடங்களுக்கு முன், தொலைபேசியில் பேசும் போது 'வணக்கம், நான்..' என்று தொடங்க, என்ன பெடியள் மாதிரி சுத்த தமிழில் கதைக் கிறீர் என்று பதில் வந்தது. ஆனால் இப்போ அது சர்வசதாரணமாக எல்லோரும் சொல்கிறார் கள். 'சித்திரமும் கைபழக்கம், செந்தமிழும் நா பழக்கம் அல்லவா'.

எமது இயங்கு சக்திக்கு தமிழ் தேசியம் ஒரு முக்கியமாக காரணம், அத்தேசியம் எம்மை நாடு கடந்தும் இணைக்கின்றது. இதுபற்றி ஆழ மாகசிந்திந்து அத்தேசியத்தின்பேரால்நாம்ஒரு கிணைய வேண்டும். இது சாராணமான சொல் லாடல் அல்ல. சுலபமாக விளங்குவது என் றால் "working from Home" என்று பலர் வீட்டில் இருந்துகொண்டே கணனிமூலம்மின்னஞ்சல், கணனி மூலம் பார்த்து உரையாடல் (Chat) சந்திப்பு அறை கூட்டம் (conference call) என்று ஒரு virtual ஆக வீட்டில் இருந்து கொண்டே அலுவலகத்தில் இருப்பது போல முழு வேலை யும் செய்யக்கூடியதாக உள்ள, இயக்கம் தான் இங்கு முக்கியமானது. அலுவலகத்தை பிறகு அமைத்துக் கொள்ளலாம்.

எம்மிடம் உள்ள நாடு கடந்து விரவியிருக்கும் இயக்க சக்திக்குத் தான், நாடுகள் யோசிக்கின்றன. நாமும் எம்பலம் அறியாது, யானை பார்த்த குருடனைப் போல் தந்தம் கண்ணுக்கு முன்னால் தெரிவதை மட்டும் பார்த்துக்கொண்டு எம் முழுப் பலத்தையும் இணைக்காது பொழுதை விரையம் செய்கின்றோம்.

எம்மில் உள்ள, அந்த நாடு கடந்து எம்மை இணைக்கும் இயக்கத்தை நாம் சிந்தித்து செயல்பட்டு வளர்ந்துக்கொள்ளவேண்டும், இவர் சுள்ளுகிறார், அவர் கிள்ளுகிறார் என்று எம்மில் உள்ள சிறுசிறு குறைகளை பூதக்கண் ணாடி போட்டு பார்க்காது, இந்த இயங்குசக்தி என்று வரும் போது தமிழ் தேசியத்தின் பேரால் ஒன்றிணைய வேண்டும். இந்த எம்மிடம் உள்ள நாடு கடந்து விரவியிருக்கும் இயக்க சக்திக்குத் தான், நாடுகள் யோசிக்கின்றன. நாமும் எம் பலம் அறியாது, யானைப்பார்த்த குருடனைப் போல் தந்தம் கண்ணுக்கு முன்னால் தெரிவதை மட்டும் பார்த்துக்கொண்டு எம் முழுப் பலத்தை யும் இணைக்காது பொழுதை விரையம் செய் கின்றோம்.

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

* Packers * Movers * Shippers

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

Special rates for Containers and Machinery

4 Collection Points :
Harrow
Watford
Knightsbridge
Croydon

T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே

ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

*Condition Apply - No hidden charges - No bogus promotions

MNP ACCOUNTANTS

- Free Initial Consultation
- Annual Accounts
- Management Accounts
- VAT Return & Book Keeping
- Wages & Salary
- Business Planning
- Profit forecasting
- Self Assessment
- Tax Planning & other Taxation
- VAT & Tax Invesigation
- Tax Credits
- Company Formation
- Business Advice
- Web Design and Development

"It is not what you earn it is what you keep. To keep more of what you earn call us"

468, Church Lane, Kingsbury, London, NW9 8UA
Tel: 020 8200 2405, 020 8200 9332
07956274856 Fax: 020 8200 2406

Branch: No.06, 32nd Lane,
Wellawatta, Colombo - 06
T: +94 112 363 400

www.mnpaccountants.co.uk | info@mnpaccountants.co.uk

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும்,
G11, Lombard House,
PURLEY WAY, CROYDON,
CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தமிழ் மக்களின் 'காத்திருத்தல்'

நடராஜா முரளிதரன்

(ஒரு பேப்பருக்காக)

எதிர்வரும் 'மார்ச்' மாதம் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டை நோக்கி ஈழத்தமிழர்கள் பெரும் நம்பிக்கையோடு காத்திருக்கின்றார்கள் என்று பல தமிழ் கட்டுரையாளர்கள் பத்தி எழுதத் தொடங்கியுள்ளார்கள். அதற்காகத் தமிழ் மக்கள் வரலாற்றில் தாங்கள் கண்ட 'ஏமாற்றங்கள்' குறித்து மறந்து இவை போன்றவற்றையே நம்பி வாழ்கின்றார்கள் என்று நாங்கள் அர்த்தப் படுத்திவிடக் கூடாது என்றே நான் நினைக்கின்றேன்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் தொடங்கிடட்லி - செல்வா ஒப்பந்தம் ஊடாகத் திம்புப் பேச்சுவார்த்தையிலிருந்து இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஈறாகக் கிழிக்கப்பட்டதும், ஏமாற்றப் பட்டதுமான வரலாறுகளே நம் முன் உள்ளன. இடையே மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற இன்னொரு கதையும் உள்ளது. இவ்வாறு கடந்த காலம் நூற்றுக்கு நூறு வீதம் அப்பட்டமாக விரிந்து தெரிகையில் தமிழ் மக்கள் எந்த வகையில் ஜெனீவாவை நோக்கியிருப்பதாகக் கூற முடியும் ? என்பதே இங்கு எனது கேள்வி!

இந்தியா, அமெரிக்கா, இலங்கை என்ற மூன்று நாடுகளின் இராஜதந்திரிகளும் கடந்த சில வாரங்களாக இந்தப்பிராந்தியத்தில் இராஜதந்திரச் சுற்றுலாவில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டு 'பேரதிசயம்' நிகழப் போவதாக மிகை புனைவுகள் ஊடகங்களால் கட்டப்பட்டு வருவதாகக் கட்டுரையாளர்கள் சிலரால் சுட்டப்படுகிறது.

செய்தி ஊடகங்களுக்குச் சந்தையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. ஏனெனில் அதில் அவர்களது 'ஆயுள்' தங்கியிருக்கின்றது. கூடுதல் விளம்பரம் கிடைக்க வேண்டும் அவர்களுக்கு. அப்படியானால் மக்கள் பெருமளவில் அவற்றை வாசிக்க வேண்டும். அதனால் ஊடகவியலாளர்கள் சூடான செய்திகளுக்காகக் காத்துக் கிடக்கின்றார்கள் என்பதே இங்கு உண்மையாகும்.

தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குப் பிடித்தமான செய்தி தமிழ் மக்கள் பிரச்சினை பற்றியதாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் சினிமா பற்றியதாக இருத்தல் வேண்டும். சினிமா என்பது உலகளாவிய தளத்தில் அனைத்து இனங்களையும் கவர்ந்திழுக்கும் சாதனம் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டியிருக்கிறது. உதாரணத்துக்கு கமலஹாசனின் 'விஸ்வரூபம்' பட வெளியீடு பற்றிய சர்ச்சை ஊடகங்களில் பெருவாரியாக எழுதப்பட்டது. தமிழ் மக்கள் அனைவரும் அது குறித்துப் பேசிக் கொண்டார்கள். ஊடகங்களுக்கு அது மிகவும் விரும்பப்பட்ட பெரும் 'தீனியாக' அமைந்தது.

அதே போன்று இங்கு தற்போதைய சூழ் நிலையில் 'மார்ச்' மாத ஜெனீவா விவகாரம் எடுத்தாளப்படுகிறது ஊடகங்களால். உலகளாவிய ரீதியில் அனைத்துத் தமிழ் ஊடகங்களும் இதனையே செய்ய முயலும். அதற்காகத் தமிழ் மக்கள் அதனை நம்பிக் காத்திருக்கின்றார்கள் என்று முற்று முழுதாகக் முத்திரை குத்தி முரசறைந்து விட முடியாது. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்தைத் தமிழ் மக்கள் அறவே புறக்கணித்துச் செயற்படுகிறார்கள் என்பதும் அதன் அர்த்தம் அல்ல!

தமிழர்கள் வெளியிலிருந்து வரக்கூடிய மீட்டெடுத்தல்களுக்காகத் தொன்றுதொட்டே காத்து நிற்கிறார்கள் என்ற சொல்லாடலும் இந்தச் சந்தர்ப்பத்திலே எமது செவிகளை வந்து சேர்கின்றன. உலக வரலாறெங்கும் இவ்வாறான சம்பவங்களை நாம் அவதானிக்கலாம். பலவீனமானவர்களும், சிறுபான்மையினரும் தங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், தங்களது இருப்புக்காகவும் 'எதிர்பார்ப்பு' வாழ்வில் அலைந்து உழன்றிருக்கின்றார்கள். வெளியாரையோ அல்லது தங்களது புவியியல் எல்லைகளைத் தாண்டி வாழும் தமது இனத்துவத்தைச் சார்ந்தவர்களையோ எதிர்பார்த்து வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். உலக வரலாறுகளில் மக்கள் சமூகங்கள் இவ்வாறு இருந்து வந்ததற்கான நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் கொண்டு வந்து இங்கு அடுக்க முடியும்.

உலகத்தின் அண்மைக்கால வரலாறுகள் யாவும் அணிகளாகக், கூட்டுறவுகளாக, இனத்துவச் சேர்க்கைகளாகவே இடம்பெற்று வருகின்றது. இன்னும் ஒரு படி மேலே சென்று உரைப்பதெனில் இவ்வாறான அணிச் சேர்க்கைகளை ஒடுக்கு முறையில் ஈடுபடும் பலம் படைத்த அரசுகளே வெற்றிகரமாகக் கையாண்டு வருகின்றன.

எனவே நவீன வரலாற்றில் தமிழர்கள் தாங்கள் இனரீதியாக ஒடுக்கப்படுவதாக நம்பத் தொடங்கிய காலத்தில் தமிழர் மனங்களில் எழுந்த காத்திருப்பு என்பதையும் நாம் மறுக்கத் தேவையில்லை.. எமது பிராந்தியத்தில் இந்தியா என்பது பிராந்தியப் பேரரசு! உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடென்றும் சொல்லப்படுகிறது. இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தையும் தென்னிந்தியாவில் தமிழர்கள் வாழும் பிரதேசத்தையும் ஒரு சிறிய நீர்ப்பரப்பு பிரித்துள்ளது. இனம், கலை, மொழி, பண்பாடு, பொருளியல் என எமது மக்களுக்கும் இந்தியாவுக்குமான (தமிழகம்) தொடர்பு என்பது மிகவும் இறுக்கமானது. எவ்வாறு மேற்கு வங்க மக்களும், கிழக்கு வங்காள மக்களும் (இன்றைய பங்களாதேஷ்) மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்று பட்டவர்களாக இருப்பதோடு இதனை ஒப்பிடலாமென எண்ணுகின்றேன்.

இந்தியா ஒரு படை நடவடிக்கை மூலம் பங்களாதேசைப் பிரித்ததுபோல இலங்கைத் தீவிலும் ஒரு படை நடவடிக்கையை மேற்கொண்டு பிரிவினையை ஏற்படுத்தும் என்ற என்ற நம்பிக்கை 1985 யூலை திம்புப் பேச்சுவார்த்தைக்கு மேலே நீள முடியாது என்றே நான் நம்புகின்றேன்.

தமிழர் தரப்பால் திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகளையும் எடுத்துக் கொள்வோம்.

01. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள்.

02. தமிழ் மக்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

03. தமிழர் பிரதேசத்துக்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

04. சகல தமிழ் மக்களுக்கும் முழுமையான குடியுரிமையும் மற்றும் அடிப்படையான உரிமைகளும் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

திம்புவில் முன் வைக்கப்பட்ட மேற்கூறிய நான்கு அடிப்படைக் கோட்பாடுகளும் சிறிலங்கா அரச பேச்சவார்த்தைக் குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனாவால் நிராகரிக்கப் பட்டது. தொடர்ச்சியாக ஆறு நாட்கள் நிகழ்ந்த பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த காரணத்தால் பேச்சுக்கள் முறிந்து விடும் என்ற கட்டத்தை அடைந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தை முறிவுக்குத் தமிழ் தரப்பே காரணமெனப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகித்த இந்திய வெறியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி குற்றம் சாட்டுகிறார். இதிலிருந்து தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய நிலைப்பாடு என்ன ? என்பதை அன்றே ஊகித்துக் கொள்ளலாம்.

'ஐ.பி.கே.எவ்' உடனான மோதல் மற்றும் ரஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை என்பவற்றின் விளைவாக இந்தியாவின் கதவுகள் மூடப்பட்டது உண்மையே! ஆனால் போராளி அமைப்புக்கள் இந்தியா தொடர்பாக எவ்வாறான நிலைப்பாட்டோடு இருந்தன என்பதற்குச் சில உதாரணங்களைத் தேடலாம். ஒரு அமைப்பு 1983 இலே 'வங்கம் தந்த பாடம்' என்ற நூலை அச்சிட்டு வெளியிடுகிறது. 1985 இலே யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 'மாயமான்' என்ற நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள். இந்த நூலும், அரங்கேறிய நாடகப் பிரதியும் இந்தியாவின் இலங்கைத் தமிழர்கள் பற்றிய அணுகுமுறை தொடர்பான அச்ச உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவே 'சிந்தாந்த' தளத்தில் நோக்கலாம்.

எனவே தமிழ் தேசிய சக்திகள் தங்களது சுய நிர்ணயம் என்ற கோட்பாட்டிலே உறுதியாக இருக்கும் பட்சத்தில் இந்தியாவுடனான நிரந்தரப் பிரிவு என்பது காலம் தாழ்த்தியாவது நடந்திருக்க வேண்டியதொன்றுதான். இதற்காக நான் என்றுமே முன்வைக்கும் வாதம் 'திலீபன்' இந்திய அரசிடம் முன்வைத்த சாதாரண கோரிக்கைகளையே! 'திலீபன்' முன்வைத்த கோரிக்கைகள் பின்வருமாறு

01. பயங்கரவதாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிக விடுதலை.

02. தமிழர் பிரதேசங்களில் 'புனர்வாழ்வு' என்ற பெயரில் தமிழர் பிரதேசங்களில் நிகழ்ந்து வரும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல்.

03. இடைக்கால மாகாண சபையை நிறுவும் வரை அனைத்து புனர்வாழ்வுத் திட்டங்களையும் இடை நிறுத்துதல்.

04. வட கிழக்கு மாகாணங்களிலே புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்களின் நிர்மாணங்களை நிறுத்துதல்.

05. பொதுமக்களது வாழ்விடங்கள், பாடசாலைகள், கோவில்கள், கிராமங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்திருந்த அரச படையினர் தமது வழமையான நிலைகளுக்குத் திரும்புதல், சிறிலங்கா அரசினால் ஆயுதமயப்படுத்தப்பட்ட ஊர்காவல் படையினர் இந்திய அமைதிகாக்கும் படையின் முன்னிலையில் கலைக்கப்படுதல்.

இந்தச் சாதாரண கோரிக்கைகளையே இந்திய அரசினால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து நடைமுறைப்படுத்த முடியவில்லை. பின் எவ்வாறு குறைந்த பட்சமாக மட்டுப்படுத்தப்பட்ட 'சுயாட்சியை' உள்ளடக்கிய தமிழ் மாநிலத்துக்கான 'சமஷ்டியை' உருவாக்க முடியும் ? ஆகவே பிரச்சினை இழுபடுகிறது என்று 'மிதவாதிகள்' உரைக்கின்றார்கள்!.

('காத்திருத்தலின்' தொடர்ச்சி அடுத்த ஏட்டிலும் வரும்)

Come Directly to a...

TAMIL SPEAKING BARRISTER

For expert legal advice & representation in Criminal and Immigration law

Criminal Litigation
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

Immigration
- Nationality
- Asylum
- EU Law
- Visas

(Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

Services Includes:

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

For Appointments

Contact: **07837 450397**

Email: **mganesan@furnivallaw.co.uk**

www.confiscationbarrister.com

Chambers:

Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.

Muthupandi Ganesan

முத்துப்பாண்டி கணேசன்

LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)

Barrister-at-Law [Direct Access]

பாக்கிஸ்தானில் இந்து மாகடலின் படைத்துறைச் சமநிலையை குலைத்த சீனா

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

அரபுக் கடலின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பாக்கிஸ்த்தானின் குவாடர் துறை முகத்தை நிர்வகிக்கும்பொறுப்பைசீன நிறுவன மான China Overseas Port Holdings இடம் 30-01-2013 கையளிக்கப்பட்டுள்ளது. சீனாவின் முத்து மாலைத் திட்டத்தில் ஒன்றான குவாடர் துறை முகத்தை கடந்த ஐந்து ஆண்டுகள் Port of Singapore Authority என்றநிறுவனம் நிர்வகித்து வந்தது.

◆ முத்துமாலை என்னும் சுருக்குக் கயிறு

இலங்கையில் அம்பாந்தோட்டை, பாக்கிஸ் தானில் குவாடர், மியன்மார் எனப்படும் பர்மா வில் சிட்வே, பங்களாதேசத்தில் சிட்கொங் ஆகிய நான்கு இடங்களிலும் சீனா அமைத் துள்ள துறைமுகங்கள் இந்தியாவிற்கு எதிராக சீனா முத்துமாலைத் திட்டம் என்னும் பெயரில் போடப்படும் சுருக்குக்கயிறாகும். இந்தியாவின் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த நகரான மும் பாயக்கு அண்மையில் குவாடர் துறைமுகம் இருக்கிறது. குவாடர் துறைமுகமும் தென் இலங்கையில் இருக்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் போல் ஓர் ஆழ்கடல் துறை முகமாகும். குவாடர் துறைமுகத்தை நிர்மாணிப் பதற்கான செலவான$248 மில்லியன்களில் 75% சீனாவால் செலவளிக்கப்பட்டது.

◆ இந்துமாகடல் இந்தியாவின் கடல் அல்ல

குவாடர் துறைமுகத்தை சீனநிறுவனம் பொறுப்பேற்ற செய்தி வந்தவுடன் CCS எனப்படும் இந்தியாவின் பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Security) அவசரமாகக் கூட்டப்பட்டது. இது இந்தியாவிற்கு குவாடர் துறைமுகத்தால் ஏற் பட்டுள்ள ஆபத்தின் தன்மையைக் காட்டு கிறது. குவாடர் துறைமுகத்தில் இருந்து சீனா வால் இந்தியாவின் மேற்குக் கரையில் நட மாடும் கப்பல்களை வேவு பார்க்க முடியும். இந்துமாகடல் இந்தியாவின் கடல் அல்ல என் பதே சீனாவின் நிலைப்பாடு. இந்துமாகடலிலும் அரபியக் கடலிலும் சீனாவின் கடற்படைகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு குவாடர், அம்பாந் தோட்டை, சிட்டகொங் ஆகியவற்றில் சீனக் கடற்படைத் தளங்கள் வழிவகுக்கும்.பர்மாவின் சிட்வே துறைமுகத்தில் சீனக் கடற்படைத் தளம் அமைந்தால் அது இந்தியாவிற்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் பசுபிக் நாடுகளுக் கும் இடையிலானவர்த்தகத்திற்கு அச்சுறுத்த லாகும். சீனாகுவாடர் துறைமுகத்தில் இருந்து சீனாவிற்கான நெடுஞ்சாலையையும் உரு வாக்க பாக்கிஸ்த்தானுடன் இணங்கியுள்ளது. 900 கிமீ (550 மைல்கள்) நீளமான இப்பாதை 4,693 மீற்றர் (15,397அடி) உயரமலைத்தொடரைக் கடந்து செல்லவேண்டிய ஒரு சிரமமானபாதை யாகும். இந்துமாக்கடலூடானதனது வழங்கற் பாதைக்கு மாற்றீடானஒரு பதையாக சீனா இதைக் கருதுகிறது. இப் பாதை பாக்கிஸ் தானை சீனாவின் ஒரு செய்மதி நாடாக்கிவிடும்.

◆ ஹோமஸ் நீரிணை

குவாடர் துறைமுகத்தை சீனா படைத் துறை மயமாக்கும் நிலையில் அது இந்தியாவிற்கு மட்டுமல்ல யுனைட்டெட் அரபுஎமிரேட், ஓமான், ஈரான் போன்ற நாடுகளுக்கும் சவாலாக அமை யும். அத்துடன் எரிபொருள் விநியோகத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த ஹோமஸ் நீரிணையையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கு கிறது. கடல் மூலமானஉலக எரிபொருள் வழங் கலில் 40% ஈரானிற்கு அண்மையில் உள்ள ஹொமஸ் நீரிணையூடாக நடக்கிறது. உலகின் மொத்த எண்ணை வழங்கலில் இது 20% ஆகும். நாளொன்றிற்கு 15 எண்ணை தாங்கிக் கப்பல்கள் இதனூடாக பயணம் செய்கின்றன. சவுதி அரேபியா, ஈராக், குவைத், பாரெய்ன், கட்டார், துபாய், போன்ற நாடுகளில் இருந்து ஏற்றுமதியாகும் எரிபொருள் ஹோமஸ் நீரிணையூடாகவே நடக்கின்றது. அமெரிக்கக் கடற்படையினர் ஹோமஸ் நீரிணையில் தமது பெரிய விமானம் தாங்கிக் கப்பல்களை நடமாட விட்டு தமது கண்காணிப்பின் கீழ் வைத்துள் ளனர். சீனாவிற்கான எரிபொருள் வழங்கலில் 70%ஹோமஸ் நீரிணையூடாகச் செல்வதால் அது சீனாவிற்கும் ஒருமுக்கியத்துவம் வாய்த தாகஅமைகிறது. தற்போது அமெரிக்கக் கடற் படை அங்கு ஆதிக்கம் செலுத்திவருகிறது.

◆ ஈரானியத் துறைமுகத்திற்குப் போட்டி

குவாடர் துறைமுகத்தை சீனா படைத்தளம், மேற்குச் சீனாவிற்கான வழங்கற் பாதை முனை யம்,வர்த்தகவிருத்தி ஆகியவற்றிற்குப் பயன் படுத்தலாம். குவாடர் துறைமுகம் வர்த்தக ரீதி யில் வளர்ச்சியும் முக்கியத்துவமும் பெறும் போது அது ஈரானின் சபஹார் துறைமுகத் திற்குச் சவாலாகஅமையலாம். ஈரான் - ஈராக் போரின் ஹோமஸ் நீரிணையூடானஎரிபொருள் ஏற்றுமதி தடைபட்ட போது ஈரான் சபஹார் துறைமுகத்தையும் அதை அண்டியுள்ள பிர தேசத்தையும் பெருமளவு அபிவிருத்தி செய்து வருகிறது. 1992இல் அங்கு ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தையும் உருவாக்கியது. 2002இல் அங்கு ஒரு பன்னாட்டுப் பலகலைக்கழகத்தையும் உரு வாக்கியது. சபஹாரில் இருந்து இந்தியா, இரசியா, ஆப்கானிஸ்த்தான் ஆகிய நாடு களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத் தும் திட்டத்தில் இந்தியாவும் ஈரானுடன் இணைந்து செயற்பட்டது. கடற்படுக்கையூடாக சபஹாரில் இருந்து இந்தியாவிற்கு குழாய் களூடாக எரிவாயுவிநியோகத் திட்டமும் அதில் அடக்கம். ஆனால் சபஹார் துறைமுகம் ஈரானின் பெரிய மாகாணமான சிஸ்ரன் - பலுச்சிஸ்த்தா னில் இருக்கிறது. சியா முஸ்லிம் நாடான ஈரா னின் சிஸ்ரன் - பலுச்சிஸ்த்தானில் சுனி முஸ்லிம் களே பெரும்பானமையானராக இருக்கின்றனர். இதனால் இங்கு பிரிவினை தோன்றலாம் என்ற அச்சத்தில் ஈரான் தயக்கம் காட்டுகிறது.

◆ உடனடி ஆபத்து இல்லை ஆனால் நீண்டகாலப் பேராபத்து

குவாடர் துறைமுகம் சரியானபாவனைக்கு வர இன்னும் பலகாலம் எடுக்கும் எனக் கூறப் படுகிறது. குவாடர் துறைமுகத்திற்குத் தேவை யான மற்ற வசதிகளான போக்குவரத்து வசதி, பாரியசேமிப்புக் கிடங்குகள் போன்றவை இன்னும் அங்கு உருவாக்கப்படவில்லை. இவை யாவற்றையும் அமைத்துகுவாடர் துறமுகத்தை ஒருபாரியகடற்படைத் தளமாகமாற்ற இன்னும் சிலஆண்டுகள் எடுக்கும் எனப்படுகிறது. சீனா நீண்டகாலத் திட்டம் போட்டுச் செயற்படு வதில் திறமைமிக்கது. ஆழ்கடல் துறைமுக மான குவாடரில் சீனாவால் பாரிய நீர் மூழ்கிக் கப்பல்களைநிறுத்தமுடியும். சீனா தனது நீர்மூழ்கிக் கப்பல்களின் தொகையை பெருக்கிவருவதாகக் கருதப்படுகிறது. சீனா தற்போது ஆசியாவில் ஐந்தாவது பெரிய கடற் படை வலிமையை மட்டும் கொண்டிருக்கிறது. இதன் கடற்படைவலிமையிலும் பார்க்க இந்தி யாவின் வலிமைபெரியதுஎனப்படுகிறது. ஆசி யாவில் ஜப்பான், தென் கொரியா, அமெரிக்கா போன்றவற்றின் கடற்படை வலிமையும் சீனா விலும் பார்க்கப் பெரியதாகும். சீனா குவாட ரைப்பொறுப்பேற்கப்போகிறதுஎன்ற அறிவுப்பு ஒரு எதிர்பார்த்திராத அறிவிப்புப் போல் இருக்கிறது. இந்துமாக்கடல் பிராந்தியத்தின் படைத்துறைச் சமநிலையை இது பாதிக்கிறது. இதை மீள் சமநிலைக்குக் கொண்டு செல்ல இந்தியா இனிக் கடுமையாக உழைக்க வேண்டி யிருக்கிறது. அம்பாந்தோட்டையிலோ அல்லது இலங்கையில் வேறு எங்கேயோ இனி சீனா எக் காரணம் கொண்டும் ஒரு படைத் தளம் அமைக் காமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப் பந்தம் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக இந்தியா அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் சீனக் கடல் பிராந்திய நாடுகளுடன் இணைந்து சீனாவை தென் சீனக் கடலிலும் கிழக்குச் சீனக் கடலிலும் வைத்தே முடக்குவது நீண்ட கால அடிப்படையில் இந்தியாவிற்கு பெரும் நன்மை யாக அமையும்.

◆ சீனா அகலக் கால் வைக்கிறதா?

தென் சீனக் கடலிலிலும் கிழக்குச் சீனக் கடலிலும் பல நாடுகளுடன் முறுகிக் கொண்டி ருக்கும் சீனா அரபுக் கடலிலும் ஒரு முறுகல் நிலையை உருவாக்குவது சீனாஅகலக் கால் வைக்கிறதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

◆ அமெரிக்காவிடமிருந்து பாக்கிஸ்த்தான் விலகுகிறதா?

அண்மைக் காலங்களாக சியா முஸ்லிம் களுக்கும் அமெரிக்காவிற்குமிடையிலான முறு கல்கள் தீவிரமடைந்துவரும் நிலையில் சில சுனி முஸ்லிம் நாடுகள் அமெரிக்காவுடன் நெருக்கத் தையும் உறவையும் அதிகரித்துவருகின்றன. சுனி முஸ்லிம் நாடான பாக்கிஸ்த்தான் சியா முஸ்லிம் நாடான ஈரானுடன் பெரும் எரிபொருள் விநியோகஒப்பந்தத்தை அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறிசெய்துள்ளது. அத்துடன் பாக்கிஸ்த்தானூடாக ஈரானில் இருந்து சீன ாவிற்கு எரிபொருள் விநியோகக் குழாய் கள் தொடுக்கும் திட்டமும் சீனாவிடம் இருக் கிறது. சீனா, பாக்கிஸ்த்தான், ஈரானஆகிய மூன்று நாடுகளும் நெருங்கி படைத்துறை ரீதி யில் ஒத்துழத்தால் அது வளை குடாவில் அமெரிக்காவிற்கும் இந்தியாவின் மேற்குக் கரைக்கும் பெரும் சவாலாகஅமையும். இப்படி ஒருசூழ்நிலை உருவாகும்போதுகுவாடர் துறை முகம் இருக்கும் பாலுச்சிஸ்த்தான் மாகாணத் தில் பிரிவினைவாதத்தை அமெரிக்கா ஊக்கு வித்து பாக்கிஸ்தானில் பிரச்சனையை ஏற்படுத் தும். பாலுச்சிஸ்த்தான் மாகாணம் கனிம வளங்கள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். அங்கு வாழும் மக்கள் பாக்கிஸ்த்தானிய அரசால் பாகுபாடு காட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகிறார் கள். இவர்கள் இந்தியாவை நேசிக்கிறார்கள். ஆப்கானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு பாக்கிஸ்த்தானுடாகவிநியோகங் கள் செல்லவதை பாக்கிஸ்தானிய அரசு தடை செய்திருந்த போது பாலுச்சிஸ்த்தானின் சுய நிர்ண்ய உரிமையை அங்கீகரிப்போம் என்று சிலஅமெரிக்க முதவை உறுப்பினர்கள் மிரட்டி னார்கள். பாலுச்சிஸ்த்தான் மக்கள் தமது தாயக நிலங்களை சீனாவிடம் கையளிப்பதை எதிர்த்து வருகிறார்கள்.

◆ சீனாவின் ஆப்பை எப்படி இந்தியா சமாளிக்கும்?

மும்பாயிலும் குஜராத் மாநிலத்திலும் இந்தியா வலிமை மிக்ககடற்படைத் தளங்களை கட்டி எழுப்ப வேண்டி வரும். இதற்காக இந்தியா அமெரிக்காவை நோக்கி தனது தந்திரோபாய நகர்வுகளை நகர்த்த வேண்டிவரும்.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email:
admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

Endorsing Religious-Nationalism On Independence Day

By : M K Bhadrakumar

"Have you learned nothing from history?"Freud (The Future of an Illusion)

Mahinda Rajapaksa's Independence Day speech contained three main themes/ideas.

It reiterated national sovereignty, which, in today'sSri Lanka, is a cover for Rajapaksa absolutism. The Siblings want a free-hand, and, as the impeachment-travesty demonstrated, they abhor even judicial restrictions.

According to their worldview, the Sinhala-Buddhists can never be racists; racism is a malady which can affect only the minorities.

The speech also indicated that devolution is not on. The Rajapaksas do not want even a minute-dilution of their power; they are as allergic to separation of powers as they are to devolution. Their current concern is how best to do to the 13th Amendment what was done to the 17th Amendment, the Chief Justice and judicial independence.

Mahinda's speech also contained a tacit acceptance of the anti-pluralist version of Lanka's past and a coded endorsement of the Sinhala supremacist vision of Lanka's future peddled by the JHU and the Bodu Bala Sena (BBS).

The President began his speech with a brief history of Trincomalee and it was a Sinhala-Buddhist history. It need not have been. Had he wanted to, he could have used proven historical facts to highlight the rich pluralist past of Trincomalee. For instance, when he said, "the monks who brought higher-ordination from the ancient land of Siam also arrived at Trincomalee", he could have added that those monks came as a result of a mission sent to Siamby the non-Sinhala monarch Kirthi Sri Rajasinghe (the second Nayakkara ruler of the KandyanKingdom). He could have also mentioned that this momentous event could not have happened without the cooperation of the Dutch because Trincomalee harbour was under Dutch control during that period[i]. That one incident could have been used to showcase the rich pluralist history of Trincomalee and the momentous non-Sinhala contributions to the protection/ promotion of Lankan Buddhism. Instead it was depicted as exclusively a Sinhala-Buddhist triumph.

At a BBS meeting in Matale (December 2012), the organisation's titular head Ven. Kirama Wimalajothi Thero said "This is a Sinhala Buddhist country; we created its history, culture and civilisation"[ii]. The President could have torn this dangerous myth apart by allowing real history into his narrative. For instance, he could have mentioned that the same non-Sinhala Keerthi Sri Rajasinghe also built the inner temple of theTemple of the Tooth; or mentioned the ancient Koneswarm Kovil of Trincomalee

Alternatively he could have showcased the secular history of Trincomalee; such as its mention in Claudius Ptolemy's Geographica; or its connections with the famed world-traveller Marco Polo.

The President's decision to ignore the pluralist and the secular histories of Trincomalee and to give that multi-ethnic/religious city an exclusively Sinhala-Buddhist past was not an accident, as is demonstrated by his subsequent mention of the controversial Trincomalee Buddha statue: "You will recall what the LTTE Tigers subsequently did to gain control of this port and city that had become a nerve centre in the Indian Ocean. The Buddha Statue at Trincomalee was protected with barbed wire fencing round it. There was no peace or freedom even for the sacred statue".

The Trincomalee Buddha statue was not a creation of an ancient Sinhala king. It was installed, literally overnight, by the Three Wheeler Drivers Association of Trincomalee, in 2005. The pre-fabricated statue was transported and set up near the Trincomalee bus-stand under cover of darkness. The JHU was believed to have been the prime-mover behind this 'guerrilla-style operation' and a section of the Navy reportedly backed it.

Trincomalee city was already seething with ethno-religious tensions, stoked by the Tigers and by Sinhala-Buddhist extremists. The sudden appearance of a huge Buddha statue intensified these tensions to a fever-pitch. The Tamils called a protest-hartal; Tamil and Sinhala mobs clashed causing one death. The Muslims, who held the demographic balance, sided with the Sinhalese.

The sudden erection of the statue was not only an act of studied provocation. As it was installed on state-land sans permission, it was also illegal. As the Town hovered on the edge of calamity, the Attorney General filed a case, seeking judicial permission to remove all unauthorised religious structures in the town. The Trincomalee magistrate granted the permission.

The judicial order was loudly decried by Sinhala supremacists of all stripes; JHU monk-parliamentarians disrupted parliamentary proceedings. The Chief Incumbent of the China Bay Temple petitioned the Supreme Court, against the AG and the UDA. Eventually a bench headed by Chief Justice Sarath N Silva gave the statue legal approval.

The Trincomalee Buddha statue is thus not a symbol of consensual peace or ethno-religious harmony. It was installed for the most profane of reasons, by opportunistic and voracious Sinhala politicians (lay and ordained) who misuse Buddhism to gain/hold power. It is also a symbol of Sinhala supremacism and of a Sinhala – as opposed to a Lankan – peace. The President's needless endorsement of this divisive structure in his Independence Day speech is a coded-acceptance of the JHU/BBS vision of a Sinhala-supremacist Sri Lanka.

Sinhala supremacists, even at their most venomously anti-minority, do not think they are being racist. According to their worldview, the Sinhala-Buddhists can never be racists; racism is a malady which can affect only the minorities. Thus there is no cognitive-dissonance in the likes of BBS/JHU calling themselves anti-racists, while accusing their minority-victims of being racists. Or in the fact that the BBS's Facebook page contains resounding rejections of racism, cheek-by-jowl with crude anti-minority ranting[iii].

Or that President Rajapaksa rejected racism in a speech dripping with Sinhala-Buddhist supremacist symbolism.

Doing Business with Fanatics

The BBS, like its ideological progenitor the JHU, belongs to the global trend of temporal religious revivalism, which aims at making the state more religious and religion more political. This revanchist movement seeks to negate one of the most important legacies of the Enlightenment and the French Revolution – the secularisation of politics.

In the post-Socialist world, religious over-determination had trumped ethnic-over-determination. Every major religion has staked out its 'natural/hereditary' territory and aims at claiming/reclaiming it for its beliefs and values – whether it is the American evangelicals, the ultra-right Catholics in Africa/South America, Afghan/Pakistani Taliban, the BJP in India or the JHU/BBS in Sri Lanka. They promote a brand of anti-secular, religious nationalism/patriotism based on the trinity of race-religion-armed forces. They promote a 'politics of salvation' (in the here-and-now, rather than in after-life). Their version of democracy is rule of, by and for the 'chosen people', chosen on the basis of primordial identities.

Bringing religion into the public sphere is a dangerous venture, politically, economically and socially. Extremism knows no limits; its constant search for the 'other' can threaten the very existence of pluralist societies, such as Sri Lanka.

The Rajapaksas do not want even a minute-dilution of their power; they are as allergic to separation of powers as they are to devolution.

Currently the Rajapaksas might be puppet-masters and the BBS the puppet. The Siblings might be intending to use the BBS, as Washing tonthought to use Islamic extremism against the Soviets inAfghanistan; and the Mossad's plan to use the Hamas to weaken the secular PLO. But it is a dangerous business, doing business with fanatics. Fanatics inhabit a different mental universe, a psychological-wasteland in which reason does not exist, excess is the norm and barbarity is permitted, against the 'Inimical-Other'.

Extremism knows no limits; its constant search for the 'other' can threaten the very existence of pluralist societies, such as Sri Lanka.

And once summoned, fanatics assume a life of their own, uncontrollable and uncontainable, even by their one-time masters.

Courtesy: Colombo Telegraph

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா

The Sri Lankan Tamil plot thickens

By : M K Bhadrakumar

A Domestic and western pressure will build up in the coming weeks on Delhi to back a US-sponsored resolution against Sri Lanka coming up in the UN Human Rights Commission in Geneva.

The signs point toward a storm breaking out on the Sri Lankan question, as the month of March approaches. The United States said last Monday it would sponsor another resolution against Sri Lanka, for the second successive year, at the U.N. Human Rights Council (UNHRC) in March for failing to pursue those responsible for abuses as government forces were crushing Tamil rebels in 2009.

Speaking in Colombo on January 28, James Moore, deputy assistant secretary in the United States State Department, was quite blunt:

"The United States has decided to sponsor a procedural resolution at the March 2013 session of the UN Human Rights Council along with international partners. The resolution will be straightforward, it will be a procedural resolution, and it will build on the 2012 resolution, which called on Sri Lanka to do more to promote reconciliation and accountability. The resolution will ask the government of Sri Lanka to follow through on its own commitments to its people, including the implementation of the LLRC recommendations."

Another deputy assistant secretary in the state department Jane Zimmerman who was present at the media interaction in Colombo, brushed aside Colombo's contention that the process of reconciliation and rehabilitation of the Tamils is being successfully handled - "But you can't really have reconciliation without accountability."

The Sri Lanka government has reiterated that it won't cave in to the US pressure. A new stridency is appearing in Colombo's voice. The first move has been the slamming of the door on the face of a delegation of the International Bar Association which was planning to visit Sri Lanka, taking exception to the visitors' alleged intention of undertaking "activity surreptitiously which is of an intrusive nature to the sovereignty of Sri Lanka."

And now comes the big news that Sri Lanka President Mahinda Rajapaksa has spoken dismissively of the need to grant any more political autonomy for the Sri Lankan Tamils.

Rajapaksa also took a swipe at the US move to take up the war crimes issue at the United Nations. He said the UN Charter does not empower the world body to "interfere in the internal affairs of countries." He then added, "Sri Lanka's foreign policy is that of non-alignment. It is necessary for us to build a new era in foreign affairs based on this policy. This is essential for the freedom of Sri Lanka."

The thinly-veiled warning to Washington is clear - 'Back off, we intend to be non-aligned vis-à-vis the US' rebalancing to Asia.'

This is turning out to be a classic pantomime where the real plot is the great game rivalries in the Indian Ocean. China announced recently that the oil and gas pipelines connecting Yunnan with the Bay of Bengal would be operational in June. Again, the control of Gwadar port in Pakistan has passed onto the Chinese hands. Beijing plays down these developments, while perceptions matter in politics. And, at any rate, Sri Lanka becomes a crucial transportation hub for China in the emerging scenario that enables Beijing to break out of its "Malacca Dilemma".

The gathering storm would engulf India too. Delhi comes under strong compulsion to be seen championing the rights of the Sri Lankan Tamils. The potential of the Sri Lankan issue playing out in the southern Indian state of Tamil Nadu indeed worries the ruling Congress Party. Tamil Nadu sends 39 lawmakers to the 540-member Indian parliament, which could be a crucial contingent in the formation of the next coalition government in Delhi following the elections, which seem to be fast approaching.

Without doubt, China's influence in the South Asian region worries Delhi, although India's interest in identifying with the US' 'rebalancing' strategy would be minimal. The legitimacy of China's growing interests in the Indian Ocean region also cannot be ignored. The litmus test will be how far India's own interests come under threat.

Domestic and western pressure will build up in the coming weeks on Delhi to back the US-sponsored resolution coming up in the UN Human Rights Commission in Geneva. Without doubt, the US's resolution is part of a concerted western move. Britain is already invoking the "Commonwealth values." On the other hand, Delhi is savvy enough to know that Sri Lanka cannot be easily dislodged from its adamant position on the nationality question and, besides, annoying Colombo can only prove to be counterproductive.

And now comes the big news that Sri Lanka President Mahinda Rajapaksa has spoken dismissively of the need to grant any more political autonomy for the Sri Lankan Tamils.

Meanwhile, the Sri Lankans are also ace practitioners of diplomacy. Amidst all the tensions building up, Rajapaksa plans to visit India on February 8 - on a religious pilgrimage that takes him to the ancient Buddhist site of Bodh Gaya and the revered Hindu temple at Tirupati.

Courtesy: indrus.in

Shoptek .co.uk
A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ
USED SHOP SHELVING
large stock of used shop shelving
NEW SHOP SHELVING
1000mm GONDOLA BAY £146+VAT
Suppliers of New and Used Shop Shelving
From our Cash & Carry Warehouse
Shoptek .co.uk Tel: 01455 221512
Email: info@shoptek.co.uk

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó
உங்கள் பொருட்களை இங்கு வந்து பொதி செய்து கொள்ளலாம். உங்கள் இல்லம் வந்து பெற்று அனுப்பும் சேவையும் உண்டு.
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டகளப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
Removal Services & Airport Transport Services available
தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
Office: A2C Redlands, Croydon, CR5 2HT
TEL: 020 8668 0252 020 8646 5222
MOB: 07931 197 571 07939 550 397
www.permainternational.co.uk / www.jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk / info@jpnshippingltd.co.uk

GOOD NEWS FOR LAND LORDS
OUR CHEAPEST EVER BUILDING INSURANCE FOR LET PROPERTIES
DSS , UNOCCUPIED , STUDENTS LETS ARE WELCOME
CONTENTS , LEGAL EXPENSES AND RENT GUARANTEE
For immediate quotation and cover
Please Ring 020 8763 2221
We specialise in...
• HOME INSURANCE
• SHOP INSURANCE
• and All types of Insurance
ARM Associates 32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Srinivasan : 020 8763 2221

KIDS பேப்பர்

சிறுவர் பாடல்

காகம்

காகம்ஒன்று வந்தது
கார்கார் என்றது
வேகமாகச் சென்றது
வேலி முள்ளை எடுத்தது

புளிய மரத்துக் கிளையிலே
புதிய வீடு செய்தது
செல்லக் குஞ்சு தன்னையே
சேர்த் தணைத்துக் கொண்டது!

அம்மாபோட்ட தோசையை
அலகால் கொத்திச் சென்றது
தான் பெற்ற குஞ்சுக்குத்
தந்து தானும் உண்டது!

பாட்டி

பாட்டி எங்க பாட்டி
பழங்காலப் பாட்டி
சாந்த மான பாட்டி

பள்ளி செல்லாப் பாட்டி
பாடம் படியாய் பாட்டி
கள்ள மில்லாப் பாட்டி
கருணை மிக்க பாட்டி

காலு ரெண்டையும் நீட்டி
கதை சொல்லும் பாட்டி
பாலுச் சோறு ஊட்டி
படுக்க வைக்கும் பாட்டி!

சிறுவர் கவிதை

பூவைப்போல சிரிக்க வேணும்
பாப்பா-நீ
புகழ் பெறவே வளர வேணும்
பாப்பா!
நல்லவற்றைப் படிக்க வேணும்
பாப்பா-நீ
நடக்க வேணும் அதுபோல
பாப்பா!
அன்னை தந்தை தெய்வமுனக்கு
பாப்பா-நீ
அவர்கள் பாதம் பணிய வேணும்
பாப்பா!
கூடி வாழப் பழக வேணும் பாப்பா
நம் கூட்டுறவே நாட்டுயர்வு
பாப்பா!
உலகம் வியக்க உயர வேணும்
பாப்பா-நீ உறுதியோடு வெற்றி
பெறுக பாப்பா!

எறும்பும் ஈயும்

ஓர் ஈயும் எறும்பும் ஒரு நாள் தங்கள் பெருமைகளைப் பற்றி தங்களுக்குள் வாதம் செய்தன.

ஈ : ஊர்ந்து செல்லும் அற்பப் பூச்சி யாகிய உனக்கு என்னோடு ஒப்பிட்டுப் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா? நான் ஊர்வதில்லை பறவையைப் போல மேலே பறக்கிறேன்? அரண் மனைகளுக்குள் தங்கு தடையில்லா மல் போகிறேன்? ராஜாக்கள், சக்கர வர்த்திகள் முடிகள்மீத உட்காருகி றேன்? அழகான ராணிகளின் தாமரை போன்ற முகங்களில் அமருகிறேன். அது மட்டுமா? தெய்வங்களின் மூலஸ் தானங்களுக்கும் போகிறேன். அங்கே நான் ருசிபார்க்காத நெய்வேத்தியங்க ளே கிடையாது. எப்போர்ப்பட்ட விருந் தானாலும் சரி நான் போய் ருசி பார்க்கி றேன். உயர்ந்த சாப்பாடுகளையும், பானங்களையும் நான் அருந்துகிறேன். உன்னைப் போல ஒன்றிரண்டு பருக் கைகளைக் கொண்டு பல நாட்களைத் தள்ளுகிற வழக்கம் எனக்கில்லை.

எறும்பு : ரொம்ப அழகுதான். நான் சொல்லுகிறேன் கேள். உன் விருந்து களைப் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுகி றாய்! ஆனால், உனக்குச் சாப்பாடு எது என்பது உன் இஷ்டத்தைப் பொறுத்த தல்ல. சில சமயம் நீ சாப்பிடும் சாப் பாடு இருக்கிறதே, அப்பப்பா! யார் என்ன கொடுத்தாலும் நான் அதைத் தொடக்கூட மாட்டேன். என்னவோ ராஜாக்கள் மீது இருந்தாலும் சா?, கழுதைகள் மீது நீ இருந்தாலும் சரி நீ போய் அமர்ந்த உடனேயே வெறுப் புக் கொண்டு அவர்கள் உன்னை விரட்டுகிறார்கள். அப்புறம் நெய்வேத் தியங்கள் வேறு உனக்கு! அங்கெல் லாம் உன்னைப் பார்த்த உடனேயே என்ன வரவேற்பு! விரட்டு விரட்டென்று விரட்டுகிறார்கள். மழைக்காலங்களில் கூட என் உழைப்பினால் சேகரித்தவை களைச் சாப்பிட்டுக்கொண்டு நான் சௌகரியமாய் இருக்கிறேன்! ஆனால் நீயோ மழைக் காலங்களில் குளிரா லும், பட்டினியாலும் சாகிறாய்.

சரி உன்னுடன் பேசி என் நேரத்தை வீணாக்க நான் பிரியப்படவில்லை. பேசு வதால் என் வாயோ, வயிறோ நிரம்பப் போவதில்லை.

நீதி: உழைப்பின் பலனே
உண்மையான சுகம்.

வித்தியாசத்தைக் கண்டுபிடியுங்கள்

My Self

- My Name is Vigaashan.
- I am six years old.
- I live in South Harrow.
- Im in a year two
- My School is Called Roxeth.
- My Favourte sport is Football.
- My favourite football players are Messy and Rachel Yankey.
- My favourite subject is English
- My hobby is to get as many match attact
- My fashion is being a rock star.

Vigaashan Asokan

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், அனுப்பி வையுங்கள்.
G11, Lombard House, 2, Purley Way, Croydon, CR0 3JP மின்னஞ்சல் முகவரி : info@orupaper.com

Word Search

I	I	T	I	K	H	X	
O	R	T	A	Z	L	I	A
G	G	H	L	H	W	N	K
B	Y	A	P	P	A	L	K
A	W	M	L	A	M	M	A
N	C	P	Y	K	V	U	T
N	A	I	C	I	V	M	J
A	S	C	X	Y	M	M	M

Words: Subject: Relations
APPA, AMMA, AKKA, ANNA, THAMPI

Quotable Quotes

" A sweet child is the sweetest thing in nature."
Charles Lamp

" He who does not hope to win has already lost."
Jose Joaquin Olmendo

"Thinking well is wise; planning well , wiser; doing well wisest and best of all.'
Persian Proverb

Colouring - 187

Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

Web: www.facebook.com/Kalai.Kili

Issue 186 Winner
ம.சரணியா

சந்தோஷ்.ம

ம.சாருகா

சரணியா.ம

Asokan Rehasan

Bharathwaj.S

Vigaashan - A

Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.siruvarpaadal.blogspot.co.uk என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.

Web : www. siruvarpaadal. blogspot. co.uk

JSN BATHROOMS

MERLYN M · KUDOS · hansgrohe

KUDOS · GROHE · GRUNDFOS · Hudson Reed

WIDE RANGE OF BATHROOMS & SHOWERS

மாபெரும் சிறப்பு மலிவு விற்பனையைத் தவறவிடாதீர்கள்.

European Toilet & unit

£180

European Single sink with tap

45cm £79

55cm £89

Hansgrohe mixer taps

Start from £59

Thermostatic shower mixer

Start from £49

European bathroom suite

Start from £90

Sliding shower doors

CALL FOR PRICES

SPECIAL DISCOUNTS FROM MERLYN, KUDOS, & SANEUX SHOWERS

Thermostatic concealed shower mixer

1 option £150

2 option £170

ITALIAN FURNITURE Start from £256



FULL BATHROOM SUITE Start from £220

Free standing baths

CALL FOR PRICES

SPECIAL DISCOUNTS FROM SANEUX

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES
• MARBLE TILES • PORCELAIN TILES *ALL AT DISCOUNT PRICES*

JSN HEAT SUPPLIES LTD

• PLUMBING • ELECTRICALS • BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES

WATER SOFTENERS AVAILABLE ALL BRANDS

Heated towel rails 600x1000 start from £49

DISCOUNTED PRICES ON BOILERS, RADIATORS & UNDERFLOOR HEATING

WIDE RANGE OF BOILERS & RADIATORS IN STOCK

WE STOCK ALL MAKES OF BOILER
ALL MEGAFLOW SYSTEM BOILERS SUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES

TEL: 020 8427 0553

Ideal Standard · Roca · GROHE · mira · MAIN · Hudson Reed · AQUALUX · ARISTON · Armitage Shanks · AQUALISA · Vaillant · KESTON · Glow-worm · WORCESTER · saneux

148 PINNER ROAD, HARROW HA1 4JE TEL: 020 8427 6969

LEARNA
because every child is unique
Computer-Based Education Centres

உங்கள் குழந்தைகளுக்குள்
ஒளிந்திருக்கும் திறமைகளைக்
கண்டு பிடித்து அவர்கள்
எதிர்காலத்தைப் பிரகாசமாக்கிடுங்கள்

* தனிப்பட்ட மதிப்பீடு * கலந்துரையாடல் திறமை * ஊக்கப்படுத்துதல்

பிரித்தானிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 4-16 வயதுக்குட்பட்ட
பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மற்றும் கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன

உங்களது குழந்தைகளின் பெயரை Learnaவில் பதிவு செய்து அவர்களது அடுத்த நகர்வுக்கு சரியான வழியைக் காட்டுங்கள்

♦ Individualised ♦ Interactive ♦ Inspiring

FREE Assessment

• உங்கள் சிறார்களின் கல்வித் திறனை மேலும் மேம்படுத்தவும்....
• உங்கள் சிறார்கள் கல்வியில் சிறக்கவும்...
• நாளைய உலகின் சவால்களை வெல்லவும்...

5-6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

Learnies – because they are unique

www.learna.co.uk

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 0845 094 0061

Bringing Great food to Life

NO 1 Brand

BRAND Niru®

Quality you can taste

Niru Europe Ltd, Unit11, Mitcham Industrial Estate, 85 Streatham Road, Mitcham, Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

எய்தவர்களிருக்க அம்புகள் குற்றவாளிகளாகப் போகின்றன.

பாகம் 126

வழக்கம் போல நமது இலங்கைத் தீவு தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடி யிருக்கிறது. கொட்டும் மழைக்கு நடுவில் தமிழர் தாயகத்தின் துறைமுக நகரான திரு கோணமலையில் கொண்டாடப்பட்ட இலங்கைத் தீவின் 65ஆவது சுதந்திர தினத்தில் ஜனாதிபதி தனது உரையை ஆற்றி முடித்திருக்கிறார். இனமொழி வேறுபாடுகளற்ற சமவுரிமைச் சமூகமொன்று உருவாகிவிட்டால் தனித்தனி இனங்களுக்கான நிர்வாக ஆட்சியலகுகள் எதுவும் தேவையற்றவை என்ற அவரது பேச்சில் தமிழர்களின் சுயாட்சி யுரிமையையும் அதற்கான அவர்களது நீண்ட காலப் போராட்டங்களையும் மறுத்து மட்டம் தட்டும் போக்கே காணப்படுகிறது என்று ஹ்ந்து நாளிதழ் உட்பட பல செய்தி மூலங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

பிறகு ஏன் பாராளுமன்றத் தெரிவுக்குழு வொன்றை உருவாக்கி அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்குகொள்ள வருமாறு ஜனாதிபதி அழைக்கிறாரோ தெரியவில்லை. இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒற்றை யாட்சியின் கீழான சமவுரிமைக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதே தமது கொள்கை அல்லது முடிந்த முடிபு என்றால், பேச்சுவார்த் தையென்ற போர்வையில் வீண்செலவுகளும் நேரவிரயங்களும் எதற்காக? அரசியலில் இவை யெல்லாமே நாட்களைக் கடத்தி தமது ஆட்சி யதிகாரத்தை நீடித்துக் கொண்டே செல்வதற் கான பேய்க்காட்டல்கள்தானா?

ஆடத்தெரியாதவள் மேடை கோணலென் றாளாம் என்பதுபோல எதிலும் முன்னேற்றத் தைக் காட்டமுடியாத இலங்கையரசின் கையா லாகாத்தனத்திற்கு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களும் அன்னியச் சக்திகளுமே ஜனாதி பதியால் காரணங்களாக்கப்படுகின்றனர். சர் வதேச ரீதியில் நற்பெயரை இழந்துபோனவோர் நாடாக, அரசியல், பொருளாதார, சமூக அபி விருத்தியில் எதுவித முன்னேற்றங்களையும் சுயமாகக் காணாமல் வெறும் வெளிநாட்டு உதவித் திட்டங்க ளால் மட்டும் தனது உள்ளகக் கட்டு மானங்களை ஒருவாறு பேணிப் பாதுகாக்கும் அவலநிலையிற் தான் இலங்கையிருக்கிறது. உள் நாட்டுப் போரொன்றுக்கு முகங் கொடுக்க வேண்டியேற்பட்டதால் கிடைத்த சர்வதேச அனுதாபத்தை மட்டும் வைத்துக்கொண்டு இலங்கை ஓர் முடக் குதிரையாகச் சறுக்கி விழுந்த சாட்டில் தனது ஏனைய பலவீனங்களை மறைத்துக்கொண்டு காலத்தைக் கடத்துகின்றது.

தற்போது எங்கப்பன் குதிருக்குள் இல்லை யென்பது போல இலங்கையரசின் கபடநாடகம் வெளிப்பட்டுப் போயிருக்கிறது. தமிழர் தரப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்காமைக்குரிய கார ணத்தைத் தனது சுதந்திர தினஉரையின் மூலம் ஜனாதிபதி தானாகவே நியாயப்படுத்திச் சர்வ தேசத்தின் முன் வெளிக்காட்டியிருக்கிறார். பெரிய இடமென்று பிச்சைக்குப் போகக் கரி யைச் சுரண்டிக் கையிற் கொடுப்பது போலத் தான் தெரிவுக்குழுவும் தமிழர்களுக்கு ஊர்ப் பஞ்சாயத்து அல்லது கவர்னர்மாரின் கட்டைப் பஞ்சாயத்து என்று ஏதாவதொன்றைத் திணிக் கப்பார்க்கும் என்பது ஜனாதிபதியின் உரையில் மறைமுகமாகத் தொனிக்கிறது. சர்வதேசம் இதைப் புரிந்துகொள்ளுமோ தெரியாது. நிச் சயம் புரிந்துகொள்ளவேண்டும்.

யானைப் பசிக்குச் சோளப்பொரியைக் கொடுப்பது போல தமிழீழத்தாயகமென்கின்ற இலட்சிய வேட்கையோடு போராடி ஆயிரக் கணக்கில் தமது இன்னுயிர்களை ஈகம்செய்த தமிழினத்திற்கு அரசு உருவாக்கிய தெரிவுக் குழு வழங்கப்போகும் தீர்வும் ஏதோவொரு ஊர்ப்பஞ்சாயத்து நிர்வாகமுறையாகத்தான் இருக்கப்போகிறது. அரசின் தற்போதைய செயற்திட்டங்கள் அதன் பேரினவாதம் சார்ந்த எதிர்கால உள்நோக்கங்களை சர்வதேசம் நன்கு மதிப்பிட வழிசெய்கிறது.

திவிநெகும சட்டத்தின்மூலம் மாகாணசபை களின் அபிவிருத்திச்செயற்பாடுகளை அதிகார சபைகளுக்குள் முடக்கி மாகாணசபைகளைச் செயலற்றதாக்குவது, முடிந்தால் 13வது திருத்தச் சட்டத்தையே இல்லாமலாக்கி கொஞ்ச நஞ்சமாவது மிஞ்சிக் கிடக்கும் சிறு பான்மையினரின் பிரதேச அதிகாரங்களை ஒழித்துவிடுவது, தேசியகீதத்தைத் தமிழிற் பாடுவதை இல்லாமலாக்குவது என்றெல்லாம் தொடங்கித் தற்போது, இராணுவ அதிகாரி களாயிருந்து வடகிழக்கு மாகாணங்களின் கவர் னர்களாகியிருப்போரின் கட்டைப் பஞ்சாயத் திற்குள் அரசகாணிகளைப் பங்கீடுசெய்யும் அதிகாரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

வடபகுதிப் பிரதேச செயலர்களின் நிர்வாக அதிகாரம் இதனாற் பறிக்கப்பட்டு இராணுவ அடக்கு முறையின் கீழான நிர்வாக அலகு களை பரவலாக்கும் செயற்திட்டங்கள் நடை முறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. இத்தனை சூழ்ச்சிகளையும் செய்து இலங்கையில் தமிழர் களின் நியாயமான ஆட்சியுரிமைகளை அழித் தொழிக்கும் சிங்களப் பெரும்பான்மையரசு, அதனைத்தட்டிக் கேட்க முயலும் சர்வதேச சக்திகளையும், புலம்பெயர் தமிழ் அமைப்புக் களையும் குற்றம்சாட்டுகிறது.

சிறுபான்மையினருக்கெதிரான இத்தகைய கபடத்தனமான நடவடிக்கைகளைச் செயற் படுத்திக்கொண்டு இந்தியா, அமெரிக்கா போன்றநாடுகளுடன் வெற்றிகரமாக இருதரப்பு ராஜதந்திர உறவுகளைப் பேண முயற்சிக்கும் இலங்கையரசிற்கு அடுத்த புயலமுக்கம் ஜெனி வாவில் உருவாகிக்கொண்டிருப்பதாகப் பலரும் எதிர்வு கூறுகிறார்கள்.

உண்மையில் ஜெனிவாவில் இலங்கைக் கெதிராக என்ன தீர்மானம் கொண்டுவரப் படவிக்கிறது என்பதில் யாரிடமும் தெளிவான தகவல்களில்லை. அமெரிக்கா கொண்டுவர இருக்கும் தீர்மானத்தைக் கண்ணை மூடிக் கொண்டு ஒருநாடும் ஆதரிக்கப்போவதில்லை. தீர்மானத்தின் நகலை ஒருமுறை படித்துப் பார்த்த பின்னரே அதனை ஆதரிப்பதா இல் லையா? என்பதைச் சம்பந்தப்பட்ட நாடுகள் முடிவுசெய்யும். சென்ற முறை ஐக்கிய அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தின் நகலை இந்தியா பரிசீலனை செய்து அதிற் சில திருத்தங்களைச் செய்ய அமெரிக்காவை வற்புறுத்தியது. அமெரிக்காவும் திருத்தப் பிரேரணைகளை ஏற்றுக்கொண்டதால் இந் தியாவின் அனுசரணையுடனும், ஏனைய நேச நாடுகளின் ஆதரவுடனும் பிரேரணை நிறை வேற்றப்பட்டது.

ஆனால் இன்றுவரை, கொண்டுவரப்பட்ட பிரேரணைகளுக்கு இலங்கை எவ்வாறு தூண் டற்பேறடைந்தது? பிரேரணையின் எந்த எந்த அம்சங்களில் முன்னேற்றகரமான செயற் பாடுகளை நடைமுறைப் படுத்தியது என்பது பற்றிய போதிய விபரங்களில்லை. சிலவேளை முன்னைய ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக ராஜதந்திர ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க நடை முறைகளில் இலங்கை செயற்பட்டிருக்கவும் கூடும். அதனால் தறபோது கொண்டுவரப்பட விருக்கும் தீர்மானத்தில் என்ன இருக்கப் போகிறது? அது இலங்கையை மேலும் நெருக் குதலுக்கு உள்ளாக்கப்போகிறதா? அல்லது சற்று ஆசுவாசப்படுத்தப் போகிறதா? இந்தியா குறித்த தீர்மானத்தையிட்டு என்ன செய்யப் போகிறது? என்ற கேள்விகளுக்கெல்லாம் சரி யான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை. யாரும் இதுபற்றி எதிர்வு கூறவும் முடியாது.

சென்ற முறையும் இலங்கை நெருக்குவாரத் துக்கு உள்ளாகப்...

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் மனிதவுரிமைச்சபையின் 22வது கூட்டத் தொடரில் இலங்கை தீவு விவகாரம் விவாதிக்கப் படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அண்மையில் ஜெனிவாவிற்கு சென்று ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரித்தானியக்கிளையுடன் இணைந்து செயற்படும் இளம் செயற்பாட்டாளர் சசிதர் மகேஸ்வரனை ஒரு பேப்பர் செவ்வி கண்டது. இச்செவ்வியில் சசிதர் எம்முடன் பகிர்ந்து கொண்டவற்றை இங்கு தருகிறோம்:

ஒரு பேப்பர்: எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கிற ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் கூட்டத்தொடரில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச விசாரணை கொண்டு வருமளவுக்கு கனதியான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவிருப்பதாக ஊடகங்களில் கருத்துகள் வெளியிடப்படுகின்றன. ஏதாவது ஆக்க பூர்வமாக நடைபெறும் என நாம் எதிர் பார்க்கலாமா?

சசிதர்: ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் சிறிலங்காவிற்கு ஆதரவாக செயற்பட்டுவந்த சீனா, இரஷ்சியா, கியுபா ஆகியவற்றின் அங்கத்துவம் 2012 ம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்து விட்டது. இந்நிலையில் மேற்கு நாடுகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. மனிதவுரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களின் பாதுகாவலர்கள் என்ற தமது நிலையை தக்கவைப்பதற்கு, ஒரு அர்த்தபுஸ்டியான தீர்மானத்தை முன்வைக்கவேண்டியவையாக இந்நாடுகள் உள்ளன. தமிழர்களுக்கு உதவுவதற்காக என்றில்லாவிட்டாலும், மனிதவுரிமையின் பாதுகாவலர்களாக தம்மை நிலை நாட்டுவதற்காக ஆவது மேற்கு நாடுகள் உருப்படியான ஒரு தீர்மானத்தை முன்வைக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பு பலரிடமும் காணப்படுகிறது.

ஒரு பேப்பர்: மனிதவுரிமைச்சபையில் உள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகள் அணியில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா தவிர்ந்த மற்றைய நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் (ஆக மொத்தம் 12 நாடுகள்) சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு ஆதரவு வழங்கும் என்று பரவலாக நம்பப் படுகிறது. இது பற்றி நீங்கள் அறிவீர்களா?

சசிதர்: பல்வேறுமட்டங்களிலும் உள்ள அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியதிலிருந்து, பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இலங்கைத் தீவில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் ஐ.நா. விசாரணை செய்ய வேண்டும் என்ற கருத்தினை கொண்டிருப்பதை அறியக் கூடியதாக இருந்தது. ஏற்கனவே 2012 பெப்பிரவரியில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த மற்றய நாடுகள் மட்டத்திலும், சர்வதேச சட்டங்களை மீறிய சிறிலங்கா, உள்ளக விசாரணை ஒன்றை நடாத்தும் தகுதியுடையதாக இல்லை என்ற கருத்தே நிலவுகிறது. சிறிலங்கா அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கைகள் அது உள்ளக விசாரணையை நடாத்தும் வல்லமை கொண்டது என்ற தவறான என்ணக்கருவை தோற்கடிப்பதாகவே அமைந்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் இதற்கு நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. எமது கணிப்பின்படி, ஐ.நா மேற்பார்வையில் சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால் பெரும்பாலான நாடுகள் ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஒரு பேப்பர்: கடந்த முறை ஒரு நீர்த்துப்போன தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது விழுந்தடித்துக் கொண்டு ஆதரவு தெரிவித்த சில தமிழ் அமைப்புகள், இத்தருணத்தில் சர்வதேச விசாரணை பொறிமுறையை வலியுறுத்திமேற்கு நாடுகளை சங்கடப்படுத்தக் கூடாது எனக் கருதுவதாகத் தெரிகிறது, முதலில் சர்வதேச விசாரணை ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றனவா?

சசிதர்: ஐ.நா. விசாரணையை பெரும்பாலான நாடுகள் ஆதரிக்கும் என்றாலும், அவ்வாறான தீர்மானம் கொண்டு வரப்படுமா என்ற கேள்வி உள்ளது. கடந்த முறை தீர்மானத்தை முன்வைத்த ஐக்கிய அமெரிக்காவிற்கு இம்முறையும் தீர்மானத்தை முன்வைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அமெரிக்க அதிகாரிகளுடன் பேசியதில், உள்ளக விசாரணைகளை நடாத்துவதற்கும், ‘கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு’ (LLRC) இன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கும் மேலும் ஆறுமாதங்கள் அல்லது ஒரு வருட கால அவகாசம் வழங்குவதாகவே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அறிய முடிகிறது. இத்தகைய தீர்மானம் கொண்டுவரப்பட்டால், அது ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் நடவடிக்கைகள் கேலிக்குரியதாக்குவதுடன், அர்த்தப் புஸ்டியான நடவடிக்கை எதனையும் எதிர் பார்க்க முடியாது போய்விடும்.

சிறிலங்கா அரசாங்கம் LLRC பரிந்துரைகளை நிறைவேற்றும் என எதிர்பார்த்து கால அவகாசத்தினை வழங்குவது, தமிழர் தாயகத்தை இராணுவமயப்படுத்தும் இனவழிப்பு நடவடிக்கைக்கு உதவும் என்பதனை அமெரிக்க தரப்பினர் உணர்ந்துள்ளனர். இருப்பினும் அப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் மூலோபாய நலனுடன் தொடர்பட்ட பங்காளி நாடானா இந்தியா ஐ.நா. விசாரணையை தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றமையால், இத்தீர்மானத்தை மனிதவுரிமைச் சபையில் கொண்டு வந்தாலும், அதனை அமுல்படுத்த முடியாதிருக்கும் என எண்ணுகிறது. ஜெனிவாவிலிருந்து ஒரு அர்த்தபுஸ்டியான தீர்மானம் வெளிவராவிட்டாலும் கூட, ஈழத்தமிழர்களின் எதிரிகள் யார் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படும்.

ஒரு பேப்பர்: ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் அங்கம் வகிக்கிற நாடுகளை Lobby செய்வதன் மூலம் அந்நாடுகளின் ஆதரவினை பெற்றுக் கொள்ளலாம் என ஒரு சாராரும், மக்களின் கவனயீர்ப்பை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இன்னொரு சாராரும் என தமிழ் அமைப்புகள் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இவ்வணுகுமுறைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அனுகூலங்கள் இருக்கின்றனவா?

சசிதர்: இவ்விரு நடவடிக்கைகளிலும்நாங்கள் (தமிழர் ஒருங்கிணைப்புக் குழு) இறங்கியிருக்கிறோம். கொள்கை வகுப்பாளர்களுடன் நேரடியாக தொடர்புகளை பேணுகின்றோம், அதாவது Lobby நடவடிக்கை. அதுவும் அவசியமானது. ஈழத்தமிழர்கள் சார்பில் பல தமிழ் குழுக்களும் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்லாது, சிறிலங்கா வெளியுறவு துறையினால் இதற்கென உருவாக்கப்பட்ட பல்வேறு அமைப்புகளும் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வெகுமக்கள போராட்டங்கள் மூலமாக, மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தப்படுவதால், சிறிலங்கா அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட குழுக்களின் Lobby நடவடிக்கைகளை நாம் முறியடிக்க முடியும்.

நாடுகளின் பிரதிநிதிகளை சந்திப்பதன் மூலம் அவர்களது கொள்கை வகுப்பாளர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் விடயத்தில் விட்டுக் கொடுப்புகளை செய்ய முனைவர்களுக்கான எதிர்ப்பு மக்களிடமிருந்துதான் வரவேண்டும். சர்வதேச மட்டத்தில் வெகுமக்களின் ஆதரவும் எமக்கு அவசியமானது. ஐ.நா. விசாரணைக்கு ஒருநாடு ஆதரவளிக்க வேண்டுமென நாம் எதிர்பார்த்தால், அந்நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவது மட்டும் போதுமானதாக இருக்காது. அந்நாடுகளில் வாழும் மக்களை தமது நாடு நீதியின்பால் நின்று செயற்படவேண்டும் என வலியுறுத்தும்படி செய்யவேண்டும்.

ஏற்றம் போய் வீட்டான்....

போதி மரத்துப்
புத்தன் ஏதோ மோதி எழுந்தான்!
கூவி வந்த
குண்டொன்றின்
சன்னம் தன் தேகம்
கீறி இரத்தம் வரக் கண்டான்!

தேடி ஒரு பிக்குவைப்
பிடித்து நடப்பதென்ன என்று
அறியக் கேட்டான்
ஆதி முதல்
அத்தனையும் உரைத்த
பிக்கு...
அவசரமாய் போக வேண்டும்
என்று ஓடிப் போனான்!
புரியாத புத்தன்
அவனைத் தொடர்ந்து
போனான்...
என்ன ஒரு முரண்பாடு...!

“புத்தனைத் தொடர்ந்து
பிக்குகள் போவதிருக்க
பிக்குவைத் தொடர்ந்து
புத்தன் போவதா...?”
என்ற தத்துவ
விசாரணை விடுத்து
நடப்பதைக் கவனிக்க...
ஓடிப் போன அந்தப் பிக்கு
போருக்கு ஆதரவாய்
கோசம் போட்ட
கூட்டத்தோடு சேர்ந்து
தானும் கோசம்
போட்டான்...!

சாந்தம் தவழவேண்டிய
முகத்தில்...
ஒரு வெறித்தனம்...
நரித்தனம்...
பூமியை இரத்தத்தால் கழுவிய
அசோக மன்னனை
ஒரு புத்த பிக்கு
அன்பால் கழுவினான்!
அவனை நல்வழிப்
படுத்தினான்...!

நினைத்துப் பார்த்த
புத்தன்...
மறுபடியும் ஞானம்
பெற்றான்!
அரச மரங்களின்
அடியில் இருப்பதை
அடியோடு விட்டான்!

யாரேனும் புத்தன்
அரச மரங்களின் அடியில்
இருக்கக் கண்டால்
அது “வெறும் கல்“
என்று உணர்க!
புத்தன் எப்போதோ போய்
விட்டான்!..!

கனிரூபன்

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring
Maths & English
Teaching for
4-16 years olds
FREE Assessment
We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics
LEARNA
because every child is unique
Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

கொலைகாரன் மகிந்தவை ருவிற்றரில் வரவேற்போம்.

அட, போனால் போகட்டும் போய்யா, யார் மேலும் கொண்டிருக்கும் எந்த வன்மத்தையும் காலத்தால் நீர்த்துப்போகவைத்துவிட்டு, பெருந்தன்மைக் காட்டும் பெரும் பான்மையான தமிழர்களுக்குக் கூட, ராஜபக்ஷே என்றப் பெயரை எந்த நேரத்தில் கேட்டாலும், இருபது நாட்களாக கழுவப்படாத கழிப்பறையில் உள்ளே நுழைந்தால் என்ன ஓர் அசூசையான உணர்வைத் பெறுவோமோ, அந்த குமட்டல் உணர்வு கிடைக்கும்.

ஹிட்லரின் கொடுமைகளை வரலாற்றில் படிக்கும் பொழுது அதன் தாக்கம் அவ்வளவாகப் புரியவில்லை. ஆனால் சமகாலத்தில், என் மொழியைப் பேசும், என் உற்றார் உறவினர் போல் நிறத்தாலும் பண்பாட்டாலும் இருப்பவர்கள் திட்டமிட்டு நசுக்கப்பட்டு, ஈழத்தில் அழிக்கப்பட்டதைக் கண்கூடாக பார்க்கையில் ஹிட்லரின் கொடுமைகள் கூட இப்படித்தான் இருந்திருக்கும் என உணர முடிகிறது. ஹிட்லரை ராஜபக்ஷேவில் பார்க்கிறார்களோ இல்லையோ, நான் ஹிட்லரில் ராஜபக்ஷேவைப் பார்க்கின்றேன்.

வெறுப்பிற்குரிய ராஜபக்ஷே , டிவிட்டர் என்கின்ற சமூக இணையத் தளத்தில் அதிகாரப்பூர்வமாக இணைந்து இருக்கின்றார். எனக்கு தெருவில் இறங்கிப் போராட வாய்ப்புகிடைக்கவில்லை, ஆனால் இந்த டிஜிட்டல் சமரில் என்னால் செய்ய முடிந்த காரியத்தை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், என்னுடைய கண்டனங்களை அவரைக் குறிப்பிட்டு பதிவு செய்துவிட்டேன். டிவிட்டர் இணையத் தளத்திற்கும் ராஜபக்ஷேவை நீக்க வேண்டி, வேண்டுகோள் வைத்துவிட்டேன்.

ஒற்றை தாவீதுகளால் கோலியாத்துகளையும் கொடூரர்களையும் விரட்ட முடியாது. ஒன்று பத்தாக, பத்து நூறாக, நூறு நூறாயிரம் ஆகும் பொழுது கோலியாத்துகளைக் கொஞ்சமேனும் அசைத்துப் பார்க்கலாம்.

வன்முறையற்ற வார்த்தைகளைக் கொண்ட, அஹிம்சா முறையில் நமது கடும் கண்டனங்களை திருவாளர் ராஜபக்ஷேவின் டிவிட்டர் ஹேண்டிலில் பதிவு செய்யலாம். லண்டனில் விடுதியைவிட்டு கீழிறங்காமலேயே காணாமல் போகச் செய்ய செய்தப் போராட்டத்தை ஒத்ததுதான், இந்த டிவிட்டர் முற்றுகைப் போராட்டமும். சமூக வலைத் தளங்களில் மனிதாபிமானம் மிக்க, தமிழுணர்வுள்ள மக்கள் தொடர்ந்துப் போராடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்த டிவிட்டர் முற்றுகை, அதுவும் அலுவலகப்பூர்வமான டிவிட்டர் கணக்கை முற்றுகை செய்யும் பொழுது, பாராமுகம் காட்டும் உலகத்தின் கவனத்தை ஈர்க்கலாம். 140 எழுத்துகளில் நமது எதிர்ப்பைப் பதிவு செய்வோம். ராஜபக்ஷேவின் ருவிற்றர் கணக்கு

https://twitter.com/PresRajapaksa

- வினையூக்கி

உழவர் விழா-2013

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு நடாத்தும் தைப்பொங்கல் சிறப்புநிகழ்ச்சியான உழவர் விழா வரும் சனிக்கிழமை (பெப்பரவரி 9) மாலை 4.30 க்கு Canons High School மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முகவரி: Shaldon Road, Edgware, HA8 6AN

தைப்பொங்கலை தொடர்ந்து வந்த சனிக்கிழமை நடைபெறவிருந்த இந்த நிகழ்வு லண்டனில் ஏற்பட்ட கடும் பனிப்பொழிவு காரணமாக பின்போடப்பட்டது.

கலை நிகழ்ச்சிகளுடன் வன்னியிலிருந்து தருவிக்கப் பட்ட அரிசியிலிருந்து பொங்கல், கச்சான் போன்ற உணவும் பரிமாறப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:
சதா: 07985686487 இரவி: 07578989826
ஜெயந்தி: 07853362204

ஆர்ப்பாட்ட நிகழ்வுகள்

தமிழர்களை முற்றுமுழுதாக அழித்தொழித்து அவர்கள் நிலங்களை ஆக்கிரமித்து தமிழர்கள் மீது இனவழிப்பை நடத்திவரும் சிங்கள இனவாத அரசைக் கண்டித்தும், பொது நலவாய நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து சிறிலங்காவை நீக்கக் கோரியும் இன்று லண்டன் மாநகரத்தில் பொது நலவாய செயலகம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் - பிரித்தானியாவில் நடாத்தப்பெற்றது.

சிங்கள பௌத்த அரசாங்கத்தின் தமிழர் மீதான "இன அழிப்பின் 65'வது ஆண்டு" நாளான இன்று மாலை 4 மணியில் இருந்து 6 மணிவரை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். சிங்கள இனவாத அரசைக் கண்டிக்கும்படியான பதாதைகளை கைகளில் ஏந்தியபடியும், கோசங்கள் செய்தவாறும் மக்கள் தங்களது ஏதிர்ப்பை தெரிவித்தனர்.

"மத அடிப்படைவாதிகளால் நலிந்து வரும் இஸ்லாமிய சமூகம்"

ஸர்மிளா ஸெய்யித்
(கீற்று இணையத்தில்)

விஸ்வரூபம் திரைப்படத்தைத் தடை செய்யக் கோரும் இஸ்லாமியர்களின் கோரிக்கையின் காரணத்தை முழுமையாக விளங்காத சிங்கள நண்பர் ஒருவர் தற்செயலாக அதுபற்றிக் கேட்டார். "இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கும் காட்சிகள் படத்தில் இடம் பெற்றுள்ளதால்" என்றேன். "சொல்றேன் என்று தப்பா நினைக்காதே.. இவர்கள் இப்போது நடந்து கொள்வது மட்டும் ஜனநாயகமா?" என்றார் நண்பர்.

இந்தக் கேள்வி யாரோ ஒரு சிங்களவரினுடையது மட்டுமல்ல் உலகம் முழுவதும் வாழுகின்ற இஸ்லாமியர் அல்லாத அனைவரினுடையதும்தான். சில இஸ்லாமியர்களினுடைய தாயும் இருக்கலாம். விஸ்வரூபம் திரைப்படத்தின் உப்பு, காரம் தெரியாமலே இலங்கையில் தடை செய்தாயிற்று. தமிழகத்தில் அனைத்திந்திய ஜமாஅத் தடை செய்யக் கோரியதன் எதிரொலியாக இலங்கையிலும் அது செய்யப்பட்டது. தடையுத்தரவை நீக்குவதா வேண்டாமா என ஆலோசிப்பதற்காக உலமாக்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்களுக்கு அத் திரைப்படம் இலங்கைத் திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் மிக உறுதியாக இருக்கின்ற உலமாக்கள் திரைப் படம் பார்க்க முடியுமா என்ற கேள்வி விமர்சனத் திற்குரியது.

நாம் எத்தனையோ சினிமாக்களைப் பாத்தி ருக்கிறோம். மிகக் குரூரமானதும் நெஞ்சை நெருக்குவதுமான சமூகக் கொடுமைகளையும் பார்த்து ரசித்துவிட்டு எதுவுமே நடவாதது போல திரையரங்கிலிருந்து வெளியேறி விடுகின் றோம். ஏனைய சமயங்களைக் கேள்விக்குட் படுத்துகின்ற குறிப்பாக இந்து சமய வர லாற்றுப் பாரம்பரியக் கதைகளையும் பாத்திரங் களையும் விமர்சிக்கின்ற, பாரம்பரியங்களை உடைத்தெறிகின்ற சினிமாக்களும் வந்துதான் இருக்கின்றன. அப்போதெல்லாம் மிக ஆரோக் கியமான விமர்சனங்கள், கருத்தியல்களால் சமூகவியலாளர்களும் சமயத்தவர்களும் அவற்றை எதிர்கொண்டிருக்கின்றனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஆரோக் கியமான விவாதங்களுக்கும், கருத்தியல் வெளிக்கு முன்வரவும் தயாரில்லாதவர்கள். சினிமாவில் சித்தரிப்பதால் ஒன்றும் கிழிந்து விடப் போவதில்லை என்று தம் வேலையைப் பார்க்கத் திராணியற்றவர்கள். ஒரு சினிமா வந்துதான் சமுதாய மாற்றம் வந்துவிடப் போகின்றது என்றால், சினிமா பார்த்துத்தான் சமூகம் சீரழிந்துவிடப் போகிறதென்றால் இதுவரை வெளிவந்த இலட்சக்கணக்கான சினிமாக்களால் உலகம் மகத்தான அளவில் சீரடைந்திருக்கவேண்டும். அல்லது சீரமைக்கவே ஒண்ணாதளவில் சின்னாபின் னமாகியிருக்க வேண்டும். பத்தில் ஒன்றாகச் சும்மா வரவிருந்த விஸ்வரூபம் திரைப்படத் திற்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உலகத் தரத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றனர். அர்த்தமற்ற எதிர்ப்பே, அப்படி என்னதான் அதில் இருக்கின்றதென்று பார்ப்பதற்கு தூண்டச் செய்துள்ளது. தடையிட்டால் என்ன எங்காவது இணையத்தில் தரவிறக்கம் செய்ய லாமா, எவ்வளவுகொடுத்தாவதுபிளக்கில் வாங் கலாமா என்று எல்லாரையும் பைத்தியம் பிடிக் கச் செய்திருக்கின்றனர் இஸ்லாமிய அடிப்படை வாதிகள்.

மேலைத்தேய நாடுகள் தங்களைத் தீவிர வாதிகளாகக் காண்பிக்கச் சதிகள் செய்வதாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் சுயப் பிரச் சாரம் செய்து வருகின்ற சூழலில் சமீபத்தில் ரிஸானா றபீக் என்ற சிறுமிக்கு சவூதி அரேபி யாவில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை உலகத்தின் மனசாட்சிக்குப் பேரிடியாக அமைந்திருந்தது. 1999 ஆம் ஆண்டு துருக்கிய அரசு குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலை வரான அப்துல்லா ஒச்சலானுக்கு மரண தண் டனை விதித்தது. மரண தண்டனை, மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் நீண்ட காலமாக உலகெங்கிலும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் குர்திஸ் விடுதலை இயக் கத்தின் தலைவர் அப்துல்லா ஒச்சலானுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னரே அதுகுறித்த விவாதங்கள் உலகெங் கிலும் முனைப்புப் பெற்றன. ஐரோப்பிய யூனிய னின் நெருக்குதல் காரணமாக 2001ஆம் ஆண்டுதுருக்கியஅரசாங்கம் உத்தியோகப்பூர் வமாக மரண தண்டனையை முற்றிலும் கை விட்டது. சவூதி அரேபியா, ஆப்கானிஸ்தான், குவைத், பர்மா போன்ற இஸ்லாமிய நாடுகளில் மரண தண்டனை மாற்ற முடியாத சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மிகப் பலமான மத அடிப்படையே இச்சட்டங்கள் நடைமுறையில் இருப்பதற்கான காரணங்களாகின்றன.

மரண தண்டனைக்கு எதிரான இயக்கமும் மனித உரிமைகள் சார்ந்த அக்கறைகளும், குரல்களும் முக்கியத்துவம் பெற்றுள்ள சம காலத்தில் ரிஸானா றபீக் சிறுமிக்கு விதிக்கப் பட்ட மரண தண்டனை பல தளங்களில் விவாதிக் கப்பட வேண்டியதும், மனித உரிமைகளுக் கான அறைகூவல்களுக்கு பலமான பின்னடைவு என்பதும் ஏற்க வேண்டியவையே.

ரிஸானா றபீக்கிற்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை குறித்த கவலைகளை, அந்தச் செய்தி அளித்த ஏமாற்றங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத சூழலை சமீப காலங்களில் காணக்கூடியதாக இருந்தது. இஸ்லாமிய ஷரீஆ சரியா என்ற விவாதங்கள் எழுந்தன. இது மிக இயல்பானது, ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்புக்கு விவாதங்கள் கருத்தி யல்கள் மிக இன்றியமையாததாகின்றது. இதன் போதும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பொங்கி எழுந்தனர். ரிஸானா றபீக்கிற்கு அளிக் கப்பட்ட தண்டனை சரியோ, பிழையோ யாரும் அது பற்றி மூச்சுவிடக்கூடாது, அது இஸ்லாமிய ஷரீஆ, அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களது வாதமாக இருந்தது. மேனி யில் வடுக்கள் தெரியக்கூடிய ஈச்சம் பாயில் தான் முஹம்மது படுத்துறங்கினார் ஒட்டகத் தில் பயணித்தார். ஷரீஆவை அப்படியே பிச காமல் பின்பற்றுவதாக கூப்பாடு போடுகின்ற வர்கள் ஈச்சம் பாயில் படுத்து ஒட்டகத்தில் பயணிக்கலாமே!

இஸ்லாத்திற்கு எதிரான கருத்தொன்று எழும் போது அதனை எதிர்கொள்ளத் தெரியாதவர் களாக, எதிர்கொள்வதற்கான பக்குவமற்றவர் களாகவே இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தங்களை நிரூபித்து வருகின்றனர். இலங்கை யில் மட்டுமல்ல, ஆசிய நாடுகளில் வாழும் முஸ்லிம் இயக்கத்தவர்கள் எதிர்த்தலில் ஒரே பொதுக்குறியைக் கொண்டவர்கள்தான். தமிழ கத்தில் நக்கீரன் இதழில் ரிஸானாவுக்கு அளிக் கப்பட்ட மரண தண்டனை மிகக் கொடுமையா னது என்று எழுதியதற்காக உயிர்மை சஞ்சி கையின் ஆசிரியர் மனுஷ்யபுத்திரனுக்கு மிருக புத்திரன் பட்டமளித்து அங்குள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன. எதிர்கருத்தாளரை எப்படி எதிர்கொள்வ தென்பதும், தனிமனிதனுக்கு இருக்கத்தக்க கருத்துச் சுதந்திரத்தையும், சமூகத்தில் தனி மனிதர்களுடைய வகிபாகத்தையும் இன்றைய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மறுக்கின்ற தையுமே இவைகாட்டுகின்றன. ஈழத்திலும் இது தொடர்பான பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

முரண்பாடுகளை இல்லாதொழிப்பதே ஜன நாயகத்தின் இலட்சியம். இஸ்லாம் என்பதே சமாதான வழி மார்க்கம். இஸ்லாத்தின் முன் மாதிரி முஹம்மது மன்னிப்பை நல்லிணக் கத்திற்கான ஆயுதமாகப் பயன்படுத்தியவர். இன்றைய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நல் லிணக்கம் என்றால் எப்படி இருக்கும் என்று கேட் கின்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். ஏனைய சமூ கங்களைப் பற்றிய எந்த அக்கறையும் அவர்க ளுக்கிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு மூடிய சமூகமாக, தொட்டாற்சிணுங்கி சமூகமாக, தொட்டதெற்கெல்லாம் கண்டனம், ஆர்பாட் டம், போஸ்டர் என கிளர்ந்தெழுகின்ற சமூக மாக நலிந்த சமூகமாக இஸ்லாமிய சமூகத்தை அடிப்படைவாதிகள் மாற்றி வருகின்றனர்.

ரிஸானா 2005ஆம் ஆண்டு சவூதி அரேயியா வுக்குப் பணிப்பெண்ணாகச் சென்ற சிறுமி. நான்கு மாதக் குழந்தையைக் கொலை செய் தாள் என்று 2007ஆம் ஆண்டு சவூதி அரேபிய அரசாங்கம் தீர்ப்பு வழங்கியது. 2013 ஜனவரி 09ஆந் திகதி சிறுமி ரிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. மரண தண்ட னைத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் ரிஸானா றபீக் 5 ஆண்டுகள் சிறையில் இருந்தாள். அவளை விடுவிப்பதற்கு இஸ்லாமிய சமூகம் முயற்சி எடுத்ததா? மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் சென்றுள்ள இலட்சக்கணக் கான முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி இஸ்லாமிய சமூகம் ஆராய்ந்ததா? பொரு ளாதாரத்தை ஈட்ட பெண்கள் நாடு கடந்து செல்கின்றளவு இருக்கின்ற சமூகத்தேவை குறித்தும், அது தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எப்போதாவது அக்கறைப்பட்டுள்ளார்களா?

பணிப்பெண்கள் என்ற பெயரில் அரபு நாடுக ளில் பாலியல் அடிமைகளாகச் சிக்கிக் கிடக்கும் இலட்சக்கணக்கான முஸ்லிம் பெண்களை மீட் கவும், மறுவாழ்வளிக்கவும் அடிப்படைவாதிக ளிடமுள்ள தீர்வுதான் என்ன? இஸ்லாமிய சமூ கத்துக்குள்ளேயே புரையோடிக் கிடக்கின்ற சமூகக் கொடுமைகளுக்காக அக்கறைப்படாத அடிப் படைவாதிகள் யாராவது கருத்துக் கூறும்போது, எழுதும்போது, சினிமாவில் சித்தரிக்கும்போது மட்டும் இது இஸ்லாத்திற்கு எதிரானது என்று கச்சைகட்டிக் கொண்டு வந்துவிடுவது ஏன்?

இத்தகைய முரண்பாடான சூழ்நிலையினி டையே முஸ்லிம்கள் தீவிரவாதிகளைப் போன்று செயற்படுகின்றார்கள் என்று மேலைத்தேய நாடுகள் என்ன உள்நாட்டுக்குள்ளேயே குரல் கள் எழுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லையே.

பல்லின சமூகத்திற்குள் வாழுகிறோம் என் பதையே பல தருணங்களில் மறந்துவிடுவதும், இன்றைய செயற்பாடுகள் எதிர்கால சந்ததி களை எவ்வளவு தூரம் பாதிக்கக்கூடும் என்பது குறித்ததுமான விரிவான நோக்குகளும் சிந்த னைகளும் இல்லாமலேயே இன்றைய இஸ்லா மிய அடிப்படைவாதிகள் செயற்பட்டுக் கொண் டிருக்கின்றனர். இதனால் மேலும், மேலும் பாதிக்கப்படுவது இஸ்லாமிய சமூகம் என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

நன்றி: கீற்று

விண்வெளிப் பயணத்துக்கான தெரிவுப் போட்டி

விண்வெளிப் பயணத்துக்கான போட்டியில் 20 இளைஞர்கள் பங்குபெற பல்வேறு பல் கலைக்கழகங்களிலிருந்தும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இப்போட்டியில் கலந்து கொள்ள கனடாவைச் சேர்ந்த கபிலன் துரைராசா என்ற மாணவன் போட்டியிட வாய்ப்புக் கிடைத்துள் ளது. 20 வயது நிரம்பிய கபிலன் ஒரு ஈழத்து தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஏரோ நோட்டிக் படிப்புத் துறையில் கல்வி கற்பதால் இந்த அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளதாக இணை யத் தளங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போட்டிக்கான தேர்வு வதனப்புத்தகம் வழியிலான வாக்களிப்பின் மூலமே தெரிவு நடைபெறும். ஆகக்கூடுதலான வாக்குகள் கிடைக்கும் போட்டியாளருக்கே இப்பயணத் தில் இடம் கிடைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படு மென நம்பப்படுகிறது. ஈழத் தமிழரான ஒருவர் இப்போட்டியில் பங்குபெறும் வாய்ப்புக் கிடைத் ததே ஒரு அசாதாரண அதிஷ்டம். எனவே, இச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் உலகம் பூரா வுள்ள அனைத்து தமிழ் மக்களும் இவரது தெரிவுக்கான வாக்கை Facebook வழியாக தவறாது அளிக்க வேண்டுமென்பதே கூடுத லான தமிழ் மக்களின் விருப்பமாக இருப்பதை தொடர்பு கொண்டவர்களின் மூலம் அறிய முடிகிறது.

ஈழத் தமிழ் இளைஞர்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் இங்கொன்றும் அங்கொன்றுமான சில சாதனைகளைப் புரிந்து வருவது தகவல் கள் மூலம் அறிய முடிகிறது. எனினும் ஈழத்தில் கிடைக்காத வசதிகளை அனுபவிக்கும் எமது இளைஞர்கள், இளைஞிகள் வருங்காலத்தில் சாதிக்க வேண்டிய சாதனைகள் நிறையவே இருப்பதை கபிலன் போன்ற இளைஞர்கள் கண்களைத் திறக்க வைத்துள்ளார். இவரை உதாரணமாகக் கொண்டு நிறைய இளை ஞர்கள், யுவதிகள் புதியபுதிய கல்வித்துறையில் கரிசனை செலுத்தி ஈழத்தில் எமது மக்க ளுக்கு புறக்கணிக்கப்பட்ட கல்வித்துறையை மேம்படுத்த முன்வருவார்களென நலன் விரும் பிகள் ஏங்குகிறார்கள்.

எமது மக்களால் அமோகமாக அளிக்கப் படப் போகும் வாக்குகளால் கபிலன் துரைராசா தெரிவு செய்யப்பட்டு விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளும் அந்த நன்னாளை ஆவலுடன் காத்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. தயவுசெய்து தவறாமல் இன்றே வாக்களித்து கபிலனைத் தெரிவு செய்யுங்கள்.

கைக்கடிகாரத்து கணனி

கணனித்துறையில் கண்டுகொண்ட சாதனை கள் எத்தனையோ. அறை நடுவே இருந்து கொண்டு மணித்தியாலக் கணக்காக சின்னஞ் சிறிய வெள்ளித் திரையில் கண்டும், கேட்டும் அறிந்து கொண்ட அத்தனை காட்சிகளையும் செய்திகளையும் இசைக் கோப்புகளையும் கைக்கடிகாரத்துக்குள் அடக்கிவிட ஸ்மார்ட் வோச் தயாராகி விட்டது.

கிக் ஸ்ராட்டர் நிறுவனம் முதலீடு செய்த 10.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இத்திட்டத்தின் பலனாக புதிய தொழில்நுட்பம் வெற்றியளித்துள்ளது. கைக்கடிகாரத்தின் வடி வமைப்பு பெபிள் (pebble) மையினால் படர விடப்பட்டு, முகப்பில் தேவைப்படும் சக பயன்பாடுகளையும் (அப்ஸ்) ஒரு விரல் அசை வினாலேயே கண்டு கொள்ள முடியுமென தயாரிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர்.

புளூரூத் வழியாக இயங்கும் ஸ்மார்ட் போன் தரும் தகவல்கள் அத்தனையும் இந்தக் கைக் கடிகாரத்தில் கிடைக்க வசதி செய்யப்பட்டுள் ளது. இ-மெயில் வேண்டுமா, குறுஞ்செய்தி களா, தொலைபேசி தொடர்பா, இன்னிசைக் கோப்புகளாக எதுவேண்டுமானாலும், ஒரு விரல் நுனியின் அசைவில், இக்கைக்கடிகாரம் தருகிறது.

இத்தனை தொழில்நுட்பத்தையும் அடக்கி தயாரிக்கப்பட்ட கைக்கடிகாரம் வெறும் 95 பவுண்ஸ்கள் மாத்திரமென தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். இக்கடிகாரத்தை வாங்குவதற்கு ஏராளமானவர்கள் ஆர்வலர்களாக இருப்ப தால், நாளொன்றுக்கு 1000 கடிகாரங்களை தயா ரிப்பதாக பொக்கட் லைட் என்ற தகவல் நிலை யம் தெரிவித்துள்ளது.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

21ஆம் நூற்றாண்டின் முதல்தரமான தொழில் நுட்பம் இந்த பெபிள் கைக் கடிகாரத்துக்குள் அடங்கியுள்ளதாக இதன் தயாரிப்பாளர்கள் பெருமைப்படுகின்றார்கள். எப்போது எமது கைக்குள் வருமோ தெரியவில்லை.

இசைப் பிரியர்களுக்கு இன்னோர் இழப்பு

கிராமபோன் பெட்டிக்கு முன்னால் ஒரு நாய் உட்கார்த்து கொண்டு செவிகளை சாய்த்த வண்ணம், கிராம போனில் இசைக்கும் இன்னி சையை அதன் குழாய் மூலம் கேட்கும் அடையா ளத்தைக் கண்டவுடன் எவருக்கும் ஞாபகம் வரு வது His Masters Voice (HMV) என்று சுருக் கமாக அழைக்கப்படும் பென்னம்பெரிய இசை வெளியீட்டு நிறுவனம். உலகலாவிய ரீதியில் பெயரும் புகழும் பெற்ற இந்த நிறுவனத்துக்கு என்ன நேர்ந்ததோ, இதன் கிளைகள் அனைத் தையும் இழுத்து மூட, நிர்வாக அதிகாரியை நிய மிக்கப் போவதாக தகவல்கள் கிடைத்துள் ளன.

பெரிய பிரித்தானியாவிலும், அயர்லாந்தி லும், சனக்கூட்டம் அலைமோதும் கடை வீதிக ளில் 1921ஆம் ஆண்டு தொடக்கம் கம்பீரமாகக் காட்சி கொடுத்த எச்.எம்.வி. கடைகளை வெகு விரைவில் காண முடியாது போகும் துர்ப்பாக்கி யம் இசைப் பிரியர்களுக்கு வரப் போவது உண்மை. தாளப் போகும் கப்பல் போன்ற ஒரு நிறுவனத்தை சமுத்திரத்தின் அடிவரை கொண்டு செல்லும் பொறுப்பை Deloitte என்ற நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மூடப்படப் போகும் 239 கிளைகளையும் தனது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத் தும் வகையில் ஒரு சில நாட்கள் திறந்து வைத்திருந்தாலும் முன்னோடி நடவடிக்கை யாக பரிசுக் கூப்பன்களை விற்பனை செய் யவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாதென நிர் வாகம் தெரிவித்துள்ளது. பங்குச் சந்தையில் இதன் பங்குகளின் நடவடிக்கை அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. நிதிப்பிரச்சினையால் தத் தளித்த எச்.எம்.வி.க்கு உதவி செய்ய அதன் வழமையான விநியோகஸ்தர்கள் கைவிரித்து விட்டார்கள். வங்கிக் கடனை அடைக்கவும், வர்த் தக வழிமுறையில் புதிய வடிவங்களை உரு வாக்கவும் தேவைப்பட்ட முதலீடான 300 மில் லியன் பவுண்ஸ்களை திரட்ட முடியாத காரணத் தினால் எச்.எம்.வி. தனது பயணத்தை முடித்துக் கொண்டது.

4000 தொழிலாளர்கள் தனது ஜீவனத்துக் குரிய வருமானத்தை இழக்கப் போவது அதிர்ச் சியாக ஒரு பக்கமிருந்தாலும் 1921ஆம் ஆண்டு தொடக்கம் இசைப்பிரியர்களின் இதய நாதமா கத் தோன்றிய எச்.எம்.வி.யை இனிமேல் காணவே முடியாதா என்று ஏங்குபவர்கள் பலர். கிராமப்போன் இசைத்தட்டுகளில் ஆரம்பித்து சி.டி, டி.வி.டி. போன்ற நவீன இசைப் பரி மாணங்கள் வரை வியாபித்த எச்.எம்.வி., இணையத்தளங்களுடன் இனிமேல் போட்டி போட முடியாதென எடுத்த முடிவுபழமை விரும் பிகளுக்கு பலத்த அடி.

எங்கே செல்லும் இந்தப் பாதை ?

தமிழ் விழி

(ஒரு பேப்பருக்காக)

சாமத்தியச் சடங்குக் கொண்டாட்டங்களுக்குப் போவது என்றால் கொதித்துக் கொண்டிருப்பான் சிறி. மண்டபங்களில் நடக்கும் எடுப்புக்கள் அவனுக்கு ஆத்திரத்தை மூட்டும். "இந்த மணிரத்தினம் எண்டவன் எப்ப பம்பாய் பட மேடுத்தானோ அப்ப பிடிச்சது எங்கட சனத்துக்கு விசர்" என்று தொடங்கி விடுவான். நேரம் பன்னிரண்டு என்று அழைப்பிதழில் போட்டிருந்தது. மனைவி சுமதி பத்தரைக்கே வெளிக்கிடத் தொடங்கினவள், இன்னும் அலங்காரம் முடியவில்லை. எப்பிடியும் சாப்பாடு மூன்று மணிக்குப் பிறகுதான் கொடுக்கப்படும் என்ற பலமான ஊகம் இருந்ததால் லேசாக சாப்பிட்டு விட்டால் நல்லது என்று நினைத்து சாப்பிடத் தொடங்கினான்.

அவர்கள் போகும் கொண்டாட்டத்துக்கான பிள்ளை வயதுக்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. சிறப்பாகச் செய்வதற்கு காலமெடுத்து இப்போது செய்கிறார்கள். சுமதி இன்னும் சாரிக்கு பொருத்தமாக நகைகளை மாறி மாறிப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் விடயம் விளங்கிய படியால் இரண்டு பேரும் தயாராகி பிளேய் ஸ்டேஷன் 3 இல் ஒன்றியிருந்தார்கள். சிறி சாப்பிட்டு முடித்து, மறக்காமல் என்வலப்பில் காசையும் எடுத்து வைக்க நேரம் பன்னிரண்டு நாற்பத்தைந்து என்றது. "என்னப்பா சாமத்திய வீடு இண்டைக்கோ நாளைக்கோ" என்றான். "முடிஞ்சுதப்பா வாறன்' குரல் மட்டும் வந்தது. காத்திருந்து ஒரு மாதிரி ஒன்று பதினைந்துக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு இரண்டு மணிக்குள் மண்டபத்தை அடைந்து விட்டார்கள்.

போய்ச் சேர்ந்த நேரம் பாதியாவது முடிந்திருக்கும் என்று நினைத்து மண்டபத்துக்குள் நுழைந்த சிறிக்கு மனதுக்குள் மீண்டும் மணிரத்தினம் வந்து போனார். குத்துவிளக்குகளுடன் ஏறக்குறைய ஒரே வயதான பிள்ளைகள் ஒரே நிற புடவையுடன் பளபளத்தபடி வரிசையில் காத்திருந்தனர். வேறு சில பெண்கள் பட்டணிந்து ஆராத்திப் பொருட்களுடன் வரிசை கட்டி நின்றனர். கொண்டாட்டத்துக்குரிய பிள்ளையை அலங்காரம் செய்து காருக்குள் வெளியே வைத்திருந்தனர். எதிர்பார்த்தளவு சனம் வந்த பிறகுதான் பிள்ளையைக் கூட்டி வருவினமாம். பிள்ளையின் பெற்றோர் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக் கொண்டிருந்தனர். மண்டபத்துக்குள் இருந்த சனம் புறுபுறுக்கத் தொடங்கியது காதில் விழுந்ததோ என்னவோ ஒரு மாதிரி இரண்டு முப்பதுக்கு குத்து விளக்குகள் சூழவர பட்டுப் புடவைகள் தொடர்ந்து வர தேவதை மாதிரி கொண்டாட்டத்துக்குரிய பிள்ளையை அழைத்து வந்தனர்.

பிறகு ஆராத்தி, மாலை போடுதல், ஊஞ்சலாட்டுதல் என்று தொடர்ந்து வர படப்பிடிப்பாளர்கள் தமது திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். நிற்க வைத்து, இருக்க வைத்து, சாய வைத்து, நடக்க விட்டு, வளையல்களை ஆட்ட வைத்து, காதணியை ஆட்ட வைத்து, புடவைத் தலைப்பைப் பிடித்து தூக்கி வைத்து இப்படி என்ன எல்லாம் செய்ய முடியுமோ செய்து கொண்டிருந்தார்கள். சிறிக்கு அந்தப் பிள்ளையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவன் மெதுவாக சுமதியிடம் "அந்தப் பிள்ளையைப் பார்க்கப் பாவமாயிருக்கு" என்றான். ஆனால் சுமதியோ "இல்லையப்பா, அந்தப்பிள்ளையின்ர கண்ணைப் பாருங்கோ! இப்ப இந்த உலகத்து அழகி தான் தான் எண்ட ஒரு எண்ணம் தெரியேல்லை? இஞ்ச உள்ள கனக்கப் பிள்ளையள் நல்ல விவரமானதுகள்? இந்த வயதில நாங்கள் இப்பிடி நாட்டில இருக்கேல்லை" என்றாள்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மூன்றாவது உடுப்பு மாற்றுவதற்காக பிள்ளையை அழைத்துச் சென்றார்கள். அத்தோடு சாப்பாட்டுக்கும் அழைத்தார்கள் . சிறி நேரத்தைப் பார்த்தான். மூன்று நாற்பத்தைந்தைக் காட்டியது. சாப்பாடு முடிந்த கையோடு கேக் வெட்டி முடிய, வரிசையில் நின்று, கொண்டு போன காசைக் கொடுத்து வெளியில் வரும் வரைக்கும் அந்தப் படப் பிடிப்பாளர் காட்டிய அட்டகாசத்துக்கு அளவே இல்லை. வெளியே வந்ததும் சிறி சொன்னான் "என்ர பிள்ளையாய் இருந்தால் அவன் இப்பிடி எல்லாம் பட மெடுக்க விட மாட்டேன்". சுமதி 'நீங்கள் ஏன் இப்ப சும்மா கொதிக்கிறியள்' என்று சிரித்தாள்.

❖ ❖ ❖ ❖

தீரன் வீடு வந்து சேர எட்டு மணிக்கு மேலாகி விட்டது. அன்றைய சாமத்திய வீட்டுக்கு படம் எடுப்பவர்களுக்கு உதவிக்கு என்று காலை ஏழு மணிக்குப் போனவன் இப்போதுதான் வந்து சேர்ந்துள்ளான். பூனைக் கண்களால் சிரிக்கும் அவனுடைய அழகிய மனைவியும் இரண்டு வயதுப் பெண் குழந்தையும் அவனுக்குக் கிடைத்த பெரிய சொத்துக்கள். மகிழ்வான நிறைவான வாழ்க்கை. முன்பெல்லாம் அவன் வரப் பிந்தினால் மனைவி தான் தொலைபேசியில் சிணுங்குவாள். இப்போது மகள் கொஞ்சுவாள்.

தீரன் எல்லோருக்கும் உதவி செய்யும் மனம் கொண்ட துடிப்பானவன். அவனைப் பார்ப்போருக்கு சில நிமிடங்களிலேயே பிடித்துப் போகும். அவ்வளவு வசீகரம் கொண்டவன். சில மாதங்களுக்குள் யாரிடமிருந்து என்று தெரியாமல் ஒரு தொலைபேசி அழைப்பு வரத் தொடங்கியது. ஆரம்பத்தில் திட்டித் தீர்த்தான். ஆரெண்டு சொல்லாமல் கரைச்சல் படுத்துதுகள் என்று எரிச்சல்பட்டான். மனைவியோ கபடமில்லாமல் யாரோ மாறி தெரியாமல் அடிக்கினமாக்கும் என்றாள். எடுப்பார்கள்? ஹலோ என்றால் துண்டித்து விடுவார்கள். இப்படியே கொஞ்சக் காலம் கடந்தது. பிறகு அமைதியாயிருந்தது கொஞ்சக் காலம். இப்ப அந்த டெலி போன் வாறேல்லையோ என்றாள் மனைவி. "இல்லை" என்றான் முகம் திருப்பி.

கொஞ்ச நாட்களில் தீரனின் மனைவியின் சித்தி முறையானவள் வீட்டுக்கு வந்து, "கவனமாயிரு' என்றாள். "என்ன" என்றாள் தீரனின் மனைவி. "ஆரோ ஒரு சின்னப் பெட்டையோட இவன் அடிக்கடி வெளியில திரியிறதைக் கனபேர் கண்டிருக்கினம்" .... ம்ம்.. நான் பாக்கிறன் என்றாள் தீரனின் மனைவி உள்ளுக்குள் உடைந்ததை வெளியில் காட்டிக் கொள்ளாமல். ஏதேன் பிரச்சனை எண்டால் எங்களைக் கூப்பிடு என்றாள் சித்தி.

தீரனைக் கவனிக்கத் தொடங்கினாள் மனைவி. அவளைத் தவிர ஊரெங்கும் கதை பரவியிருந்தது. அந்தக் குடும்பத்தோடு நெருக்கமாகப் பழகிக் கொண்டிருந்தான் தீரன். அந்தக் குடும்பத்துப் பெற்றோர் தம்முடைய மகள் மீது அபார நம்பிக்கை வைத்திருந்தனர். அதை சாதகமாக்கி விளையாடிக் கொண்டிருந்தாள் மகள்.

தீரனின் மனைவி அவனிடம் நேரிடையாகவே கேட்டு விட்டாள். தலை குனிந்தான் மனைவி முன்னும் உறவினர் முன்னும். "அந்தப் பிள்ளைதான் சின்னப் பிள்ளை, நீ குடும்பக்காரன் உனக்கு எங்க அறிவு போச்சு" என்றனர் உறவினர். விடையம் சிக்கலாகவே அந்தப் பெண்ணைத் தவிர்க்கத் தொடக்கி விட்டான்.

ஆனால் அந்தப் பெண் வீட்டுக்கே தொலை பேசியில் தீரனின் மனைவியுடன் பேசினாள். "உனக்கு இப்ப எத்தின வயது பிள்ளை" என்றாள் தீரனின் மனைவி. "வயதென்ன வயது, லவ் தான் முக்கியம்? நான் தீரனைத்தான் லவ் பண்ணுறன்" என்றாள் அதிரடியாக. தீரனின் மனைவி மேலே பேசாமல் தொலைபேசியை வைத்து விட்டாள்.உறவினர் சிலர் அடுத்தநாள் காலையில் அந்தப் பெண்ணின் பெற்றோருடன் பேசிப் பார்த்தனர்.

அடங்காத பெண்ணாயிருந்தாள் அப் பெண். இனி இருப்பது ஒரே தெரிவுதான் என்று எண்ணிக் கொண்டாள் தீரனின் மனைவி. இவ் வளவு காலமும் ஒரு சிறு பெண்ணின் வாழ்க்கையை பாழாக்க வேண்டாம் என்று எண்ணியிருந்தவளுக்கு இனித் தன் வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும் என்று தெரிந்தது.

❖ ❖ ❖ ❖

சுமதி தன்னுடைய கணவன் சிறி எப்போது வேலையால் வருவான் என்று பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் வந்து ஏறியதுமே "இஞ்ச ரப்பா புதினம் கேட்டியளே! நான் இப்பதான் வாறன் புதினம் தெரியுமோ எண்டு கேட்டால் எனக்கென்ன தெரியும்?" என்றான் சிறி. "நானும் இப்பதான் வந்தனான்? நான் வரேக்கை வழமை மாதிரி தீரன்ர வீட்டடியாலதான் வந்தனான், நாலு பெம்பிளைப் பிள்ளையள் றோட்டில நிண்டு சத்தம் போட்டுக் கொண்டு நிண்டதுகள், நான் நினைச்சன் ஆரோ கறுவல் அடை எண்டு கிட்ட அவையைக் கடக்கேக்குள்ள பாத்தால் எங்கட அந்தத் தமிழ் பிள்ளையும் நிக்குது. நான் விறைச்சுப் போனன். அது சும்மா நிண்டதே! தீரன்ர வீட்டு கேற்றுக்கு முன்னால நிண்டு' ஓம், நான் உன்ர மனுசனைத்தான் கட்டுவன்' எண்டு கத்திக் கொண்டு நிக்கிறாள். அவளுக்கு என்னைக் கண்டது எண்ட ஒரு கூச்சம் கூட இல்லை. கத்தி அட்டகாசம் பண்ணிக் கொண்டு நிக்கிறாள்.

"அண்டைக்கே நான் யோசிச்சனான், சரிவிடு எங்களுக்கும் பிள்ளையள் இருக்குதுகள். ஆனால் நான் ஒண்டு சொல்லுறன் பிழை பிள்ளையளில மட்டும் இல்லை, பாவம் அறியாத வயதில என்ன செய்யிறேன் எண்டு தெரியாமல் தனக்குத் தானே மண்ணை வாரிப் போடுது" என்றான் சிறி.

மனம் உடையாதே மனிதா..

அன்னை இல்லம்

படிப்பு என்பது கடினம் அல்ல.
அதை கடினம் என எண்ணாதே.
கடவுள் உன்னைச் சோதிக்கிறார்.
என்பதையும் மறந்து விடாதே.

அன்னையைப் பிரிந்து தனி மரமாக
நின்று கஷ்டப்பட்டது மனம்
உடைந்து போகவா?
உன்னை நீயே ஏமாற்றாதே.
உன்னை நீ முதலில் நம்பு பின்
உலகம் உன்னைத் தானாக நம்பும்.

மனிதன் வாழ்க்கை
என்னும் ஓடத்தில் ஏறி
நடுக்கடலில் சென்றவுடன்
மட்டும் ஏன் பயம்?
கரையை அடைவதா?
இல்லை மீண்டும்
செல்வதா என்ற
எண்ணம் வேண்டாம்.

கரையை அடையப் – பல
தடைகள் புயல் வடிவில் வரும்.
நீசெல்லும் ஓடம்தான் உடைய
வேண்டும் நீ உடையக்கூடாது.
நீந்திச்சென்றாவது கரையை அடை...
உன்னை போற்ற
உலகம் தயாராக இருக்கும்
மனதை மட்டும் உடையாமல்
பாதுகாத்துக்கொள்.!!

. . . . . .

தந்தை இல்லாத எனக்கு
தந்தையாய் வந்தாய் நீ
நிறைய அன்புள்ளங்களை எனக்கு
நீ பரிசாகத் தந்தாய்.

படிக்கப் புத்தகமும் உடுக்க உடையும்
தந்து எம்மை வளர்த்தாய்.
ஒரு தந்தைக்குப் பதிலாக ஐந்து
தந்தையை எனக்கு தந்த தெய்வம் நீ!

அன்னை இல்லை
என்று மறக்க வைக்க
மூன்று அன்னையை
தந்த தேவதை நீ!
அனாதை என்ற சொல்லிற்கு
எம்மிடம் இடம்
கொடுக்காத கோவில் நீ!

நிறைய சகோதரம் தந்த மாதா நீ.
சாப்பிட உணவு தந்த
அன்னபுரணி நீ
எமக்குக் கல்வியைத் தந்த
கலைவாணி நீ
உன்னை என்
வாழ்வில் என்றும் மறவேன்!

உசா - ஆண்டு 10
அன்னை இல்லம் - மன்னார்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

ஷரீயா சரியா ?

முஹம்மத் எஸ்.ஆர்.நிஸ்தார்

2012ன் இறுதியும் 2013ன் ஆரம்பமும் உலகை உலுக்கிய இரண்டு சம்பங்களுடன் எம்மிடம் இருந்து விடைபெற்றாலும் அவை விட்டுச் சென்ற மிகமுக்கியமான கேள்விகள் எம்முடன் (நிரந்திரமாக) தங்கி விட்டன. நாகரீகமடைந்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் நம்மை நமது எதிர்கால நடத்தைகள் தொடர் பாகவும், சராசரி மனிதன் ஏற்றுக் கொள்ளும் நடத்தை தரங்கள் மீறப்படும் போது அதை எவ்வாறு எதிர் கொள்வது என்பது தொடர் பாகவும் ஒருமித்த ஒழுங்கமைப்பை வேண்டி நிற்கின்றன அந்த கேள்விகள்.

இஸ்லாம், முஸ்லீம், ஜிஹாத் என்பவை 21ம் நூற்றாண்டின் மிக முக்கியமான விவாதப் பொருட்கள் என்றால் அது மிகையாகாது. மேலுள்ள வார்த்தைகளுடன் ஷரி-ஆ என்பதும் அடிக்கடி பேசப்பட்டாலும், கடந்த கிழமைகளுக் குள்தான் அது கடுமையான விமர்சனத்துக்குள் ளானது என்றால் அதுவும் மிகையாகாது. இதற்கு அடிப்படையாக அமைந்தது சவூதி அரே பியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்த இலங்கைப் பெண் செல்வி ரிஸானா நபீக்கின் மரண தண்டனை.

இந்த மரண தண்டனை என்பது அமெரிக் காவின் பல மாநில அரசுகளிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஈரான், சீனா உட்பட பல அரபு நாடுகளிலுமாக உலகின் சுமார் 150 நாடுகளில் வழங்கப் படுகின்றன. சில நாடுகளில் கொலைக் குற்றத் துக்காகவும் இன்னும் சில நாடுகளில் போதை பொருட்களை நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவருவதற்குமாக இத் தண்டனை அளிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். இந்த வகையில் செல்வி நபீக்கின் மரண தண்டனை ஏன் இத்தனை முக்கியத்துவம் பெறுகிறது? இந்த மரண தண்டனை நேரடி யாக ஷரி-ஆ சட்டத்துடன் சம்பந்தப்படுவதால் செல்வி நபீக்கின் விடயத்துக்கு வருமுன் ஷரி-ஆ சட்டத்தில் இந்த மரண தண்டனை யின் முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். இதற்கு ஷரி-ஆ என் றால் என்னவென்ற பொதுவான விளக்கமும் முக்கியமாகின்றது.

பிரசித்திப் பெற்ற ரோமானிய சட்டம் (Roman law), அதன் அடிப்படைக் கூறுகளைக் கொண்ட ஆங்கிலம் சட்டம்((English law) போன்றதே மேலுள்ள ஷரி-ஆ சட்டம் (Divine Law) என்ற நிலைப்பாடு இருந்தாலும், இந்த ஷரி-ஆ என்பது வித்தியாசமான ஒரு விடயம் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதா வது இதை ஏனைய சட்டங்கள் போன்று சமூக/குடியியல்(Civil law) சட்டம், குற்றவியல் சட்டம் (Criminal law) என்ற பிரிவுக்குள் அடக்கினாலும் இந்த இரண்டு பெரும் பிரிவுகளுக்கு முன்பாக இதை மனிதனுக்கும் - இறைவனுக்குமான உறவு முறையில் உள்ள நடத்தை ஒழுங்குகள், மனிதனுக்கும் - மனிதனுக்கும் இடையே உள்ள விவகாரங்களின் நடத்தை விதிகள், மனிதனுக் கும் சமூகத்துக்கும், சமூக நிறுவனகளுக்கும் இடையிலான விவகாரங்களின் நடத்தை விதி களை அடிப்படையாகக் கொண்டவையாக வகுக்கலாம். ஆகவே சுருங்கக் கூறின் ஷரி-ஆ என்றால் நடத்தை விதிகள் (Code of conduct) என்று பொருள் கொள்ளலாம்.

ஒரு முஸ்லீமின் நாளாந்த கடமைகளான ஐவேளைத் தொழுகை, வருடத்தில் மாதம் ஒன்று நோன்பு நோற்பது, அசையும் அசையா சொத்துக்கள் கொண்டோர் வருடம் ஒருமுறை ஏழை வரி (ஸகாத்) செலுத்துவது பௌதீக, பொருளாதார ரீதியாக முடியுமானோர் ஆகக் குறைந்தது வாழ்க்கையில் ஒரு முறையேனும் புனித யாத்திரை(ஹஜ்) மேற்கொள்வது ஷரி-ஆ வின் அடிப்படை. இது படைக்கப்பட்டவர்களுக் கும் படைத்தவனுக்கும் இடையிலானவை. சக மனிதனுடன் நியாயமான முறையிலும், பாகு பாடின்றியும் தம் நடத்தைகளை அமைத்துக் கொள்வது, உதாரணமாக ஒரு மனைவியும், கணவனும் சேர்ந்து தொழில் ஒன்றை செய் வதாயினும் அல்லது ஒரு முஸ்லீமும் முஸ்லீம் அல்லாத ஒருவரும் சேர்ந்த கொடுக்கல் வாங்கலோ, வியாபாரமோ எதுவாயினும் அவர்களுக்கிடையே நியாயமானதும் எந்த வித வற்புறுத்தலோ, நிர்ப்பந்தமோ இன்றி இரு வரினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வது அதில் இலாப, நட்ட பங்கீடுகள், யாருக்கு என்ன பொறுப்புக்கள் என்பதை எல்லாம் ஏலவே தீர்மானித்து அதற்கேற்ப தங்கள் தனிப்பட்ட வாழ்க்கை விவகாரங்களையும், தொழில் விவ காரங்களையும் வெவ்வேறாக கையாள்வது என்பன தனிப்பட்ட இரண்டு மனிதர்களுக் கிடையில் எதிர்பார்க்கப்படும் நடத்தை விதி களாகும்.

இதை போலவே சமூக நலன் என்ற விட யத்துக்கும் தனிமனித விவகாரங்களுக்கு டையே முரண்பாடுகள் ஏற்படும் போது சமூக மேம்பாடும், அது தொடர்பான நீதியான செயற் பாட்டின் தேவையும் அவசியமாகி தனிமனித சுதந்திரத்தை விட சமூக முன்னேற்றம் முன்னுரி மை பெறுகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டு தனிமனித சமூக விடயங்கள் வரை யறுக்கப்படுகின்றன. இத்தைய மூன்று பிரிவு களும் சில வேளைகளில் ஒன்றுடன் ஒன்று கலந்து செல்லும் (overlapping) நிலை காணப் பட்டாலும் அனைத்தும் சமூக நலன், சட்டத் தின் முன் அனைவரும் சமன், சமூக நீதி என்ற அடிப்படை விடயங்களில் இருந்து மாறாத்தன் மைக் கொண்டவை என்பது முக்கியமாகும்.

சமூக நீதி சரியாக கடைபிடிக்கப்படும் போது மாத்திரமே ஒரு சமத்துவ சமூகத்தை (Just society) கட்டி எழுப்பமுடியும் என்பது இஸ்லாத் தின் நிலைப்பாடு, இதுவே இயற்கை நீதியின் (Natural law) அடிப்படை. இந்தவகையிலேயே நன்மைக்கு பரிசு குற்றத்திற்கு தண்டனை என்ற அடிப்படையில் தண்டனைச் சட்டம் (Penal Code) என்பது மிக முக்கியமாக் கருதப்படு கின்றது. சட்டமும் ஒழுங்கும் சரியாக கடைபிடிக் கப்படாத பட்சத்தில் சமூக நீதி என்பது கேள்விக் குறியாகிறது சமத்துவ சமூகம் என்பது எட்டாத கனியாகவே என்றும் காணப்படுகின்றது.

சமத்துவ சமூகம் என்ற இந்த இலக்கை மனிதன் அடைந்து கொள்வதற்கு அமை வாகவே ஷரி-ஆ சட்டமானது எல்லாம் நல்ல, எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த இறைவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை இறைவனால் தரப்பட்ட குர்-ஆன் (புனித நூல்) சந்தேகம் இன்றி முஸ்லீம்களுக்கு எடுத்துச் சொல்வதால் இந்த ஷரி-ஆ சட்டத்துக்கும் மனிதனால் இயற் றப்பட்ட மற்றைய சட்டங்களுக்குமிடையே பாரிய வேறுபாடுகள் இருக்கும் என்பது நமக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆகவே தான் தெய்வீக சட்டமானது காலத்தால், இடத் தால் அழியாதது, மனிதன் இருக்கும் வரை இது தொடர்ந்து இருக்கும் என்பது முஸ்லீம்களின் நம்பிக்கை மாத்திரமல்ல இந்த சட்டம் தனி மனித உரிமையை உறுதிப்படுத்தும் அதே வேளை தனிமனித பொறுப்பையும் வலியுறுத்து வதாலும் அந்த பொறுப்பின் நிமித்தம் அவனது சுதந்திரம் கட்டுப்படுத்தப் படுவதாலும் இந்த சட்டத்துக்கு என்றும் நிலைத்திருக்கும் தக மையும் வல்லமையும் இருக்கின்றது எனவும் நம்புகிறார்கள். மனிதனால் இயற்றப்பட்ட சட்ட ங்கள் காலத்துக்கு காலம் மீளப் பெறப்படு வதும்(repeal), புதியவை உட்செலுத்தப்படு வதுமாக (enect/adapt) இருப்பதன் பின்னணி யில் இருப்பது தனிமனித உரிமை மட்டுப் படுத்தப்படுவதும், அவனுக்கும் எல்லை இல்லா சுதந்திரம் வழங்குவதும், அந்த கட்டுக்கடங்கா சுதந்திரம் கட்டுப்படுத்த முடியாதது என்ற பிழை யான எடுகோளுமாகும்.

இந்த அடைப்படையில்தான் ஷரி-ஆ வின் தண்டனைச்சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் 'ஹுதூத்', 'தஸ்ஹிர்', 'திஹாஃ' என்ற ஏற்பாடுகள் அதாவது, பஞ்சமா பதக்கங் களாக கணிக்கப்பட்டுள்ள குற்றச் செயல் களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட கடுந்தண் டையின் அவசியத்தை வலியுறுத்துகிறது. திட்ட மிட்ட கொலை (intentional killing) யில் இருந்து கைமோசக் கொலையை (manslaughter/2nd degree murder) திட்டவட்டமாக பிரித்து அதற்கு என்ன தண்டனை என்பதையும் சுட்டிக்காட்டு கிறது. இவை தவிர சிறிய குற்றங்களுக்கான தண்டனைகளை வழங்கும் அதிகாரங்களை நீதித் துறையினருக்கு வழங்கி சூழ்நிலையின் தன்மைக்கு ஏற்ப அதை செயற்படுத்த அதி காரமளிக்கின்றது. குற்றம் ஒன்றை நிரூபிக் கும் பொறுப்பு (burden of proof), அந்த பொறுப் பின் தரம் (standard of proof) எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் குற்றம் ஒன்றை உறுதி செய்யும் போது அது நியாயமான சந்தேகங்களை கடந்த தாக(beyondreasonabledoubt) இருக்கவேண்டும் என்பதும், இந்த அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட குற்றச் செயலொன்றுக்கான தண்டனையும், இந்த தண்டனைகளை உறுதி செய்வதற்கான நியாயங்களை தர்க்க ரீதியாகவும், தார்மீக அடிப் படையிலும் பெற்றுக்கொள்வதற்கு 'பிக்ஃஹ்' சட்டக்கலை சட்ட விஞ்ஞானம் (jurisprudence) பற்றி அறிந்து கொள்வது நீதிபதிகளின் நீதித் துறையினரின் கடமையாகின்றது. இதற்கு ஏது வாக 'இஜ்மா' என்ற கருத்தொற்றுமை காணும் விடயமும், 'கியாஸ்' ஒப்புவமை கண்ட முன் மாதிரியான தீர்ப்பு (Precedent) ஒன்றை பின்பற்ற வேண்டிய விடயமும் காணப்படுகின்றன.

இந்தப் பின்னணிகளிலேயே செல்வி நபீக் கின் விவகாரமும் நோக்கப்பட வேண்டியுள்ள துடன் இந்த மரண தண்டனை விவகாரம் உலக அரங்கில் தெளிவான இரண்டு பிரிவுகளை ஏற் படுத்திவிட்டது என்பதும் அதனுடன் சேர்த்து நோக்கப்பட வேண்டிய விடயமாகும். ஷரி-ஆ சட்டம் காலத்துடன் ஒட்டிச் செல்லும் ஒன்றாக இல்லை அல்லது 21ம் நூற்றாண்டிற்கு பொருந் தாத ஒன்று என்ற பொதுப்படையான நிலைப் பாடுகொண்டோர் ஒரு பக்கமாக நிற்க. மற்றைய பகுதி ஷரி-ஆ கேள்விக்குட்படுத்த முடியாத விடயம் என்ற நிலைப்பாடு கொண்டோராகக் காணப்படுகின்றனர். எனினும் இவர்களுக்கிடையே முளைத்த மூன்றாம் பிரிவையும் நாம் மறத்த லாகாது. இந்த பிரிவுதான் மனித உரிமை விடயத் தில் அதி கூடிய அக்கறை உள்ளவர்களாக வேடம்போட்டு இஸ்லாத்தையும் முஸ்லிம் களையும் இந்த உலகத்தின் வேண்டப்படாதவர் களாகக் காட்டும் முயற்சியை மேற்கொள் வோர், ஷரி-ஆ சட்டமானது காட்டுமிரண்டித்தன மானது என்ற கருத்தை பரப்புவோர். அதனால் இவர்கள் ஆபத்தானவர்களாகவும் காணப் படுகின்றனர்.

சமூக நீதி சரியாக கடைபிடிக்கப்படும் போது மாத்திரமே ஒரு சமத்துவ சமூகத்தை (Just society) கட்டி எழுப்பமுடியும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடு, இதுவே இயற்கை நீதியின் (Natural law) அடிப்படை. இந்தவகையிலேயே நன்மைக்கு பரிசு குற்றத்திற்கு தண்டனை என்ற அடிப்படையில் தண்டனைச் சட்டம் (Penal Code) என்பது மிக முக்கியமாக் கருதப்படுகின்றது.

முதல் பிரிவினர் சார்பு நிலையில் இருந்து விடயங்களை அணுகுவோர். இவர்களின் அணுகு முறையூடாக சில விடயங்களில் அவர் கள் எதிர்பார்த்த முடிவுகளை காணக்கூடியதாக இருந்தாலும் மனித நடத்தையின் பிறழ்வை இவர்களால் முற்றும் முழுதாகக் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். அதே நேரம் கொடுங் குற்றமொன்றுக்கு, உதாரணமாக நாம் ஆரம்பத்தில் சுட்டிக் காட்டிய உலகை உலுக்கிய சம்பவங்களில் ஒன்றான இந்திய அங்க அசைவு மருத்துவ பயிற்சி (physiotherapy) மாணவி நிர்பயா ஏழு இந்தியர் களால் மிருகத்தனமான பாலியல் வன்புணர் வுக்கு உற்படுத்தப்பட்டு, சித்திரவதை செய்து பாதை யோரம் வீசப்பட்டு பிற்பாடு வைத்திய சாலையில் உயிரிழந்த சம்பவத்திற்கு கொடுக் கப்படவேண்டிய நீதியான தண்டனை என்ன என்பதற்கு பதில் தெரியாதவர்களாகக் காணப் படுகின்றனர். இருந்தும் இவர்களின் படி தனி மனித ஒழுக்கமோ அல்லது சமூக ஒழுக்கமோ தண்டனையில் இருந்து ஆரம்பமாவதில்லை. மாறாக சரியான வழிகாட்டலினாலும், சாதகமான நல்ல சூழ் நிலையை ஏற்படுத்துவதாலும் சாத்தி யமாகக் கூடியது. தண்டனை என்பது கடைசி நிலைப்பாடு மட்டுமே, அதுவும் தண்டனை எந்த சூழ்நிலையிலும் அவர்களின் புனர்வாழ்வு பெறும் சந்தர்பத்தை முற்றாக அடைத்து விடக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுக்கின்றனர்.

- தொடரும்

தமிழ் தொலைக்காட்சி புதிய இணைப்புகள்

VIJAY JAYA TV JAYA PLUS J MOVIE JAYA MAX Raj TV Raj musix Raj NEWS 24X7 Raj மக்கள் MEGA TV mega 24

UK Time Live Tv Channel இன்டர் நெற் மூலம் உங்கள் தொலைக்காட்சியில் பார்க்கலாம் Old Price £189

TAMIL GOLD STAR PACKAGE
13 Tamil Tv & 30 Tamil Radio
£ 13.99 Only..

TAMIL MEGA SILVER PACKAGE
12 Tamil Tv, 30 Tamil Radio
£ 8.99 Only..

TAMIL BRONZ PACKAGE
8 Tamil Tv & 30 Tamil Radio
£ 5.99 Only..

Malayalam
9 Tv Channels
£ 9.99 Only..

Special Offer £ 120

THIRU SATELLITE - 07429037336 07404107604

VIJAY + Installion = £169 விஜய் டிவி பார்க்க ஒரு வருட சந்தாவுடன்

+ Installion = £169 கலைஞர் டிவி பார்க்க ஒரு வருட சந்தாவுடன்

Kտv + Installion = £ 239 சன் டிவி கே டிவி பார்க்க ஒரு வருட சந்தாவுடன்

GTV + Installion = £129 ஜி டிவி - டன் டிவி மற்றும் பல தமிழ் ஆங்கில ஐரோப்பிய இலவச டிவிக்கள் பார்க்க

JAYA TV + Installion = £169 ஜயா டிவி பார்க்க ஒரு வருட சந்தாவுடன்

Sun Tv, K Tv + Receiver + Installattion வருட சந்தா £ 205

தமிழினப் படுகொலைக்கு துணைபுரிந்த ஐ.நா. அதிகாரிகள் தண்டிக்கப்படல் வேண்டும்!

உமர், திருமுருகன் காந்தி

மே 17 இயக்கம்

இலங்கை இனப்படுகொலை தொடர்பில் ஐ.நா.வின் நடவடிக்கைகள் குறித்து ஒரு உள்ளக ஆய்வறிக்கையை சார்லஸ் பெட்ரி என்கிற ஐ.நா. அதிகாரி தலைமையிலான குழு 2012 நவம்பர் மாதம் வெளியிட்டது. இது ஐ.நா. உயர் அதிகாரிகளின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டினையும், செயல்பாட்டினையும் வெளிப்படுத்துகிறது. இதில் ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் இலங்கை அரசிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி இருப்பது பதியப்பட்டுள்ளது.

ஐ.நா. இலங்கை அரசுக்கு செய்த உதவிகள்

ஐ.நா.வின் இலங்கைக்கான உதவிகள்,இலங்கை அரசு போரை தங்கு தடையின்றி நடாத்துவதற்கும், போரை நிறுத்தக் கோரி வரக்கூடிய சர்வதேச அழுத்தங்களை தடுப்பதற்கும் துணை புரிந்த அதே நேரத்தில் இலங்கை போர்க் குற்றம் செய்வதற்கு நேரடியாக உதவி செய்தது என்கிற உண்மையினை நாங்கள் இங்கே காண்கிறோம். அடுத்ததாக போர் முடிந்த பிறகு இலங்கைக்கு ஐ.நா. செய்யும் உதவியை இரண்டு வகையாகப் புரிந்துகொள்ள முடியும். ஒன்று போருக்குப் பிறகு சர்வதேச விசாரணையை இலங்கை மீது வராமல் தடுப்பது அதன் மூலமாக ஐ.நா. பொது வாக்கெடுப்பிற்கான வாய்ப்பினை இல்லாமல் செய்வது. மற்றயது இனப்படுகொலையைப் பற்றிய விவாதங்களும், கோரிக்கைகளும் பிற்காலத்தில் எழுப்பப்படாமல் இருக்க, இனப்படுகொலை ஆதாரங்களை இலங்கை அரசு அழிப்பதற்கான கால அவகாசத்தினை அளிப்பது, சர்வதேச விசாரணையை தவிர்த்து உள் நாட்டு விசாரணையாக மாற்றி அரசியல் கோரிக்கைகளை மழுங்கடித்து, மனித நேய உதவிகள், மறுவாழ்வு, வாழ்வுரிமை, வாழ்வாதார உதவிகள், நலத்திட்டங்கள், தொண்டு நிறுவன உதவிகள், நல்லிணக்கம் என தமிழர்களைத் திசை திருப்புவது.

பெட்ரியின் உள்ளக அறிக்கையின் சில தகவல்களாக நாம் கவனிக்க வேண்டியது, ஐ.நா. பணியாட்களை அங்கிருந்து வெளியேறுமாறு செய்தது. இது போர் நடக்கும் பகுதிகளில் பாதுகாப்பு தேடி ஐ.நா. அலுவலகத்திற்கும் அதைச் சுற்றி கிடைக்கும் பாதுகாப்பு இடங்களுக்காக வந்த தமிழர்களை இனப்படுகொலையில் சிக்க வைத்தது. மனித நேய உதவிகளாக போர் முனையில் சிக்கியிருந்த தமிழர்களுக்கு உணவு, மருந்துப் பொருட்களை அனுப்புவது என்பது கிட்டத்தட்ட 8-10 நாட்களுக்கு ஒருமுறை 18 ஆயிரம் மெட்ரிக் தொன் பொருட்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

ஜனவரி 15 ஆம் தேதி இலங்கை ராணுவத்திடம் ஒப்புதல் பெற்ற பிறகு உதவிப் பொருட்கள் போர் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. இந்த உதவிப்பொருட்களுக்கான வண்டிகள் 16 ஆம் தேதியே திரும்பும் என்கிற உத்திரவாதத்துடன் சென்ற போது இலங்கை அரசு தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. இதன் காரணமாக இந்த உதவிக்குழு முல்லைத் தீவு பகுதியிலேயே இரண்டு வாரங்களுக்கு மேலாக தங்க நேர்ந்தது. அந்த காலகட்டத்தில் இலங்கை அரசு செய்த மனித உரிமை மீறலான போர்த் தாக்குதலையும் (மருத்துவமனைகளைத் தாக்குவது, ஐ.நா. பணியாட்கள் இருக்கும் பகுதியைத் தாக்குவது, பொது மக்கள் குழுமியிருக்கும் பகுதிகளைத் தாக்குவது போன்றவை), இத்தாக்குதலால் கொலை செய்யப்பட்ட தமிழர்களின் கணக்கெடுப்புகளையும் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு குறுஞ் செய்தி அனுப்பியுள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கான உதவிகள்

போர் நடந்த பகுதிகளில் உள்ள தமிழர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் அளவினை விட மிக மிகக் குறைந்த அளவே ஐநாவினால் அனுப்பப்பட்டது. முற்றுகைக்குள்ளாக்கப்பட்ட பகுதிகளில் விளை நிலங்கள் இருப்பதாகவும், உணவு இருப்பதாகவும் இலங்கை அரசு தெரிவித்ததோடு, மக்கள் தொகையையும் குறைத்தே சொல்கிறது. ஆனால் இவற்றினை உடைக்கும் தகவல்களை அம்னெஸ்டி போன்ற அமைப்புகள் அம்பலப்படுத்தின. இதைக் கொண்டு இலங்கை அரசினை கண்டிக்கும் செயலை சர்வதேசம் செய்யுமளவு ஐ.நா நடந்து கொள்ளவில்லை. மேலும் கொண்டு செல்லப்பட்ட உதவிப் பொருட்களில் கிரிக்கெட் மட்டைகளும், பந்துகளும், புலிகளுக்கு எதிரான சிங்கள அரசின் துண்டறிக்கைகளும் அடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

போர் நடக்கும் பிரேதசங்களிலிருந்து தப்பி கொழும்பிற்கு சென்ற ஐ.நா. பணியாளர்கள் அவர்களது அலுவலகத்தில் களத் தகவலை பகிர்ந்துள்ளார்கள். அவ்வாறு பகிரும் போது, போரில் கொல்லப்படும் தமிழர்களின் இறப்பினைக் கணக்கெடுக்கும் வேலை ஐ.நா. அலுவலகத்தில் நடக்காதமையை கவனித்து, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இவர்களது களத் தகவலின் அடிப்படையில் இறப்பு தகவல்கள் தொகுக்கப்படுகின்றன. இது 2009 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் ஏற்படுகின்றது. மூன்றாவது வாரத்தில் முடிவு பெறும்போது அது அதிர்ச்சிக்குரிய தகவலாக மாறும் அளவிற்கு பெருமளவு தமிழர்கள் போர்க்களத்தில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

மார்ச் 2009இன் முதல் வாரத்தில் இந்தத் தகவலை அறிந்த ஐ.நா.வின் உலக தலைமைச் செயலகம் உடனடியாக அரசியல் குழுவில் இருந்து உயர் அதிகாரியை அனுப்புகிறது. அவர் கிடைத்த தகவலை கவனித்ததும் 'இந்தத் தகவலை வைத்து நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்தவில்லை எனில் நாமும் குற்றவாளிகளாவோம்' என்று பதிவு செய்கிறார். தொகுக்கப்பட்ட தகவலை எடுத்துக் கொண்டு மார்ச் 9இல் ஐ.நா. தலைமை அலுவலகம் செல்கிறார்.

மார்ச் மாதம் 12 ஆம் தேதி நடைபெற்ற உயர்மட்டக் குழு விவாதத்தின் இறுதி நேரத்தில் ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்துக்கு ஒரு விரிவான மின்னஞ்சலை ஐ.நா.வின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் அனுப்புகிறார். அந்த மின்னஞ்சலில், 'இலங்கையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை நம்மால் உறுதி செய்ய முடியா? எனவே வெளியிட வேண்டியதில்லை' என பதிகிறார். அந்த மின்னஞ்சல் மேலும் இரண்டு முக்கிய செய்திகளைக் காட்டுகிறது. 'இலங்கை அரசின் மீது போர்க் குற்றம், மனித குலத்திற்கு எதிரானகுற்றத்தினை நாம் இப்போதுவைக்க முடியாது....

அவ்வாறு செய்தால் இலங்கை அரசின் விரோதத்தினை நாம் சம்பாதிக்கவேண்டி வரும்? அது நமக்கு நல்லதல்ல' என்கிறார். இதே உள்ளர்த்தம் உள்ள மின்னஞ்சல் பிற துறைகளில் இருந்தும், குறிப்பாக மனித நேய உதவிகளுக்கான அதிகாரி ஜோன் ஹோல்ம்ஸ்மிடமிருந்தும் அனுப்பப்பட்டு, இறுதியில் மார்ச் 12-13ஆம் தேதி மனித உரிமை

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

கோர்த்து விடும் செய்திகள்

■ **அவளைக் காணமுன் பிள்ளைக்குப் பெயர் வைக்கிறாங்கள்**

ஜெனிவா மனித உரிமைக் கழகக் கூட்டத்தில் அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டு வரப்போகிறது என்றவுடன் ஆளாளுக்கு 'கலக்கத்தில் இலங்கை', 'அச்சத்தில் ராஜபசே' என்ற தலையங்கதில் எழுதத் தொடங்கி விட்டினம். தீர்மானத்தில் என்ன வாசகம் வரப்போகிறது அதை இந்தியா எப்படிக் கெடுக்கப் போகிறது என்று யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்த தீர்மானத்தைப் பற்றி எல்லாரும் கதைச்சுக் கொண்டிருக்கும் போது ஒரு செய்தி வந்தது. இஸ்ரேலிய விமானங்கள் ஒரு வாரமாக லெபனான் வான்பரப்புக்குள் பறந்து கொண்டிருப்பதாக 2007-ம் ஆண்டு ஐ.நா. பாதுகாப்புச் சபை ஒரு தீர்மானம் நிறை வேற்றி இருந்தது இஸ்ரேலிய விமானங்கள் லெபனானுக்குள் பறக்கக் கூடாது என்று. ஆனானப்பட்ட பாதுகாப்புச் சபைத் தீர்மானத்துக்கே இந்தக் கதி என்றால் சில்லறை மனித உரிமைக்கழகத் தீர்மானத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

■ **அத்வானியின் மருமகள் சேலையைப் பிடித்து அம்பானியாக முயன்றவர்**

தொழிற்கட்சியில் இருப்பவர்கள் எல்லாரும் தொழிலாளர்கள் நலனுக்காக இருப்பதில்லை. சிலர் தங்கள் தொழிலை வளர்க்க அதில் இணைவதுமுண்டு. ஒருவர் இப்படித்தான் தொழிற்கட்சிக்குள் இருந்து கொண்டு அத்வானியின் மருமகளுடன் கூட்டுச் சேர்ந்து ஏமாற்றப்பட்டார். நீதிமன்றத்திற்கு நீதி தேடிச் சென்ற வருக்கு இலஞ்சம் கொடுத்ததார் என்ற பட்டம் கட்டப்பட்டது. ஹலோ மிஸ்டர் கந்தையா... கல்லுக்கு மேலே குந்தய்யா..... தொழில்கட்சியில் ஏனய்யா..... தமிழ்தேசியம் ஒரு கேடய்யா.....

■ **சிங்களவர்களும் அகதிகளாய் ஓடுகினம்**

மஹிந்தரின் அமைச்சர் மஹிந்த அளுத்கமகே திருகோணமலையில் இலங்கையின் சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்திற்குப் போக அதுதான் சரியான தருணம் என்று அவரது மனைவி பிள்ளைகளுடன் வேறு நாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டாராம். அமைச்சர் தன்னைக் கொல்லலாம் என்ற அச்சத்தில் தான் இந்த ஓட்டமாம்.

■ **விகடன் பாணியில் இருட்டு நிகழ்ச்சி**

பிரித்தானியத் தமிழ் தொலைக்காட்சி ஒன்றில் அறிவிப்பாளர் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவுபோல் நடிக்க அவருடன் பங்கு பெறுபவர்களும் தொலை பேசிகள் மூலம் தொடர்பு கொள்பவர்களும் இந்தியாதான் தமிழர்களுக்கு ஒரே கதி என்று புலம்புகிறார்கள். விகடன் குழும சஞ்சிகைகளும் தாம் ஈழ விடுதலைக்கு ஆதரவு போல் காட்டிக் கொண்டு இடைக்கிடை தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நஞ்சைக் கக்கி விடுகின்றன. இருட்டு நிகழ்ச்சியிலும் அப்படியே. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கடைசியாகக் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா மாற்றவில்லை என ஒரு பெரும் பொய்யை ச.வி.கி. (சரியான விசரன்) இருட்டு நிகழ்ச்சியில் அவிழ்த்து விட்டார். அதை எதிர்ப்பது போல அறிவிப்பாளர் பாசாங்கு செய்தார். இருட்டு நிகழ்ச்சி மட்டுமல்ல பேசாப் பொருள் என்று சொல்லி பொருள் இல்லாமலும் பேசித்தள்ளுகிறார்கள். எல்லாம் றோவன்னாவின் தட்சணைகள் செய்கிற வேலை!

-ஊருளவாரி

வடிவமைப்பு | அச்சமைப்பு | வெளியீடு

நினைவு மலர்கள், வாழ்த்து மலர்கள், அழைப்பிதழ், துண்டுப் பிரசுரங்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் அனைத்து தமிழ், ஆங்கில அச்சு வடிவமைப்பு வேலைகளை நியாயமான விலையில் குறுகிய காலத்தில் அழகுற அமைத்துக்கொள்ள அழையுங்கள்....

விசேட விலைக்கழிவுகள்!!

விபரங்களுக்கு : 020 7043 4319

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும்
வீட்டுக்கு வீடு சேவை....

பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்

* GREENFORD * WIMBLEDON * VAUXHALL * BIRMINGHAM
* STOKE-ON-TRENT * A-LANKA TRAVELS LTD, TOOTING

- இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்.
- விசேட சலுகைகள்
- இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
- இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு

- Vehicle Shipping
- Furniture Shipping
- Express Letter Service
- Packing Service
- Relocation Service
- Man and Van Service
- Packing Materials
- European Parcel Service

DUNN SHIPPING LTD.

07949361434
07949361313

Door to Door Delivery

67, Gap Road,
Wimbledon,
SW19 8JA.

020 8842 2020
info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk

நமக்கேன் இந்த விதமாய் அமைகிறது

இப்பொழுதெல்லாம் ஒரு விரக்தியும் மன உளைச்சலும் இல்லாது என்னால் ஒரு நாளைக் கழிக்க முடியவில்லை எதற்கோவென்று இல்லாது நினைத்தாற் போற் கசிகிறது கண்ணீர். சில சமயங்களில் வெம்பிச் சாய்கிறோம். செல்லும் வழி இருட்டு என்று இதனைச் சொல்ல முடியாது. செல்வதற்கு வழியே தெரியவில்லை. உள்ளுக்குள்ளே அத்தனையையும் அமத்தி வைத்திருக்க நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது. ஒருக்கால் பெருங்குரல் எடுத்து அழுதால் நெஞ்சு வெடிப்பு நீங்கி விடும்.

இப்போது என்னுடைய நெருங்கிய தோழன் என்று அழுகையைத் தான் குறிப்பிடுவேன். அழுகை ஒன்று தான் அத்தனை மன உளைச்சல்களிலுமிருந்து என்னை ஆற்றுகின்றது. ஆனால், எதற்கும் எப்பொழுதும் அழுது விட முடியாது. 'உம்மானாம் மூஞ்சி' 'அழுகுனி' என்ட பட்டப் பெயர் கிடைத்துவிடும் என்பது போக, 'அழுவோமோ நாங்கள் ஆண் பிள்ளைகள் அல்லவோ' என்ற வரி நினைவுக்கு வந்து விடும். மேலும், என் தோழி ஒருவர் அடிக்கடி கூறுவார். 'அழுகின்ற ஆண்பிள்ளைகளையும் அதிகமாக சிரிக்கின்ற பெண் பிள்ளைகளையும் நம்பக்கூடாது' என்று. ஆனால், இவ்வாறான கருத்துக்கள் எதுவும் என்னை கட்டுப்படுத்தாது, ஆனால், யாருக்கும் முன்னால் அழுவதென்பது வெட்கக்கேடான ஒரு காரியம் தானே?

என்னுடைய அம்மா, தனது ஐம்பது வயதுக்கு மேற்பட்ட காலங்களில் சில நாள் பின்னேரப் பொழுதுகளில் ஒப்பாரி பாடி மூக்குச் சிந்தி அழுவார். வீட்டில் ஒருவரும் இல்லை என்று உறுதிப்படுத்திய பின்புதான் அந்த அழுகை வெடிக்கும். தற்செயலாக நான் வீடு திரும்பிய வேளை அந்த அழுகையை கண்டும் இருக்கிறேன், கேட்டும் இருக்கிறேன். "ஏன் அம்மா அழுறீங்கள் எனை" என்று கேட்டால், அம்மா ஆயத்தமாக ஒரு பதில் வைத்திருப்பார். "என்ர அம்மாவை நினைச்சு அழுதன்"

அப்பொழுது அதனை நான் நம்பினேன். அம்மம்மாவிற்கு ஆறு ஆண் பிள்ளைகளிடையே அம்மா ஒரே ஒரு மகள், மிகுந்த செல்லமாக வளர்க்கப்பட்டவர். அதை நினைத்துத் தான் அழுகிறார் என்று நான் நினைத்தேன். ஆனால், இப்பொழுது எனக்கு அந்த அனுபவம் நேர்ந்த பிறகு அம்மா சும்மா தான் அதனைச் சொல்லியுள்ளார் என்று புரிகிறேன். அம்மா அழுகின்ற காலத்துக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இறந்து போன அம்மம்மாவிற்கு இப்பொழுது ஒப்பாரி வைத்து அழ முடியாது. தன் 'முட்டுக்களைத்' தீர்த்து அழுவதற்கு அம்மம்மா ஒரு கருவியாகினார் என்று இப்பொழுது உணர்கிறேன். அம்மம்மா செய்த அன்பான காரியங்களை நினைவுறுத்த நினைவுறுத்த அழுகை பீறிப் பெருக்கெடுத்திருக்கலாம். மேலும் சொல்வதானால் ஒப்பாரி பாடியபடியே அழுவதால் தான், உளைச்சலும், முட்டும், வெப்பியாரமும் தீர்ந்து மனம் தெளிவடைகிறது. என் அனுபவமே இவ்வாறு சொல்ல வைக்கிறது. அவ்வாறு உணர்கையில் அழுவது நல்லது என்ற முடிவுக்கு வருகிறேன்.

அ.யேசுராசாவிடம் கவிதை வரி ஒன்று இருந்தது. *'இந்த விதமாய் நமக்கேன் நிகழ்கிறது? மெல்லியதம் கொண்டிருந்தோம் என்பதனாலா?' பதின்ம வயதுகளில் இவ்வரிகளை வாசித்து அப்பொழுதுதே அதிர்ந்து போயிருந்தேன். 'மெல்லியதம்'* அஃது ஓர் அற்புதமான சொல்லாட்சி. 'நொய்ந்து போன மனது என்று மேலும் அதனை விளக்கலாம்'.

இவ்வாறான வருத்தம் வர என்ன காரணம் என்று உசாவிப் பார்த்தேன். இவ்வருத்தம் பரம்பரை அலகு (ஜின்) காவிக் கொண்டு வந்திருக்கலாம். பரம்பரை அலகு காரணமாயிருப்பினும், அதனை விருத்தி பெற செய்வது சூழல் அமைவுக்கு (Environment) முக்கிய பங்கு உண்டு. இச்சூழல் அமைவுக்கு குடும்பம், பொருளாதாரம், அரசியல் மற்றும் காதல், நட்பு, அன்பு, பாசம் முதலான தனி மனித உணர்வு ஆகியவற்றால் தான் ஆக்கப் படுகின்றன.

இப்பொழுது தான் அதனை நான் புரிந்து கொண்டேன். மன உளைச்சல் நம்மீது ஏறி சவாரி செய்வதற்கு முக்கிய காரணம் அரசியல் என்பேன். மற்றைய காரணம் பொருளாதாரம். 2009 மே மாதத்தின் பிறகான தோற்று அழிந்துபோன ஒரு சமூகத்தின் ஓர் அங்கத்தினன் நான். வெற்றி என்ற சொல் இனி எம்மிடமில்லை என்றென்றும் எழமுடியா தோல்வி மீது நம் தமிழ் சமூகத்திற்கான மாதிரி கட்டப்படுகிறது. இங்கு வெற்றி அல்லது தோல்வி என்ற பதங்கள் குறிப்பது இராணுவ ரீதியானவை அல்ல. இலங்கைத் தீவில் நம் தமிழ்ச் சமூகத்தின் இருப்பு, அடையாளம் சார்ந்தவை. நம்மைப் பொருத்தவரை அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டன. அடித்துப் பெறவோ, கேட்டுப் பெறவோ, எங்களிடம் ஒரு பலமும் இல்லை. யாரும் தருவதை கையேந்திப் பெற வேண்டும். யாரிடமும் கெஞ்சி, இரந்து நிற்க வேண்டும்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

ஒரு சிலருக்கு இவையொன்றும் பிரச்சினையல்ல. உயிரியல் தத்துவம் ஒன்று உண்டு. 'தக்கெனப் பிழைக்கும் வல்லென ஆளும், அல்லென அழியும். இவ்வுயிரியல் தத்துவத்தை சிக்கனக் கடைப்பிடிக்கின்றனர் அவர்கள். ஓர் அதிகார மையம் அழிந்தால், மற்றைய அதிகார மையத்திடம் தஞ்சம் அடைவர், அண்டிப் பிழைப்பர், நக்கியும் பிழைப்பர். எம் போன்றவர்களுக்குத் தான் இவையெல்லாம் பிரச்சினை. மக்கள் நலம் சார்ந்த அதிகார மையத்திடம் விமர்சனமும், மக்கள் விரோத அதிகார மையத்திடம் விசாரணையும் கொண்டு வாழ்கிறோம். எனவே நாம் வாழும் நாளெல்லாம் அவமாகக் கழியும் நாட்களே.

எம் மன உளைச்சலில் பிரதான காரணி அரசியல் எனில், வரிசையில் அடுத்துநிற்பது பொருளாதாரம். அந்தகக் கவி வீர ராகவ முதலியார் அவர்கள் பதினேழாம் நூற்றாண்டளவில் ஒரு கவிதை தந்தார்.

'ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தாள் சாக அடிமை நோக
மாவீரம் வந்ததென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ள..'

என்கின்ற நிலைமை தான் நமக்கு (பொருள் கன்றினை பசு ஈன, அந்நேரம் பார்த்து மழை பொழிய, மழை நீரில் கரைந்து மண் கூடில் இற்று வீழ மனைவியானவள் குளிரில் விறைத்து இறந்து போக வீட்டு வேலைக்கு வந்தவன் இவற்றைப் பார்த்து ஓடிப் போக, பெரு மழை வந்த தென்று விதை நெல்லைக் கொண்டு வயலுக்கு ஓடிப் போக, போகின்ற வழியில் கடன் தந்தவன் காசு கேட்கபதற்காக மறித்துக் கொள்ள....) இப்படியொரு தரித்திர வாழ்க்கையே நமக்கு வாய்த்தது. அரசாங்கப் பொருளாதாரக் கொள்கைகள் நம்மைப் போட்டு சிப்பிலி ஆட்டுகின்றன.

எங்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்வு இது தான். இம் முதலாளித்துவ உலகில் இவற்றை வெற்றிக் கொள்ளல் மிகமிகக் கடினம்.

துக்கம் என் முகத்தில் இருண்டு கிடக்கும் கதை சொன்னேன் கேள் மகனே.

எய்தவர்களிருக்க...

(18ம் பக்கத் தொடர்ச்சி)

... போகிறது என்ற பெரிய எதிர்பார்ப்போடு தமிழர்கள் இருந்தும் இறுதியில் இந்தியா திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவந்து அனைத்தையும் புஸ்வாணமாக்கியது. பிரேரணையின் தீவிரத்தன்மை குறைக்கப்பட்டு மென்மைத் தன்மை கடைப்பிடிக்கப்பட்டதால் இலங்கையும் அலட்டிக் கொள்ளாமல் இன்றுவரை இனப்பிரச்சனை விவகாரத்திலும், பொறுப்புக் கூறலிலும், மனிதவுரிமை விவகாரங்களிலும் மெத்தனமான போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

போருக்குப் பின்னர் இடம்பெயர்ந்த அகதிகளின் மீள்குடியேற்றம், சரணடைந்த போராளிகளுக்கான புனர்வாழ்வு, போராற் சேதமடைந்த வடகிழக்குப் பிரதேசங்களில் கட்டுமானப் புனரமைப்பு, நாட்டின் அமைதியில் குறிப்பிடத் தக்க அபிவிருத்தி என்று பல அம்சங்களில் அதிகளவு குறைகூறமுடியாத நிலை இலங்கையில் காணப்படுவதை மறுப்பதற்கில்லை. ஆயினும், போரின் போது நடந்த இனவழிப்பு உட்பட இன்றுவரை தொடரும் மனிதவுரிமைகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாலும், சென்ற முறை கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இந்தப் பொறுப்புக்கூறலே முக்கிய இடத்தை வகித்ததாலும் இலங்கை இந்த விடயத்தில் மேலும் பிரச்சனைகளையும் நெருக்குவாரங்களையும் எதிர் நோக்கக்கூடிய சூழலே இன்றுவரை காணப்படுகின்றது. இலங்கை இந்த விடயத்தைத் தட்டிக் கழித்துத் தப்பிக்கப் பார்க்கிறது. இதுவரை தாக்குப்பிடித்த இலங்கைக்கு இம்முறையும் தாக்குப்பிடிப்பது பெரிய விடயமாக இருக்கப் போவதில்லை.

இனவழிப்புப் போர், மனிதவுரிமை மீறல்கள் போன்றவற்றிற்குப் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டிலிருக்கும் ஓர் அரசின் அதிபருக்கு சர்வதேச அரங்கில் இருக்கக்கூடிய மரியாதைக் குறைபாடுகள் எதுவுமற்றவராக இலங்கை ஜனாதிபதி இன்றுவரை காணப்படுகிறார். தனிப்பட்ட விஜயங்கள் உட்பட அரசாங்கங்களின் அழைப்புக்களில் அவர் கௌரவத்தோடு கவனிக்கப்படுகிறார். மாநாடுகளில் கலந்துகொள்கிறார். இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார். தற்போது மனிதவுரிமை மாநாட்டுத் தீர்மானங்கள் தன்னைப் பாதிக்காதிருக்கச் செய்த நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற புத்தகயா, திருப்பதியுட்பட பல சமயத்தலங்களுக்கும் சென்று வருகிறார். தமிழ் நாட்டிலுள்ள வைகோ, சீமான் போன்ற தலைவர்கள் அவரது வருகைகளுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்தாலும் இந்தியாவில் இலங்கை ஜனாதிபதிக்கு உரிய மரியாதை அளிக்கப்படுகிறது. இவையெல்லாம் எதிர்காலத் தீர்மானங்கள் எவையும் இலங்கை ஜனாதிபதியையும் அவரது சகாக்களையும் எதுவிதத்திலும் பாதிக்கப் போவதில்லையென்பதையே காட்டி நிற்கின்றன. அப்படியானால் என்ன தான் நடக்கவிருக்கிறது? நடந்த அராஜகங்களுக்கு யார் பொறுப்புக் கூறப் போகிறார்கள்? என்ற கேள்விகள் எழுகின்றன. எதிர்காலத்தில் என்னதான் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் எய்தவனிருக்க அம்பைக் குற்றவாளியாக்குவது போல பொறுப்புக் கூறலிலும் சில கடை நிலைச் சிப்பாய்களும் கீழ்மட்ட இராணுவ அதிகாரிகளுமே கடைசியில் குற்றவாளிகளாக நிறுத்தப் படப்போகிறார்கள், சில வேளை தண்டிக்கப்படவும் போகிறார்கள்.

தொடருவம்



பிறந்திருக்கும் புத்தாண்டில்
புதியதொரு ஆரம்பத்துக்குத் தயாராா ?

புத்தாண்டில் புதியதொரு வியாபாரத்தைத் தொடங்கவிருக்கிறீர்களா ?

உங்கள் வியாபாரம் சிறியதோ பெரியதோ கவலை வேண்டாம்!!!

- Business start-up advise - Business Plans
- Cashflow forecast and projections - Arranging loans and funding
- Preparing VAT, Payroll and Tax returns - Recruitment
- Company formations - Financial and Management information

தொடங்கவிருக்கும் புதிய முயற்சியில் உங்களுக்குத் தேவையான சகலவிதமான நிதி கணக்கியல் ஆலோசனைகளையும் அனுபவம் மிக்க நிபுணர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்கள்.

தாமதம் வேண்டாம்

vectra
Complete Business Solutions

Vectra Consulting

விபரங்களுக்கு அழையுங்கள் 0203 576 0000

G02, Lombard House, 2 Purley Way, Croydon CR0 3JP

Email: **info@vectraconsulting.co.uk** Web: **www.vectraconsulting.co.uk**

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 28 வயது, 6'2" Canadian citizen finished diploma and working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4482

2. 43 வயது, 5'5" British citizen divorced self employed தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4470

3. 36 வயது, 5'7" Canadian citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4461

4. 47 வயது, 5'8" PR in UK, Divorced working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

5. 30 வயது, 5'9" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4456

6. 22 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4450

7. 31 வயது, 5'6" Student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4446

8. 36 வயது, 5'10" British citizen working as a building contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4043

9. 33 வயது, 5'9" British citizen working in a Super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574

10. 36 வயது, 5'10" British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4445

11. 28 வயது, 5'10" work permit visa graduate working in a shop தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4444

12. 37 வயது, 5'5" British citizen divorced working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4441

13. 38 வயது, 5'3" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4435

14. 37 வயது, 5'5" British citizen working as a carpenter தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4431

15. 32 வயது, 5'8" Permanent residence in Uk working as a cashier தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4430

16. 32 வயது, 5'8" Permanenet residence in Swiss ,Graduate working in a super market தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4424

17. 40 வயது, 5'7" British citizen self employed தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4423

18. 32 வயது, 5'8" British citizen graduate working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4419

19. 37 வயது, 5'9" work permit visa working in a supermarket தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4412

20. 29 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4410

21. 34 வயது, 5'4" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4408

22. 29 வயது, 5'8" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4404

23. 44 வயது, 5'6" work permit visa working in a supermarket தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4382

24. 38 வயது, 5'5" British citizen self employed தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4312

25. 47 வயது, 5'8" Accountant permanent residence in uk divorced looking for a suitable bride Ref: 3422

26. 29 வயது, 5'9" student visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4395

27. 30 வயது, 5'5" graduate work permit visa in UK தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4394

28. 29 வயது, 5'9" PSW visa working in a shop தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4392

29. 42 வயது, 5'8" British citizen working in a finance sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4378

30. 29 வயது, 5'6" PSW visa Engineer in a company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4377

31. 28 வயது, 6'2" Canadian citizen graduate manager in a hotel தகுந்த மணமக ளை தேடுகின்றனர் Ref: 4376

32. 34 வயது, 5'10" British citizen working in IT field தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3714

33. 36 வயது, 6'1" Accountant born and broughtup in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4374

34. 26 வயது, 6'0" student visa doing diploma தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4371

35. 22 வயது, 5'1" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4369

36. 37 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4367

37. 30 வயது, 5'10" graduate work permit visa working as a manager in hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4355

38. 40 வயது, 5'8" British citizen Engineer divorced working in a super market தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4075

39. 29 வயது, 5'7" Tier 2 work permit visa Graduate working as chef in restaurant தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3975

40. 28 வயது, 5'3" Permanent visa in Germany,Working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4295

41. 41 வயது, 5'9" PR in UK,doing own business தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4334

42. 39 வயது, 5'9" British citizen, working in offlicence as a manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4336

43. 31 வயது, 6'1" PSW visa, working in a food court தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4325

44. 32 வயது, 5'3" Refugee in Switzer land, working in a hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4324

45. 29 வயது, 5'7" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4323

46. 30 வயது, 5'6" student visa in UK, working in food court தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4320

47. 34 வயது, 5'10" PR, working in a company as a director தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4318

48. 28 வயது, 5'7" born and broughtup in uk graduate woring as a sales assistant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4317

49. 32 வயது, 6'0" Canadian citizen, Working as a software developer in Canada தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4314

50. 33 வயது, 5'4" Graduate, Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4313

51. 38 வயது, 5'5" British citizen self employed தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4312

மணமகன் தேவை

1. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

2. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4477

3. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின் றனர் Ref: 4471

4. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின் றனர் Ref: 4465

5. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4455

6. 27 வயது, 5'4" srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4414

7. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4398

8. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4388

9. 35 வயது, 5'4" British citizen divorced living with the child working in a super market தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4383

10. 33 வயது, 5'8" British citizen divorced working as a Teacher தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3508

11. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

12. 30 வயது, 5'5" Born and Brought up in Uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316

13. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

14. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4362

15. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

16. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

17. 34 வயது, 5'5" British citizen, Separated தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4331

18. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

19. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348

20. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322

21. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4321

22. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4310

23. 26 வயது, 5'3" living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4304

24. 32 வயது, 5'3" British Citizen, Working in an IT consultant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4303

25. 33 வயது, 5'0" Graduate Divorced living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4302

26. 32 வயது, 5'2" Graduate, living in Srilanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4291

27. 29 வயது, 5'2" Graduate working as a Teacher in Srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4281

28. 31 வயது, 5'4" Graduate, Canadian citizen living in canada தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4265

29. 30 வயது, 5'5" working in a supermarket in a workpermit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

30. 29 வயது, 5'5" graduate PSW visa in uk தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4287

31. 29 வயது, 5'5" Asylum seeker divorced தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4278

32. 31 வயது, 5'4" Doctor in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4277

33. 30 வயது, 6'0" British citizen working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4267

34. 30 வயது, 5'5" born and brought up in uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316

35. 25 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4270

36. 31 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4266

37. 26 வயது, 5'3" graduate Permanent visa in uk தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 1243

38. 35 வயது, 5'6" Accountant in srilanka தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 826

39. 33 வயது, 5'3" Doctor British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248

40. 28 வயது, 5'2" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4247

41. 37 வயது, 5'7" Working as an Accountant Permanent residence in UK தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4242

42. 33 வயது, 5'4" divorced Permanent residence in sweden தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4234

43. 29 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4228

44. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

45. 22 வயது, 5'4" Permanent residence in uk graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4183

46. 27 வயது, 5'4" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4182

47. 23 வயது, 5'3" France citizen graduate working in uk in bank தகுந்த மண மகனைதேடுகின்றனர் Ref: 4161

48. 36 வயது, 5'4" British citizen working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4150

49. 21 வயது, 5'0" British citizen graduate தகுந்தமணமகனைதேடு கின்றனர் Ref: 4142

50. 24 வயது, 5'2" Student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4125

51. 37 வயது, 5'3" Germany Citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

52. 29 வயது, 5'7" residing in Srilanka graduate தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4119

53. 27 வயது, 5'1" residing in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4118

54. 23 வயது, 5'0" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4112

55. 22 வயது, 5'3" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4100

56. 26 வயது, 5'4" permanent residence in uk working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096

57. 27 வயது, 5'3" Canadian citizen doctor தகுந்த மணமகனை தேடுகின் றனர். Ref: 4093

58. 41 வயது, 5'3" British citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4091

59. 42 வயது, 5'2" student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

60. 27 வயது, 5'0" graduate working in srilanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4068

61. 41 வயது, 5'2" British citizen working as a Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3362

62. 39 வயது, 5'3" widow with 6 years old son in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4031

63. 24 வயது, 5'7" , Born and brought up in Switzerland, Working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3933

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

பசுமை வளமான கிளிநொச்சி மண்

இறுதி வரை அன்னியனுக்கு அடி பணிய மறுத்த தமிழ் மன்னன் பண்டார வன்னியன் ஆண்ட வன்னி சார்ந்த மண் கிளிநொச்சி. பாண்டியன் ஆண்ட பூநகரியையும் இணைத்த வரலாற்றுப் புகழ் கொண்ட மண் இது. எழுதுமட்டுவாள் முதலான முருகண்டி வரைக்கும் நீள் எல்லையாகவும், முழங்காவில் முதல் விஸ்வமடு பதினான்காம் கட்டை வரை அகல எல்லையாகவும் கொண்ட 634 சதுர மைல் பரப்பை விஸ்தீரணமாகக் கொண்டது கிளிநொச்சி மாவட்டம்.

பளை, பூநகரி, கரச்சி என்ற பிரதேச சபைகளையும் முள்ளிப்பற்று, புலோற்பளை, முகமாலை, பூநகரி, பல்லவராயன் கட்டு, இரணைதீவு, கரச்சி, கண்டாவளை என்ற உள்ளூராட்சி சபைகளையும் கொண்ட மாவட்டம். 1960ஆம் ஆண்டு முதல் தனித்தேர்தல் மாவட்டமாக இது மாறியது. 1984ஆம் ஆண்டு தனி மாவட்டமாக இது யாழ்ப்பாணத்திலிருந்து விலகி இயங்க ஆரம்பித்தது. 1944ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கான குடியேற்றத் திட்டங்கள் உருவாகத் தொடங்கின. இதற்கு முன்னதாக முரசுமோட்டை மற்றும் பூநகரிப் பகுதிகளில் பழைய கிராமங்கள் என சில கிராமங்கள் இருக்கத் தான் செய்தன.

கண்டியை நோக்கிய பாதையாக முன்பு இருந்த பாதை இயக்கச்சியிலிருந்து பின்னோக்கி கண்டாவளையூடாக வந்து முரசுமோட்டையிலிருந்து போகின்ற பாதையாக இருந்த கண்டி வீதி பின்னர் பரந்தன் கிளிநொச்சியூடாக செல்லுகின்ற பாதையாக மாறியிருந்தது தனிவரலாறு.

இதேவேளை, இனக்கலவரங்களால் விரட்டப்பட்ட 1959, 1977, 1983 ஆம் ஆண்டு இனக் கலவரங்களின் அகதிகளுக்கான நிரந்தர வதிவிடங்களை கிராமங்களாக்கிக் கொண்டதும் கிளிநொச்சி தான். கிளிநொச்சி போராட்ட காலத்தில் வளர்ச்சியின் முக்கிய கட்டமாகத் திகழ்ந்தது. கிளிநொச்சியின் போராட்ட இயக்கத்தின் நடுவன் மையம் கிளிநொச்சியில் இயங்கியதும், தமிழீழத்தின் இதயமாக வர்ணிக்கப்பட்டதும் தெரிந்ததே.

முள்ளிவாய்க்கால் வரையான தொடர்ந்த போர் வடுக்கள் அதிகம் கொண்ட அழிவுகளை அதிகம் கண்ட அந்த மண், இன்று சிங்களக் குடியேற்றத்திட்டங்களை அடுக்கடுக்காக கண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. புலம்பெயர் நாடுகளில் வாழும் கிளிநொச்சியின் மண்ணின் மைந்தர்கள், அங்கு பிறந்து வளர்ந்தவர்கள் இன்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், வாழ்வு பணிகளுக்காக கிளிநொச்சி மக்கள் ஒன்றியம் என்ற பெயரிலும், பிற மருத்துவ வசதிகளை உள்ளடக்குகின்ற மருத்துவ உதவியகப் பெயர்களிலும் இங்கு இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். இவர்களுடைய உதவிகள் புனர்வாழ்வுப் பணிகளுக்கு பெருமளவு போய்ச் சேருகின்ற இந்த நிலையிலும் கிளிநொச்சியின் பெருமிய மற்றும் பிற வளர்ச்சிகளுடைய தாக்கம் இன்னும் நலிவாகத் தான் உள்ளது.

அண்மையில் பெய்த மாரி மழை கூட கிளிநொச்சி நெற்செய்கையை பெருமளவு பாதித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனையிறவுதடை முகாமின் இறுக்கம் போராட்டச் சூழலின் போது வலுவடைந்தது கிளிநொச்சி மாவட்ட வளர்ச்சிக்கு முக்கிய காரணமானது.

வயலும் தோட்டமுமாக ஏழ்மை வாழ்வும், வசதி குறைந்த பாடசாலைகளைக் கொண்டிருந்த கிளிநொச்சிமக்களும், கிளிநொச்சி மாவட்டமும் கல்வியில் பின்தங்கி இருந்தமை மறக்க முடியாதவை. ஆயினும் பின்தங்கிய கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு ஆண்டு சேவை செய்தால் யாழ்ப்பாணத்துக்கு ஊரோடு உத்தியோக மாற்றம் பெறலாம் என்ற வசதி முன்பு இருந்தது.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

அரச உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல குறிப்பிடத்தக்கதொரு தொகையான ஆசிரியர்களும் கூட காலை யாழ்.தேவியில் பரந்தன், கிளிநொச்சி புகையிரத நிலையங்களில் வந்திறங்கி கடமைக்கு கையொப்பமிட்டுவிட்டு 11 அல்லது 12 மணிக்கு பஸ்ஸில் அல்லது மதிய யாழ்.தேவியில் மலிந்த அரிசி, காய் கறிகளையும் வாங்கிக் கொண்டு தினமும் யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்களாகத் தான் அந்த நாட்களில் இருந்தார்கள்.

பெருமளவு நெற்காணி உடமையாளர்களும் கூட வரம்பிலிருந்து குடை பிடித்து வயலைப் பார்க்கின்ற முதலாளி கமக்காரர்களாக இருந்தார்கள். அவர்களும் கூட அந்த நுளம்புப் பாம்பு நிறைந்த கிளிநொச்சியின் வருமான வளத்தை நோக்காகக் கொண்டார்களே தவிர அங்கே இருப்புக்கு தகுந்த இடமாக அந்த நாட்களில் கொண்டிருக்கவில்லை. கூலிக் கடமையாளர்களிடம் கடமையை ஒப்புவித்துச் செல்லும் யாழ்ப்பாண விவசாயிகள் மட்டுமல்ல, படித்த வாலிபர் குடியேற்ற திட்டங்களைச் சேர்ந்த வாலிபர்களின் நிலையும் இதுவாகத் தான் இருந்தது. மாணமாகாத அந்த இளைஞர்கள் அடிக்கடி அந்த நாட்களில் வீடு போபவர்களாகவும், ஊர் என்று பிறந்த கிராமத்தையே மனதில் உணர்வாகக் கொண்டிருந்தவர்களாகவும் காணப்பட்டார்கள்.

போர்ச்சூழலில் ரயில், பஸ் போக்குவரத்து சீர்கேடு அடைந்ததும் தடை முகாம்களில் கண்காணிப்பு வலுவடைந்ததாலும், இதனால், பயண பிரச்சினைகள் எழுந்ததும் இந்த உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள் அனைவருமே கிளிநொச்சி மண்ணில் தங்கியிருந்து சேவை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இதனால் கிளிநொச்சியுடைய கல்வி வளர்ச்சியடைந்தது. இதற்கு உறுதுணையாக கிளிநொச்சி தனி மாவட்டம் என்ற சூழலும் பல்கலைக்கழகத் தெரிவில் மாணவர்கள் கூடுதலான வாய்ப்பைப் பெறும் வசதியும் உருவானது. கிளிநொச்சி தனி மாவட்டமாக உருவாகப் போராடியவர்களில் அன்றைய நாட்களில் ஆனந்தசங்கரியின் பணியும் குறிப்பிடத்தக்கது தான்.

தொடர்ந்த போராட்டச்சூழலில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களால் கிளிநொச்சி சனப் பரம்பல் உயர்ந்தது கிளிநொச்சியின் வளர்ச்சிக்கு இதுவும் முக்கிய காரணமானது. பல தடைகளைத் தாண்டி நடை போட்டு நிமிர்ந்து நிற்கின்ற மண் தமிழ் மண்ணாக நிலை பெறுமா என்பதை இன்றைய கால கட்டத்தில் ஏக்கத்தோடு தான் நோக்க வேண்டியிருக்கின்றது.

தமிழினப்...

ஆணையத்தின் அறிக்கைகள் புலிகளை கடுமையாக குற்றம் சாட்டி வெளியிடப்படுகின்றன.

விடுதலைப்புலிகள் மீதான குற்றச்சாட்டு

மேற்குறிப்பிட்ட மார்ச் 12-13ஆம் தேதி அறிக்கையே தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தன் தொடர்பில் வெளியிடப்பட்ட இறுதி அறிக்கையாக அமைகிறது. இந்த வேலையை விஜய் நம்பியார் செய்தபோது, கிட்டதட்ட 45 நாட்களுக்கும் மேலாக உணவும், மருந்தும் இல்லாமல் ஆயிரக்கணக்கான இறப்புகள் முற்றுகைப் பகுதியில் நடைபெறுகின்றன என்பதை சார்லஸ் பெட்ரி பதிவு செய்கிறார்.

மருந்தும், உணவும் போரின் கருவிகளாக பயன்படுத்தப்படுவதை ஐ.நா.வின் சாசனம் போர்க்குற்றமாகவே சித்தரிக்கிறது. இதை ஐ.நா.வின் உயர் அதிகாரிகளான விஜய் நம்பியாரும், ஜோன் ஹோல்ம்ஸ்சும் செய்து முடிக்கிறார்கள். 15 ஜனவரி 2009க்குப் பிறகு போரின் இறுதிக் காலம் வரை எந்த ஒரு உதவிப் பொருளையும் ஐ.நா. கொண்டு சேர்க்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

போர்க்குற்றங்கள்

12 மார்ச் 2009 அன்று ஐ.நா.வின் முக்கிய குழுக்களில் ஒன்றான மனித உரிமைக் குழு 'இலங்கை செய்தது போர்க் குற்றம்' என்றும், 'மனித குலத்திற்கு எதிரான குற்றம்' என்றும் முடிவுக்கு வருகிறது. அவ்வாறு அறிவிப்பதற்கான ஆதாரங்களை அது பரிசீலித்தபிறகே அந்த முடிவுக்கு வருகிறது. மனித நேய உதவிகளைச் செய்யும் குழுவிற்கு சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறும் நிகழ்வுகள் தெரிந்தே இருக்கும். அதை அவர்கள் அவதானிக்க வில்லை என்றால் எந்த வழிமுறையில் ஐ.நா. அவதானிக்கும் என்பது எளிய கேள்வி. ஆனால் இவ்வாறு முதல் தகவலாக நேரடியாகப் பெறப்பட்ட தகவலை உறுதி செய்ய முடியாத தகவலாக ஜான் ஹோல்ம்ஸ்ம், விஜய் நம்பியாரும் கருதுகிறார்கள். இந்தத் தகவல் அறிக்கையாக வரும்போது, அதன் முக்கியப் பகுதிகளை ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் மறைத்தே வெளியிட்டுள்ளார்கள்.

ஏப்ரல் 2009இல் ஐ.நா.வின் தலைமை அலுவலகத்தில் இருந்து ஐ.நா.விற்கான துணைக் கோள் உதவியுடன் பெறப்பட்ட தகவலை அடிப் படையாகக் கொண்டு, அங்கு பெருமளவிலான சேதங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு இருப்பதாகவும், மருத்துவமனைகள் உள்ளிட்ட பகுதிகள் தாக்கப்பட்டு இருப்பதாகவும், செய்திகள் வெளியிடப்பட்டு இலங்கை அரசினைக் கண்டித்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதுவும் எப்பொழுதும் போல புலிகளையும் குற்றம் சாட்டியே வெளியிடப்பட்டது. ஆனாலும், ஜோன் ஹோல்ம்ஸை அழைத்த இலங்கை அரசு, கடுமையாக கண்டித்ததோடு, அந்த செய்தி உண்மைக்கு மாறான, உறுதிப்படுத்தப்படாத தகவல் என வெளியிடச் சொல்லி நெருக்குகிறது. அதை ஏற்று இலங்கை அரசிற்கு மின்னஞ்சலை அனுப்புகிறார். அந்த மின்னஞ்சலை ஐ.நா.வின் மறுப்பு அறிக்கையாக, துணைக்கோள் செய்தி அறிக்கையை மறுத்த செய்தியாக இலங்கை வெளியிடுகிறது. இதை ஐ.நா. கண்டிக்க வில்லை. மாறாக பான் - கி- மூனின் செய்தித் தொடர்பாளர் பத்திரிகையாளர் சந்திப்பின் போது, இலங்கை தொடர்பான மக்கள் இறப்பினைப் பற்றிய கேள்விக்கு 'உடல்களை எண்ணுவது எங்களது பணியல்ல' என்று சொல்லி கடந்து செல்வதை நாம் காணொளியாகக் கண்டோம்.

ஐ.நா.வின் முக்கிய நிறுவனங்களில் ஒன்றான மனித உரிமை அமைப்பு இவ்வாறு அமைதியாக் கப்பட்டதுபோன்றே ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக இருந்த ஜப்பானின் தக்காசுவின் இலங்கை சார்பு நிலையும், புலிகளுக்கு எதிரான அறிக்கையும் மனித உரிமை, மனிதநேயப் பிரச்சனைகள் தொடர்பில் பாதுகாப்பு கவுன்சில் இலங்கையை விவாதப் பொருளாக மாற்றுவதை தடுத்தது. போர் முடியும் காலம்வரையில் ஐ.நா.வின் பொதுச் சபையோ, பாதுகாப்பு கவுன்சிலோ கூட்டப்படாமல் செய்வதற்கான முயற்சியை இவர்கள் பான் -கி-மூனின் மௌனமான அங்கீகாரத்தின் மூலமாக செய்து முடித்தார்கள்.

ஐ.நா.வின் இனப்படுகொலை தடுப்பு ஆலோசகர் நேரடியாக கள ஆய்வு செய்து ஐ.நா.வின் தலைமை அதிகாரியான பான் - கி- மூனிற்கு செய்தி அனுப்பி, இனப்படுகொலையை தடுக்க வேண்டும். இவருக்கும் ஐ.நா.வின் மனித நேய, மனித உரிமைச் சட்டங்களை அமுல்செய்யும், உறுதிபடுத்தும் அதிகாரம் உண்டு. இவர் மே 15 ஆம் திகதி, 2009இல் இனப்படுகொலை நிகழ்வதற்கான வாய்ப்பிருப்பதாக ஒரு குறிப்பினை அனுப்புகிறார். ஆனால் அவர் ஜோன் ஹோல்ம்ஸ், விஜய் நம்பியார் முன்வைத்த இலங்கை அரசுடன் ஒத்துழைத்து செயல்படுவது என்பதற்கு ஏற்ப முடிவெடுத்ததாக பெட்ரி தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

விஜய் நம்பியார்

இதன் பிறகு இலங்கையில் பிரச்சனையை மேற்பார்வையிடவும், கையாளவும் விஜய் நம்பியார் மே 14ம் தேதி அனுப்பப்படுகிறார். மே 15 ஆம் தேதிக்குப் பின்பு முள்ளிவாய்க்காலில் சிக்குண்ட மக்களையும், இலங்கை ராணுவத்திடம் சரணடையும் புலிகளின் அரசியல் தலைவர்களையும், பொதுமக்களையும், போராளிகளையும் சர்வதேச சட்டங்களின் படி இலங்கை அரசு நடத்துவதையும், அதை மேற்பார்வையிட்டு உறுதி செய்வதுமே அவரது முதன்மைப் பணியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இவர் முள்ளிவாய்க்காலுக்கு செல்வதற்குஇலங்கை அரசு அனுமதி மறுக்கிறது. வெள்ளைக் கொடியுடன் வருபவர்களைக் காப்பதாக இலங்கை அரசு இவரிடம் உறுதி கூறுகிறது. பின்பு பத்திரிகையாளர் சந்திப்பில் ஏன் முள்ளிவாய்க்காலுக்கு செல்லவில்லை எனும் போது 'கொழும்புவிற்கு வெளியே தட்பவெப்பம் சரியாயில்லை' என்கிறார்.

விஜய் நம்பியாரின் மூத்த சகோதரர் சதீஸ் நம்பியார் என்பவரே இனப்படுகொலை போரில் இலங்கை ராணுவத்திற்கான ஆலோசகராக செயல்பட்டவர்.

பான் கி மூன்

மே 17, 18, 2009இல் போர் முடியும் வரை பான் - கி - மூன் இலங்கைக்கு வரவே இல்லை. போரின் இறுதி நாளில் வெள்ளைக்கொடியுடன் வந்த புலிகளின் தலைவர்களும், அவர்களின் குடும்பங்களும் கொலை செய்யப்பட்டதும், பெரும் திரளாக மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் சர்வதேச ஊடகங்களில் வெளியான போது கூட இவர் இலங்கைக்கு வரவில்லை. ஆனால் போர் வெற்றி விழாவில் கலந்து கொள்ளவே அவர் இலங்கையில் இறங்குகிறார் என ஐ.நா.வின் அதிகாரிகளே அவதானிக்கிறார்கள். இவ்வாறான குற்றச்சாட்டு உண்மை என் பதை அறிவோம். போர் ஆரம்பித்த காலத்தில் இருந்து இறுதி வரை புலிகளின் மீதே குற்றச்சாட்டினை ஐ.நா. வைத்தது என்று ஐ.நா.வின் களப் பணியாளர்கள் பதிவு செய்தார்கள். ஐ.நா.வினுடைய இலங்கைக்கான பணியாளர் குழு இதை எதிர்த்திருக்கிறார்கள் என்பதை அறிக்கை பதிவு செய்திருக்கிறது. ஏனெனில் அவர்களது கூற்றுப்படி இலங்கை அரசு மீதான எந்தவித குற்றச்சாட்டினையும், ஆதாரங்கள் இருந்த போதிலும் ஐ.நா. வெளியிடவில்லை.

போர் முடிந்த பிறகு இலங்கை மீது ஒரு விசாரணையை ஐ.நா.வின் 99வது விதியின் படி துவக்க வேண்டும் என ஐ.நா.வின் சட்ட நிபுணர் குழு கோரிக்கை வைக்கிறது. ஜ?லை 2009இல் கொள்கைக் குழுவில் ஒரு நீதி விசாரணைக்குப் பதிலாக இலங்கைக்கு சிறிது கால அவகாசம் அளிப்போம் மற்றும் ஒரு உள்நாட்டு விசாரணை ஆரம்பிக்கட்டும் எனக் கூறி ஐ.நா.வின் விசாரணையை பான் - கி - மூன் மறுக்கிறார். இலங்கை அரசு உள் நாட்டு நீதி விசாரணைக்கு 2010 ஜனவரிவரை மறுத்தே வருகிறது (அதாவது ராஜபக்சே மீண்டும் அதிபராகும் வரை காத்திருக்கிறது). அதுவும் இயலாமல் போகவே மார்ச் 2010இல் இலங்கைப் போரின் மீது ஒரு விசாரணைக் குழுவினை அமைக்கிறார். இந்த விசாரணைக் குழுவும் இலங்கைக்குள் செல்லாமலேயே அறிக்கை தயாரிக்கிறது. இலங்கைக்குள் அனுமதி மறுத்ததை ஐ. நா. கண்டிக்கவே இல்லை.

இது போன்ற எண்ணற்ற ஆதாரங்களோடு ஐ.நா.வின் உயர் அதிகாரிகளின் செயல்பாடுகள் ஐ.நா.வின் உள்ளக அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதுமேலாக எந்த வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. மாறாக இந்த உண்மைகளை மூடி மறைக்கவே செயல்பாடுகள் நடக்கின்றன.

தமிழர்களும் ஒரு இணைய வெளிப்படையணி (Cyber warfare regiment) அமைக்கலாமா ?

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

வருங்காலத்தில் நாடுகளுக்கிடையிலான போர் தரை, கடல், விண்வெளி மார்க்கமாக மட்டுமல்லாமல் இணையவெளியிலும் நடக்கவிருக்கிறது. அதற்கான தயாரிப்புக்களில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. அது மட்டுமல்ல பல போராளி இயக்கங்களும் இதில் தமது திறமையை வளர்த்து வருகின்றன.

இணையவெளிப் போர் பலவகைப்பட்டதாக இருக்கிறது. இணையவெளி மூலம் மற்றவர்களை உளவு பார்த்தல், மற்றவர்களின் சமூக வழங்கல்களை நிர்மூலமாக்குதல், முக்கிய தகவல்களை அழித்தல், பல பொறிகளை இயங்காமல் முடக்குதல், தொடர்பாடல்களை ஒற்றுக் கேட்டல், தொடர்பாடல்களை முடக்குதல், தொடர்பாடல்களை திசைதிருப்புதல் இப்படிப் பல செய்ய முடியும். இணையவெளி ஊடுருவல்கள் வர்த்தகரீதியாகவும் சுரண்டப்படுகின்றன. ஒரு நிறுவனம் பெரும் தொகைப் பணம் செலவழித்து கண்டுபிடித்த தொழில் நுட்பங்களை மற்ற நிறுவனங்கள் இணையவெளியூடாகத் திருடி விடுகின்றன. பல அமெரிக்க நிறுவங்களின் தொழில்நுட்ப இரகசியங்கள் பல சீனாவில் இருந்து திருடப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. உண்மையான முதல் இணையவெளிப் போர் 2008-ம் ஆண்டு இரசியாவால் ஜோர்ஜியா நாட்டிற்கு எதிராக மேற் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால் அதற்கான ஆதாரங்களோ தடயங்களோ இல்லாமல் தாக்குதல் நடந்தது. சீனாவிலும் இரசியாவிலும் சில கிராமங்கள் முழுமையாக இணையவெளிப் போராட்டத்திற்கு என்றே தம்மை அர்பணித்துள்ளதாகவும் அதுவே அவர்களின் வருமானம் எனவும் ஒரு அமெரிக்க ஊடகம் தகவல் வெளியிட்டது.

சீனாவிடம் இணையவெளி நீலப் படைப் பிரிவு என்ற பெயரில் இணையவெளி நிபுணர்களைக் கொண்ட ஒரு படைப் பிரிவு உண்டு. இவை இரவு யாளி என்னும் பெயரில் பிரித்தானியாவிற்கு எதிராக ஒரு படை நடவடிக்கையை மேற் கொண்டதாகவும் கூறப்படுகிறது. அமெரிக்காவிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிக்கும் லொக்கீட் நிறுவனத்தின் கணனிகள் தொடர் ஊடுருவல் முயற்சிகளுக்கு உள்ளாகிவருகிறது. முழுக்க முழுக்க கூகிளின் இணையத்தளம் போல் போலியான ஒரு இணையத்தளத்தை சீனாவில் உருவாக்கி அதில் அமெரிக்கப்பாதுகாப்புத் துறையினர் உண்மை என நம்பி உள் நுழைந்து தமது மின்னஞ்சல்களின் கடவுச்சொற்களை பதிந்தனர். இதனால் பல இரகசியங்கள் திருடப்பட்டன. இணைய வெளிப் போர்முனையில் சீனா முன்னணியில் இருக்கிறது என்று ஐக்கிய அமெரிக்கா அஞ்சுகிறது. இதனால் அமெரிக்கப்பாதுகாப்புத்துறை தனது இணையவெளிப் போர் முறைமைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதாக 27-01-2013 அன்று செய்திகள் வெளிவந்தன.

அமெரிக்காவின் படையினர் இணையவெளியிலும் செய்மதித் தொடர்புகளிலும் பெரிதும் தங்கியிருக்கின்றனர் என்பதை உணர்ந்த சீனா இணைய வெளியில் தனது போர் முறைகளை வளர்த்தது. அத்துடன் செய்மதிகளை நிலத்தில் இருந்து செலுத்தும் ஏவுகணைகள் மூலம் அழிக்கும் தொழில் நுட்பத்தையும் உருவாக்கியது.

அமெரிக்காவின் Cyber-Pearl Harbor

அமெரிக்காவின் மின்வழங்கல், நீர் வழங்கல், மற்றும் அத்தியாவசியத் தேவைகள் வழங்கும் கணனிகளை இணையவெளித் தாக்குதல் மூலம் முடங்கச் செய்து அமெரிக்காவையே செயலிழக்கச் செய்ய அதன் எதிரி நாடுகளால் முடியும் என்று பல நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இது ஜப்பான் இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கத் துறைமுகமான Pearl Harbor இல் தாக்குதல் செய்து பல அமெரிக்கக் கடற் படைக் கப்பல்களை அழித்தது போல் பேரிழப்பு விளைவிக்கக் கூடியதாக இருக்கும் என அவர்கள் எச்சரிக்கின்றனர். அமெரிக்க அணுப்படைகலன்களை ஊடுருவிகள் கைப்பற்றலாம் என வும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசையும் சீனா விட்டு வைக்கவில்லை

சீன ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த சீனக் குடிமகனான லியூ சியாபோ விற்கு நோபல் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தவுடன் நோர்வேயில் உள்ள நோபல் பரிசுக் குழுவினரின் கணனிகள் சீனாவில் இருந்தது ஊடுருவி அவர்களின் இணையத் தளத்தைப் பார்ப்பவர்களின் கணனிகளில் வைரஸ் பரவும் படி செய்யப்பட்டிருந்தது. சீனாவின் இது மாதிரியான செய்கைகளைப் பற்றி ஒரு இராச தந்திரி கருத்துத் தெரிவிக்கையில் சீனா தனது நாட்டைப்பற்றியோ அல்லது ஆட்சியாளர்களைப் பற்றியோ மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று ஒரு போதும் கவலைப்படுவதில்லை என்றார்.

இந்தியப் படைத்துறை இரகசியங்கள் சீனாவின் கையில்

சீன இணைய ஊடுருவிகள் பலதடவை இந்தியப் படைத்துறைக்குத் தெரியாமல் அவர்களின் கணனிகளை ஊடுருவி பல தகவல்களைப் பெற்றுள்ளார்கள் என நம்பப்படுகிறது. இதில் எந்த அளவு தகவல்கள் பாகிஸ்தானுக்குப் பரிமாறப்பட்டது என்பது பெரும் கேள்வி. மும்பையைச் சேர்ந்த ஒரு இணையவெளி ஊடுருவி தான் அரச அதிகாரிகளுக்கு தனது வைரஸை இணைப்பாகக் கொண்டு ஒரு மின்னஞ்சல் அனுப்பினால் அதில் 75% மானவர்கள் அதைத் திறந்து பார்ப்பார்கள் என்றும் அதன் மூலம் தன்னால் பல அரச செயற்பாடுகளை மறு நாள் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றார்.

Mumbai-based hacker specializing in network penetration says: "If I was attacking the Government today, I would send every email address in every government department a malicious link or attachment. I have no doubt that it would be opened by over 75% of people, and that I would have control of government systems at multiple levels by the end of tomorrow afternoon. Sadly, this is neither a sophisticated nor a novel attack." - from the indiasite.com

ஆரம்பித்து வைத்தது அமெரிக்கா

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் கணனிகளை ஒன்றாக இணைத்து ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளச் செய்ததன் மூலம் இணையம் முதலில் கண்டறியப்பட்டது. அதே அமெரிக்காதான் இஸ்ரேலுடன் இணைந்து இணையவெளிப் போரை ஆரம்பித்து வைத்தது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது பல இணைய வெளித் தாக்குதல்களை மேற்கொண்டன.

இணையவெளி Sleeper Cells

அமெரிக்காவும் தனக்கே உரித்தான பாணியில் இணையவெளிப் போரில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அமெரிக்கா தனது எதிரி நாடுகளின் கணனிகளை இணைய வெளியூடாக ஊடுருவி அவற்றில் தனது வைரஸ்களை உட்புகுத்து வைத்துள்ளதாக நம்பப்படுகிறது. அந்த வைரஸ்கள் உறக்க நிலையில் இருக்கும். அமெரிக்காவிற்கும் அந்த நாட்டிற்கும் இடையில் போர் மூளும் போது அவை அங்கு பல கணனிகளை முடக்குதல், முக்கிய தகவல்களை அழித்தல், பல பொறிகளை இயங்காமல் முடக்குதல், தொடர்பாடல்களை ஒற்றுக் கேட்டல், தொடர்பாடல்களை முடக்குதல், தொடர்பாடல்களை திசைதிருப்புதல் இப்படிப்பல வற்றைச் செய்யும். அமெரிக்கா தற்போது 900 பேர் கொண்ட இணையவெளிப் படையணியைக் கொண்டுள்ளது. விரைவில் இது 4000 ஆக உயர்த்தப்படவிருக்கிறது.

பல நாடுகள் இணையப் படையணியைக் கொண்டுள்ளன.

Cyber Warriors Team எனப்படும் ஈரானிய கணனி நிபுணர்கள் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவின் கணனிகளை ஊடுருவினார்கள் என்ற செய்தி 2012 மே மாதம் வெளிவந்திருந்தது. அதுமட்டுமல்ல ஈரானில் இருந்து அமெரிக்காவின் பிரபல வங்கிகளையும் இணையவெளியூடாக ஊடுருவி தகவல் அழிப்புக்கள் செய்ததாகவும் செய்திகள் வெளி வந்திருந்தன. பிரித்தானியா ஜேர்மனி போன்ற நாடுகள் தம்மிடம் இணையப் படையணி இருப்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டன.

மும்மர் கடாபியைப் பதவியில் இருந்து நீக்கும் படை நடவடிக்கையின் போது லிபிய விமான எதிர்ப்பு முறைகளை இணைய வெளியில் ஊடுருவி அழிக்கும் திட்டம் நேட்டோ நாடுகளால் பரிசீலிக்கப்பட்டது. பின்னர் அதேமுறையை சீனா அல்லது இரசியா வேறு இடங்களில் மேற் கொண்டு தமது செய்கைகளை நியாயப்படுத்தலாம் என்பதால் கைவிடப்பட்டது. இஸ்ரேலிடமும் மிகத் திறமையாகச் செயற்படக்கூடிய இணையவெளி ஊடுருவிப் படைகள் இருக்கின்றன.

மரபு வழிப்படைகள் எல்லைகளைத் தாண்டுவது பெரும் சிரமம். ஆனால் இணைய வெளிப் படைகள் எல்லைகளை இலகுவில் தாண்டி விடுகின்றன.

இணைய பணயக் கைதிகளாக தரவுகள்

சி.என்.என் செய்திச் சேவை 2013-ம் ஆண்டு இணையவெளிப் போராட்டங்களுக்குரிய ஆண்டாக அமையும் என்று தெரிவித்தது. போராளி இயக்கங்கள் மட்டுமல்ல திருடர்களும் இணையத்தில் புகுந்து கணனிகளைத் தம்வசப்படுத்தி தகவல்களை பணயக் கைதிகளாக்கி தமக்கு உரிய பணம் கொடுக்காவிடில் முழுத் தகவல்களையும் அழித்து விடுவதாக மிரட்டும் சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன.

தமிழர்களும் ஒரு இணையவெளிப் படை அமைக்கலாமா?

தமிழர்கள் இலகுவாக அமைக்கக் கூடிய ஒரு படைப்பிரிவு இருக்குமானால் அது இணைய வெளிப் படைப்பிரிவுதான். இதன் மூலம் எம்மிடையுள்ள துரோகிகள் யார் உண்மையான தமிழின உணர்வாளர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளவும் உதவும்

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

Vacancy for Business Development Managers

Established Accounting Practice with Aggresive plan for expansion, looking for Enthusiastic motivated highly talented business development managers. They should have a good networking with people particulary in our community.

Role: Finding new accounting clients and Developments

Remuneration

* *Only Commission based on finding clients*
* *Bonus based on additional performance*
* *Huge potential for bright candidates*
* *Expenses reinbursement*

* Subject to terms & conditions

Please contact with your brief summary to info@ssquareacccounts.co.uk - 07950911292

Mega Engineers Ltd.

80, Lathom Road, East Ham, London. E6 2dx.

Reason to choose us

- Free quotation
- Professional and clean work
- Exceptional attention to details
- Excellent quality and reasonable prices
- Customer satisfaction

We provide complete solution for any type of house projects such as

- **Preparing Architectural and Structural drawing**
- **Plumbing and repairs**
- **All type of Planning application**
- **Complete House extension and roof loft conversion**
- **Interior or exterior painting and decorating**
- **Wallpaper stripping & wallpapering**
- **Woodwork, fence and shed painting**
- **Plastering - Renovating - Tiling**

T: 020 8586 7055

All our work quoted and carried out by our experience professional structural engineer.

www.megaengineers.co.uk
info@megaengineers.co.uk

சினிமா

எவ்வளோ டபுள் ஹிரோ திரைப்படங்கள் பார்த்து இருப்போம். ஆனால், நிச்சயம் தமிழ் சினிமாவில் இப்படி ஒரு டபுள் ஹிரோ திரைப்படம் பார்க்கவே முடியாது. படத்தில் விக்ரம், ஜீவா இருவருமே ஒரு காட்சியை தவிர, வேறு எங்குமே சந்தித்து இருக்கமாட்டார்கள். ஆனால், அவர்களை மையபடுத்தியதாகத்தான் திரைப்படம் இருக்கும்.

ஒரு கதை 1999ம் ஆண்டில் மும்பையில் நடக்கும். மற்றையது, 2010ல் கோவாவில் நடக்கும் கதை. இரண்டு கதை களங்களையும் வேறுபடுத்தி கையாள வேண்டிய சூழ்நிலையில் கையாண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே, 12B போன்ற திரைக்கதைகள் மக்களுக்கு புரியாமல், தோல்வியடைந்தவை. அந்த வகைக்குள் இதுவும் அடங்கி போகும் என்றே எதிர்பார்க்கலாம். கதை என்று பார்த்தால், படத்தில் எதுவுமே இல்லை என்று முழுமையாக சொல்லி விட முடியாது. இருப்பதே ஒரு குட்டி கதை. எனவே, இப்படியே தொடர்ந்து சொல்லப்போனால், இந்த பந்திலேயே சொல்லிவிடலாம். எனவே, அதை தவிர்த்து விடுவோம்.

படத்தை இயக்கியிருப்பவர் பியேஜ் நம்பியார். மணிரத்தினத்தின் உதவியாளர் என்று வேறு சொன்னார்கள். படத்தை பார்க்க போகும் போது கூட, குருவை மிஞ்சிய சீடன் என்று, சொன்னார்கள். அந்த அர்த்தம் படம் பார்த்த பிறகுதான், அவர் அவர் பார்வையை பொறுத்து விளங்கும். படத்தில் அடுத்த சிறப்பம்சம், படத்தில் 6 இசைய மைப்பாளர்கள் என்று போட்டு இருந்தார்கள். ஒரு வேளை, ஒவ்வருவரும் தங்கள் திறமையை ஒவ்வொரு பாடலில் வழங்க, 6 வித்தியாசமான ஹ்ட் பாடல்களை பெறலாம் என்றே எண்ணத்தில் 6 இசையமைப்பாளர்களை படத்துக்கு அழைத்து இருப்பார்கள் போல, ஆனால், இறுதியில், மனதில் நிற்பது விக்ரம் குரலில் மரியா பிட்சாச்சே மற்றும் கார்த்திக் குரலில் மனமே என்கிற பாடல்கள் மட்டுமே! மற்றபடி, எதுவுமே ஈர்க்கவில்லை.

படத்தை கொஞ்சமாவது பார்க்க வைத்திருப்பது ஒளிப்பதிவாளர்கள்தான். இன்றைய கோவா மற்றும் அன்றைய மும்பை ஆகியவற்றை சிறப்பாக, கண்ணுக்கு குளிர்ச்சியாக படமாக்கி இருந்தார்கள். ஜீவா வறுமையில் விழுந்த கிட்டார் கலைஞன் என்பதை காட்டுகின்ற ஷோட்களின் உருவாக்கம் என்னவோ, இயக்குனர் கை வண்ணமாக இருந்தாலும், அதற்கு வடிவம் கொடுத்து திருப்பவர்கள் ஒளிப்பதிவாளர்தான். படத்தில் இன்னு மொரு விஷேடம் இயக்குனரை தவிர, மற்ற வேலைகளுக்கு எல்லாம் ஒன்றுக்கு மேற்படவர்களையே பயன் படுத்தி இருக்கிறார்கள். இயக்குனர் வேலைக்கும் இன்னு மொருவரை சேர்த்து கொண்டிருக்கலாம்.

திரைப்படத்தில் எக்கசக்கமான நடிகர்கள் பட்டாளமே இருக்கிறது. ஹிந்தி மற்றும் தமிழில் திரைப்படத்தை வெளியிடுவதால், இரேண்டிலுமே தெரிந்த முகங்களாக பார்த்து படத்துக்குள் உள்வாங்கி இருக்கிறார்கள்.

நாசரின் நடிப்பு சிறப்பாக இருக்கிறது. விக்ரம் என்னை பொறுத்தவரை வீணாக்கபட்டு இருக்கிறார் என்றே சொல்லலாம். நடிக்க கூடிய ஒரு நடிகருக்கு படம் முழுக்க நடிக்காமலே இருக்க வேண்டும் என்கிற அடிப்படையிலான ஒரு கதாபாத்திரம் விக்ரமுக்கு, அதுபோல, நடிக்க வேண்டிய கதாபாத்திரம் ஜீவாவுக்கு, இருவருமே சிறப்பாக செய்து இருக்கிறார்கள். இவர்களை தாண்டி, நிறைய பேர் இருந்தாலும், விக்ரமின் இறந்த அப்பாவாக வருபவர் மனதில் நிற்கிறார். நல்லாவே, நடித்து இருக்கிறார்.

படத்தில் வாய்பேச முடியாத அழகியாக வரும் ஹிந்தி நடிகையின், நடிப்பும் அபாரம்! மிக சிறப்பாக, இயல்பாக நடித்து இருக்கிறார். பாராட்டபட வேண்டியவர். படத்தில் பல இடங்களில் சோர்ந்து போகும்போது, ஆவியான இவரும் விக்ரமும் பேசிகொள்ளும் இடங்கள்தான் உங்களை காப்பாற்றும். அதுபோல, ஜீவாவின் கதைக்களம் மிகசிறப்பாக செதுக்கபட்டிருக்கிறது, ஜீவாவுக்கு ஆறுதல் கூறும் கணவனை இழந்த கதாபாத்திரம் ஒன்று, படத்தில் இருக்கிறது. கொஞ்சம் மீறினால் அந்த காட்சிகளின் அர்த்தபடுத்தல் வேறுமாதிரியாகிவிடும் என்ற நிலையில், மிகசிறப்பாக காட்சிபடுத்தி இருக்கிறார்கள்.

பியேஜ்நம்பியார்-சைத்தானைப்பார்த்துவிட்டுமீண்டும் ஓர் விறுவிறு படத்தை தருவார் என்று நம்பினால் ஓர் வித்யாச முயற்சியை செய்திருக்கிறார். ஓர் இயக்குனராய், தயாரிப்பாளராய் இவர் செய்த முதல் தவறு இப்படத்தை தமிழில் டப் செய்தது. இதனால் ஜீவா, சியானுக்கு ஏற்கனவே சரிந்திருக்கும் மார்கெட் மீண்டும் அதள பாதாளத்துக்கு போய்விடும் அபாயம் உள்ளது. விக்ரம் எபி சோடில் கதைக்குள் வர மிகுந்த நேரம் ஆவதும் ஓர் மைனஸ். அதுவரை விக்ரம் குடிக்கிறார்.. குடிக்கிறா.. குடிக்கிற.. குடிக்கி..... கொண்டேயிருக்கிறார்.

காட்சி, காட்சியாக சொல்லப்போனால், அழகான திரைப்படம்தான் டேவிட். ஆனால், தமிழ் ரசிகர்கள் ரசிக்கின்ற அளவுக்கு, அவர்களை ஈர்க்க கூடிய வகையில் கதையை புதிய களத்தில் அமைக்க தவறிவிட்டார் பிஜேய் நம்பியார். ஹிந்தியில், மூன்று டேவிட்களை மையபடுத்தியதாக படத்தை உருவாக்கி இருக்கிறாராம். அதையும் முடிந்தால் பார்த்து பிறவி பயனை பெறுங்கள். ஆனால், தமிழில் டேவிட் எல்லோரையும் கவரக்கூடிய வகையில், அமைய பெறவில்லை என்பது, ஏமாற்றமே!

சொல்ல மறந்துவிட்டேன்! படத்தில், பல இடங்களில் கிறிஸ்தவ மதத்தை சுற்றியதாகத்தான் திரைப்படம் இருக்கும். காரணம், இரு ஹிரோகளுமே கிறிஸ்தவர்கள். பல இடங்களில் கிறிஸ்தவ மதத்துக்கு எதிரான நச்வசனங்களை வைத்து இருக்கிறார்கள். பார்க்கபோனால, தடைவிதிக்கபட வேண்டிய படம்தான். மதவெறியர்கள் யாருமில்லை என்பதால், நாங்கள் பார்த்துகொண்டிருக்கிறோம் என்று திரையில் பார்க்கும் போது, ஆச்சரியப்பட்டு போவீர்கள்.

டேவிட்- தமிழ் சினிமா ஏமாற்றபட்ட புதிய பாதை

- வாகீசன் (என்வலை-வலைப்பதிவு)

சினித்துளி

தயாராகும் கமலின் அடுத்த படம்!

'விஸ்வரூபம்' திரைப்படம் தடைகள் பல கடந்து வெளியாக இருக்கிறது. அதற்குள் கமல் நடிக்கும் அடுத்த படத்தினை பற்றிய செய்திகள் வரிசை கட்டுகின்றன. கமல் அடுத்து நடிக்கும் படத்திற்கு 'மூ' என்று தலைப்பிட்டு இருக்கிறாராம். மூன்று வேடங்களில் கமலே நடிக்க திட்டமிட்டு இருக்கிறாராம். இதனால் 'மூ' என்ற தலைப்பு சரியாக இருக்கும் என்று கருதுகிறாராம். விஸ்வரூபம் 2 படம் முடிவடைந்த பின் தான் 'மூ' படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படுமாம்.

ஏனெனில் 'விஸ்வரூபம் 2' சம்பந்தப்பட்ட சில காட்சிகளை ஏற்கனவே எடுத்து விட்டாராம் கமல். மீதமுள்ள காட்சிகள் விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. அதே வேகத்தில் படப்பிடிப்பை முடித்து விட்டு படத்துக்குள் செல்லுவதாய்த் தான் அவரது திட்டம் இருக்கிறதாம்.

அடுத்த ஆட்டத்துக்குத் தயார்!

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, தமிழ் சினிமாவில் படங்கள் எதுவும் இல்லாமல் இருந்தார் வடிவேலு. அரசியல் மாற்றத்திற்கு பிறகு மம்பட்டியான், மறுபடியும் ஒரு காதல் என்ற படங்கள் மட்டுமே வெளிவந்தன. அவரின் ரசிகர்களும் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர். பொறுத்தது போதும் பொங்கி எழு என்று மீண்டும் நடிப்பு களத்தில் இறங்க திட்டமிட்டு இருக்கிறார் வடிவேலு. மூன்று படங்களில் நடிக்க சம்மதம் தெரிவித்து இருக்கிறார்.

சிம்பு தேவன் இயக்கத்தில் இம்சை அரசன் 23ம் புலிகேசி இரண்டாம் பாகம், AGS நிறுவனம் தயாரிப்பில் யுவராஜ் இயக்கும் படம், கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ஒரு படம் என்று திட்டமிட்டு இருக்கிறார்.

'வனயுத்தம்' தடை நீங்கியது...!



"குப்பி", "காதலர் குடியிருப்பு" படங்களை இயக்கியவர் ஏஎம்ஆர். ரமேஷ். இவர் தமிழ், கன்னடத்தில் தயாரித்து இயக்கியுள்ள படம், "வனயுத்தம்". வீரப்பன் கதையான இதில் அர்ஜுன், கிஷோர், விஜயலட்சுமி உட்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு வீரப்பன் மனைவி முத்துலட்சுமி எதிர்ப்பு தெரிவித்து, சென்னை நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் எதிர்ப்புக்குப் போதிய ஆதாரங்கள் இல்லாதால் படத்திற்கிருந்த இடைக்காலத்தடையை நீதிபதி நீக்கியுள்ளார்.

தடைபோட்ட பவர் ஸ்ரார்!



மீண்டும் தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணி உறுதியாயிருக்கிறது இந்நிலையில் வெற்றிமாறன்Grass Root Film Company என்னும் பெயரில் ஒரு புதிய தயாரிப்பு நிறுவனம் தொடங்கியுள்ளார். அந்நிறுவனம் மூலம் சித்தார்த் நடிக்கும் உதயம் NH4 என்னும் படத்தினை தயாரித்து இருக்கிறார். கதை, திரைக்கதையை வெற்றிமாறனே எழுத, படத்தினை அவரது நண்பர் மணிமாறன் இயக்கி இருக்கிறார். படத்தின் முதலில் வைத்த தலைப்பு பிரச்சினையாகியிருக்கிறது.

முதலில் இப்படம் தேசிய நெடுஞ்சாலை என்று தான் பெயரிடப்பட்டது. ஆனால் பவர் ஸ்டார் ஏற்கனவே அத்தலைப்பை பதிவு செய்து வைத்து இருப்பதால் பெயர் மாற்றச் சொல்லி தடைவர பெயரினை மாற்றி விட்டார்களாம்.

Discover the world with...
Serendib Lanka Travels Ltd
COLOMBO SPECIAL
Kuwait.....£515
Emirates.....£520
Jet Airways.....£555
Qatar.....£565 Etihad..... £565
INDIA SPECIAL
Chennai...£420 Chennai(D)....£550
(Direct on British Airways)
Tirchi.....£565
CANADA SPECIAL
Toronto.....£510 Montreal.....£545
Ottawa.....£590
WORLD WIDE SPECIAL
Sydney.....£795
Melbourne.....£680
Oslo.....£155
Zurich.....£135
Geneva.....£125
New York.....£410
Washington DC.....£420
SRILANKAN AIRLINES SPECIAL
Colombo.....£550 Chennai.....£550
Tirchi.....£565 Kualalumpur.....£580
Singapore.....£580
All fares mentioned are low seasons including taxes
இலங்கை, இந்தியா, கனடா மற்றும்
அனைத்து உலக விமான பயணத்தையும்
குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
E.Mail : info@serendib-lanka.co.uk
ATOL 9667 PROTECTED
IATA

Lycamobile

Call the world for less



Sri Lanka Favourite

Get **1500** minutes

To call your favourite Hutch Number

or

Get **1000** minutes

To call your favourite Sri Lankan Number (Landline or Mobile)

Just **£15**

Valid for 30 Days

To activate : Dial *139*7515*<SL number with country code># e.g. *139*7515*0094789555666#
Text 7515 <SL number with country code> to 3535 e.g. 7515 0094789555666 to 3535

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile Sri Lanka Favourite Number bundle ('the offer') inclusive allowances are for calls for up to three subscribed Lycamobile numbers in the UK to one standard Sri Lankan landline or mobile number only. Other usage and usage in excess of your allowance will be charged at standard rates. The offer is valid for 30 days from the date of purchase. A customer may have up to three offers on their account at any one time. Any remaining allowance after the validity period will not be carried over into the next period should the customer renew their bundle. Customers will be charged for each sharers per 30 days. Lycamobile reserves the right to replace or amend the offer or these terms and conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle or adding or changing sharers. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that the offer is being used for non-commercial purposes. Promotional period: the offer is valid from 20th January 2013 until 31st March 2013. These Terms & Conditions are valid as of 20th January 2012.

Lycamobile
Call the world for less

Southall Travel

Redefining Travel

Why travel with Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED